# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை 20
பக்கங்கள்: 28

சுடர் 33 கதிர் 211 ஆனி 11ஆம் நாள் திங்கட்கிழமை 25 ஜூன் 2018 வள்ளுவர் ஆண்டு 2049


## ஒட்டுசுட்டானில் தவறான முடிவெடுத்து சிறுமி சாவு

முல்லைத்தீவு, ஜூன் 25
ஒட்டுசுட்டான் தொட்டியடிப் பகுதியில் 16வயதுச் சிறுமி தவறான முடிவு எடுத்து உயிரிழந்துள்ளார். கேதீஸ்வரன் மதுசுதா என்ற சிறுமியே, தவறான முடிவு எடுத்து உயிரிழந்த

>> 25

## பலாமரத்திலிருந்து வீழ்ந்தவர் சாவு

ஒட்டுசுட்டானில் சம்பவம்

முல்லைத்தீவு, ஜூன் 25
ஒட்டுசுட்டான் சிவநகர் பகுதியில் பலா மரத்தில் இருந்து வீழ்ந்த குடும்பத் தலைவர் உயிரிழந்துள்ளார்.

>> 06

# புலிகளின் காலத்தில் முன்வைத்த அரசியல்தீர்வு முன்மொழிவுகளிலிருந்து அரசு பின்வாங்குகிறது

பன்னாட்டுச் சமூகம் கவனத்திலெடுக்கவேண்டும் என்கிறார் எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன்

யாழ்ப்பாணம், ஜூன் 25
தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு செயற்பட்ட காலத்தில் அரசியல் தீர்வு சம்பந்தமாக இலங்கை அரசுபல்வேறுமுன்மொழிவுகளைமுன்வைத்திருந்தது. ஆனால் இன்று அரசு அதிலிருந்து பின்வாங்குகின்றது. இதனைப் பன்னாட்டுச் சமூகம் கவனத்தில் எடுக்கவேண்டும். அதனைப் புரிந்து கொள்ள வேண்டும். இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனின் உரைகள் அடங்கிய நூல் வெளியீட்டு விழா வீரசிங்கம் மண்டபத்தில் நேற்று இடம்பெற்றது. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறி

>> 25

# தமிழ்த் தலைவர்கள் பிரிவது மக்களின் அழிவுக்குச் சமன்

ஒற்றுமையே அவசியம் என்று விக்கி முன்னிலையில் இடித்துரைத்தார் சம்பந்தன்



யாழ்ப்பாணம், ஜூன் 25
தெற்கில் யார் ஆட்சி பீடத்துக்கு வரவேண்டுமானாலும் தமிழ் மக்களுடைய ஆதரவைப் பெறவேண்டும். தமிழ் மக்களுடைய ஆதரவையும் பெற்றால்தான் நாங்கள் ஆட்சிக்கு வரலாம் என்று மகிந்தவும் கூறியிருக்கின்றார். அதனை நாங்கள் பாதுகாப்பதற்கு ஒற்றுமையாக - ஒருமித்து நின்று செயற்பட வேண்டும். அதைவிடுத்து நாங்கள் பிரிவோமேயானால் எமது மக்களை நாங்களே அழித்ததாகிவிடும். அதற்கு நாங்

>> 06

## புலிகளின் போராட்டம் நீதியானது - நியாயமானது

பயங்கரவாதிகளென வல்லரசுகள் அழித்தன என்கிறார் சம்பந்தன்

யாழ்ப்பாணம், ஜூன் 25
தமிழீழ விடுதலைப் புலிகள் எமது மக்கள் சார்பாக மக்களுடைய உரிமைகளுக்காக மிகவும் தீவிரமான ஆயுதப் போராட்டத்தை நடத்தினார்கள். அந்த முயற்சியில் அவர்கள் வெற்றி பெறவில்லை. ஆனால் அந்த முயற்சியில் நீதி இருந்தது. நியாயம் இருந்தது. அதை எவரும் மறுக்க முடியாது. தமிழ் மக்களுடைய் பிரச்சினை தீர்க்கப்பட வில்லை. அவர்களுடைய உரிமைகள் வழங்கப்படவில்லை. உரித்துக்கள் வழங்கப்படவில்லை என்ற அடிப்படையில் ஆயுதப் போராட்டம் நடத்தப்பட்டது. இதை எல்லோரும் ஏற்றுக் கொண்டார்கள். பன்னாட்டுச் சமூகம் கூட ஏற்றுக் கொண்டது.

>> 25

## ஆக்கிரமிப்பை எதிர்க்க ஒற்றுமை அவசியம்

பேராசிரியர் சொர்ணராஜா தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 25
நாம் ஒற்றுமையாக இருக்கவேண்டும். அதைப் பேணிக் காக்கவேண்டும். எமது ஒற்றுமையைத் தொடர்ந்தும் தக்க வைத்துக் கொள்ளவேண்டும். அப்போதுதான் எம்மீதான ஆக்கிரமிப்புக்களை எதிர்த்துப் போராடலாம். இவ்வாறு சிங்கப்பூர் பல்கலைக்கழக சட்டப் பேராசிரியர் மு.சொர்ணராஜா தெரிவித்தார்.
வடக்கு மாகாண முதலமைச்சரின் உரைகள்

>> 25

## கொள்கை அடிப்படையிலேயே கட்சிகளின் ஒற்றுமை அவசியம்

சம்பந்தனின் கருத்துக்கு விக்னேஸ்வரன் பதில்



யாழ்ப்பாணம், ஜூன் 25
அரசியல் ரீதியாக எமது எல்லாக் கட்சிகளின் ஒற்றுமையையே தமிழ் மக்கள் விரும்புகின்றார்கள். ஒற்றுமையானது கொள்கை ரீதியிலேயே அமைய வேண்டும். தம்பி பிரபாகரன் தனது இயக்கத்துக்கு எதிராக நடந்து கொண்ட கட்சிகள் பலவற்றைக் கூட ஒன்று சேர்த்து அரசியல் கட்சியை உருவாக்கினார். அப்போது கூட்டமைப்புக்குள் உள்வாங்கப்பட்ட கட்சிகள் சில இன்று வெளியிலே

>> 06

## விக்கியின் புத்தக வெளியீட்டில் டக்ளஸ்

யாழ்ப்பாணம், ஜூன் 25
வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனின் உரைகள் அடங்கிய, 'நீதியரசர் பேசுகிறார்' என்ற நூல் வெளியீட்டு நிகழ்வில் ஈ.பி.டி.பி.யின் செயலர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் அந்தக் கட்சியிலிருந்து

>> 06

## யாழ்.பல்கலையில் நேற்றுக் கத்திக்குத்து

சிங்கள மாணவர்கள் வைத்தியசாலையில்

யாழ்ப்பாணம், ஜூன் 25
யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தில் சிங்கள மாணவர்கள் குழுக்கள் இடையில் ஏற்பட்ட மோதலில் கத்திக் குத்தில் காயமடைந்த இருவர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.
மதவாச்சிய்யச் சேர்ந்த சுலித் சத்துருவான் (வயது -26), அநுராதபுரம் நகரைச் சேர்ந்த சத்துருவன் திலகரத்ன (வயது-25) இருவருமே காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.
சத்துருவன் திலக

>> 23

## கொள்கை அடிப்படையிலேயே கட்சிகளின் ஒன்றிணைவு தேவை

சுரேஷ், ஆனந்தனும் வலியுறுத்து

>> 23

## சிறுத்தைப் புலியைக் கொன்ற சம்பவத்தில் இருவர் கைது

29ஆம் திகதி வரை மறியல்

கிளிநொச்சி, ஜூன் 25
கிளிநொச்சி அம்பாள்குளத்தில் சிறுத்தை கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பில் நேற்றுமுன்தினம் இரவு ஒருவர் கைது செய்யப்பட்டதுடன், நேற்றுக் காலை கிளிநொச்சி

>> 25

## பௌத்த தர்மத்துக்கு முற்றிலும் முரணானவை ஹிட்லரின் கொள்கைகள்

அஸ்கிரிய பீட அனுநாயக்க தேரரின் உரைக்கு மைத்திரி, ரணில் கடும் கண்டனம்

கொழும்பு, ஜூன் 25
ஹிட்லரின் கொள்கைக்கும், பௌத்த தர்மத்துக்குமிடையிலான தொடர்பு தான் என்ன? ஹிட்லர் வழி நடப்பதானது பௌத்த தர்மத்துக்கு எதிரான செயலாகும் என்று தெரிவித்துள்ளார் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரம

>> 25

# பட்டறிவுகளின் பின்னரும் தலைவர்கள் திருந்தவில்லை

பிளவுகளாலேயே இந்த நிலைமையில் நிற்கின்றோம் என்கிறார் வினோநோதராதலிங்கம்

>> 24




# விருது வழங்கும் நிகழ்வு

மட்டக்களப்பு,ஜீன் 25
கிழக்கு மாகாணத்தில் பல்வேறு துறைகளில் சாதனை படைத்தவர்களுக்கு, சாமஸ்ரீ விருது வழங்கப்பட்டது.
இந்த நிகழ்வு மட்டக்களப்பு வின்செண்ட் மகளிர் தேசிய பாடசாலை மண்டபத்தில் நேற்று நடைபெற்றது.
தேசியநல்லிணக்க இன ஒருமைப்பாட்டு பிரதியமைச்சர் அலிசாஹிர் மௌலானா தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த 75 பேர் சாமஸ்ரீ விருதுகளைப் பெற்றுக்கொண்டனர்.
இதில் மட்டக்களப்பு மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் என். சிறிநேசன் உட்பட பலர் கலந்துகொண்டனர்.
இலங்கையில் பல்வேறு துறைகளில் சாதனை படைத்து வருபவர்களுக்கு, அகில இனநல்லுறவு ஒன்றியம் 'வாழும்போதே வாழ்த்துவோம்' எனும் தொனிப்பொருளில் விருதுகளை வழங்கி கௌரவித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ந,ரி4)

# ஊழலில்லாத அமைச்சை உருவாக்குவதே இலக்கு

## பிரதி அமைச்சர் காதர் மஸ்தான் தெரிவிப்பு




வவுனியா, ஜூன் 25
அதிகாரம்செலுத்துபவன்தலைவன்அல்ல. பணிசெய்பவனே உண்மையான தலைவன் என்று புனர்வாழ்வு மீள்குடியேற்ற வடக்கு அபிவிருத்தி பிரதி அமைச்சர் காதர் மஸ்தான் தெரிவித்தார்.

மீள்குடியேற்ற புனர்வாழ்வு, வடக்குஅபிவிருத்திபிரதிஅமைச்சராகப் பதவியேற்ற காதர் மஸ்தானை வரவேற்கும் நிகழ்வு நேற்றுவவுனியாவில்நடைபெற்றது.
வவுனியா வர்த்தக சங்கம் மற்றும்பொதுஅமைப்புகள்இதனை ஏற்பாடு செய்திருந்தது. குருமன்காடு கலைமகள் மைதானத்தில் வர்த்தக சங்க செயலாளர் கோ. சிறிஸ்கந்தராஜா தலைமையில் நிகழ்வுகள்நடைபெற்றன.
நிகழ்வில் சர்வ மதத்தினர், அரச தலைவரின் இணைப்பு செயலர் அபயகுணசேகர,வடக்குமாகாண சபைஉறுப்பினர்ம. தியாகராஜா, அரசதலைவரின்வன்னிமாவட்ட இணைப்பாளர்வாசல,வவுனியா மருத்துவனைப் பணிப்பாளர் கு. அகிலேந்திரன், வவுனியா மாவட்ட ஐக்கிய தேசியக் கட்சி அமைப்பாளர்கருணாதாச,தெற்கு தமிழ்பிரதேசசபைஉபதலைவர் வே. மகேந்திரன், வவுனியாநகர சபை உபதவிசாளர் குமாரசாமி, அமைச்சரின்குடும்பஉறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.
கண்டி வீதியில் உள்ள சுதந்திரக் கட்சியின்அலுவலகத்தில்இருந்து திறந்த வாகனத்தில் அழைத்து வரப்பட்ட பிரதி அமைச்சர் வவுனியா கந்தசுவாமி ஆலயத்தில் நடைபெற்றசிறப்புவழிபாடுகளில் கலந்துகொண்டனர். நகரப் பெரியபள்ளிவாசலிலும்வழிபாடுகள் நடைபெற்றன. அதன்பின்னர் குருமன்காட்டுச் சந்தியில் இருந்துகலைமகள்விளையாட்டு மைதானம்வரை ஊர்வலமாக அழைத்துச்செல்லப்பட்டார்.
அதில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் தெரிவித்தாவது:
மீள்குடியேற்றச்செயற்பாடுகளை மேற்கொள்வதற்குசரியானபிரதி அமைச்சு இல்லாத காரணத்தாலேயே அரச தலைவர் என்னை நியமித்தார். ஊழல் இல்லாத செயற்றிறன்மிக்கவடக்குக்கான அமைச்சராக அதைச் செயற்படுத்தவேண்டும். இந்த அமைச்சனூடாக ஒரு நேர்மையான சூழ்நிலையைஏற்படுத்துவதற்குஉங்களுடையஆதரவைஎதிர்பார்த்து நிற்கின்றேன்.
அதிகாரம் செலுத்துபவன் தலைவன் அல்ல பணி செய்பவனே உண்மையான தலைவன் என்று சான்றோர்கள் கூறி இருக்கிறார்கள் அந்த ஒரு நிலையை நாங்கள் ஏற்படுத்தவேண்டும். அரசியல் வாதிகளைக் கண்டு பயப்படும் நிலையை மாற்ற வேண்டும்-என்றார். (ந-110)

# வேலை வாய்ப்புக்களில் தமிழருக்கு முன்னுரிமை

## வட மாகாண சபை உறுப்பினர் தியாகராசா கோரிக்கை

வவுனியா, ஜீன் 25
தமிழ்மக்களுக்கும்வேலைவாய்ப்புக்களில் முன்னிரிமைவழங்கவேண்டும்என்றுதெரிவித்துள்ளார் வடக்கு மாகாண சபை உறுப்பினர் ம. தியாகராஜா.
மீள்குடியேற்ற புனர்வாழ்வு, வடக்கு அபிவிருத்திபிரதி அமைச்சராகப்பதவியேற்றகாதர் மஸ்தானை வரவேற்கும் நிகழ்வு நேற்று வவுனியாவில் நடைபெற்றது.
அந்தநிகழ்வில்கலந்துகொண்டு உரையாற்றும்போதே வடக்கு மாகாண சபை உறுப்பினர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது:
எமது மக்களுக்குக் குடிக்கத் தண்ணீர் இல்லை, வாழ்வதற்கு இடமில்லை, மின்சாரமில்லை குப்பி விழக்குகளிலே படித்து கொண்டிருக்கிறார்கள். தமது கல்வியை மேப்படுத்த முடியாத நிலையில் இருக்கிறார்கள்.
வன்னியில்இளைஞர்கள்வேலைவாய்ப்புக்களின்போது புறக்கணிக்கப்படு கின்றனர். இதுவரை காலமும் சரியான முறையில் அவை வழங்கப்படவில்லை. அனைத்து அரசுகளும்எம்மக்களைஓரம்கட்டியவரலாறுகளை நாம் கண்டிருக்கின்றோம்.
நான் வெளிப்படையாக சொல்கிறேன் எமது தமிழ்இளைஞர்களுக்கும்வேலைவாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுப்பதற்குப் பிரதி அமைச்சர் முன்னிற்க வேண்டும் என்று கோருகின்றேன்.
அவரது சேவை அனைத்து மக்களுக்கும் அளப்பரியதாகவும்முன்னுதாரணமாகவும் இருக்கவேண்டும் என்பதை இந்த சந்தர்ப்பத்திலே கூறிக்கொள்ள விரும்புகிறேன் - என்றார். (ந-110)


யாழ். நீர்வேலி சவாரித் திடலில் மாட்டு வண்டிச் சவாரிப் போட்டி நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. (37)

## எமது இனத்தின் புல்லுருவிகளும் வரலாற்றை மாற்றியமைத்துவிட்டார்கள்

### சிறிதரன் எம்.பி. தெரிவிப்பு

கிளிநொச்சி, ஜீன் 25

கடந்த அரசோடு இருந்த எமது இனத்தின் புல்லுருவிகளும் சிங்கள அரசுவிரும்பியதுபோன்று கிளிநொச்சி மண்ணின் வரலாற்றை மாற்றி எமது இனத்துக்கு பெரும் துரோகம் இழைத்திருக்கிறார்கள். இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின்நாடாளுமன்றஉறுப்பினர்சிவஞானம்சிறிதரன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சியில்நேற்று இடம்பெற்ற கிளிநொச்சி மண்ணில் இருந்து ஆன்மிக சமூகப்பணிகள் ஆற்றிய பெரியார்களின் சிலைகளை திறந்து வைத்து உரையாற்றுகையிலே நாடாளுமன்ற உறுப்பினர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

எமது இனம் இருப்பைத் தக்க வைப்பதற்காகவும் அரசியல் தீர்வுக்காகவும் இந்த மண்ணிலே 70 ஆண்டுகளுக்கு மேலாகபோராடிக்கொண்டிருக்கிறோம். சிங்கள அரசு எமது இனத்தின்வரலாற்றைஅழிப்பதற்குதிட்டமிட்டுசெயற்படுகிறது. குறிப்பாககடந்தஅரசுஎமதுமண்ணினுடையவரலாறுகளைமாற்றுவதில்கடும்முயற்சிகளைமுன்னெடுத்திருந்தது. கிளிநொச்சிமண்ணிலேடிப்போச்சந்தியில்உள்ளஇராணுவ நினைவுச்சின்னத்திலேபழமைவாய்ந்தகற்களைவைத்து அந்த நினைவுச் சின்னத்தை கட்டியெழுப்பியிருப்பதன் நோக்கம் தான் என்ன? இதற்குப் பின்னால், வரலாற்றை மாற்றி அவர்கள் தங்களுக்கு தேவையான வரலாற்றை எழுதசிங்கள அரசு விரும்புகிறது. அதற்கு நாம் ஒருபோதும் இடமளிக்கமுடியாது.

இவற்றை எல்லாம் கவனத்தில் எடுத்தே, எமது தலைவர் பாடசாலைகளில்தமிழீழவரலாறுஎன்கின்றபாடத்தைபாடசாலைகளில் அறிமுகப்படுத்தியிருந்தார்.

இவை மட்டுமல்லகடந்தஅரசோடுஇருந்தஎமதுஇனத்தின் புல்லுருவிகளும் சிங்கள அரசு விரும்பியது போன்று கிளிநொச்சி மண்ணின் வரலாற்றை மாற்றி எமது இனத்துக்கு பெரும் துரோகம் இழைத்திருக்கிறார்கள். எமது அரசியல்த் துறைப்பொறுப்பாளர்பிரிகேடியர்தமிழ்ச்செல்வன்சமர்க்கள நாயகன் பிரிகேடியர் பால்ராஜ் இன்னும் எத்தனையோ சமர்க்கள நாயகர்களை வைத்து அஞ்சலி செய்த கூட்டுறவாளர்மண்டபத்தை மகிந்தராஜபக்சவின்புதல்வன் திறந்து வைத்துள்ளதாக நினைவுக் கல்லில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இவை எல்லாம் எம் இனத்தின் புல்லுருவிகளின் ஆசிர்வாதத்துடனே நடைபெற்றிருக்கிறது.

மலையக மக்கள் முன்னணியினுடைய தலைவர் முன்னாள் அமைச்சர்பெரியசாமிசந்திரசேகரன்நிதி ஒதுக்கீட்டில் கட்டப்பட்ட மத்திய கல்லூரியின் பிரதான மண்டபம் தமது தேவைக்கு ஏற்றவாறு தங்களால் திறந்து வைக்கப்பட்டது எனநினைவுக்கல்லில்பெயர்களைசெதுக்கியிருக்கிறார்கள். இவை எல்லாம் எமது அடுத்த தலைமுறைக்கு எமது வரலாற்றை தெரியவிடாது தடுக்கவேண்டும் என்கின்ற நோக்கம் இருக்கிறது. எமது மண்ணில் இருந்து ஆன்மிக சமூகப் பணிகள் செய்த பெரியார்களின் சிலைகளை திறந்து வைப்பதோடு இல்லாமல் எமது மண்ணின் சரியான வரலாறுகளை எமது அடுத்த சந்ததிக்கும் கடத்தும் வகையில் எமது செயற்பாடுகள் அமையவேண்டும் - என்றார்.

நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரனின் பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீட்டில் மூன்று உருவச்சிலைகளும் அமைக்கப்பட்டன.

கரைச்சிப்பிரதேசசபியின்தவிசாளர்வேழமாலிகிதன்தலைமையில்இடம்பெற்றநிகழ்வில்வடக்குமாகாணசபைஉறுப்பினர்களான த.குருகுலராஜா, சு.பசுபதிப்பிள்ளை, ப.அரியரத்தினம், கரைச்சிப் பிரதேச சபையின் உறுப்பினர்கள் கரைச்சிப்பிரதேசசெயலகஉதவித்திட்டமிடல்பணிப்பாளர் அமல்ராஜ் பிரதேச சபையின் செயலர் கம்சநாதன் பிரதேச சபையின் உத்தியோகத்தர்கள் பொதுமக்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர். (5)





# ஓவியக் கலைக் கூடம் சாவகச்சேரியில் திறப்பு

தென்மராட்சி, ஜூன் 25

**வடக்கு மாகாணத்தில் முதன்முறையாக சித்திர பாட மாணவர்களின் சித்திர பாட அடைவு மட்டத்தை அதிகரிக்கும் நோக்குடன் சாவகச்சேரியில் அமைக்கப்பட்ட ஓவியக் கலைக் கூடம் நேற்றுத் திறக்கப்பட்டது.**

அமெரிக்கப்பல்கலைக்கழகசித்திரபாட பேராசிரியர் திருமதி ஜெனிபர் ஹேரத் கட்டடத்தைத்திறந்தார்.

சாவகச்சேரியைச்சேர்ந்தநிலஅளவையாளர் அமரர் ரி.பி.ஹன்ட் நினைவாக அவரது குடும்பத்தினர் இந்தக் கலைக் கூடத்தை அமைத்துள்ளனர்.

சித்திர பாட மாணவர்களின் அடைவு மட்டநிலையைஉயர்த்தவும்சித்திரபாட ஆசிரியர்கள் மற்றும் சிற்பக் கலைஞர்களை ஊக்குவிக்க கற்றல் கற்பித்தல் உபகரணங்களையும் பயிற்சிகளையும்வாண்மைவிருத்திச்செயலமர்வுகளையும் மேற்கொள்வதற்காக இந்தக் கலைக்கூடம் அமைக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

திருமதி இ. அழகரத்தினம் தலைமையில் நடைபெற்ற ஆரம்ப விழாவில் முதன்மை விருந்தினராக அமெரிக்க பல்கலைக்கழக சித்திரபாட பேராசிரியை ஜெனிபர் ஹேரத்தும், சிறப்பு விருந்தினராக வடமாகாண கல்வித் திணைக்களஉதவிக்கல்விப்பணிப்பாளர் சிவசிவாவும் கலந்து கொண்டனர்.

கலைக்கூட முன்பாக அமைக்கப்பட்ட அமரர்ரி.பீ.ஹன்ட்அவர்களின்உருவச் சிலையை நெல்சன் குணரத்தினம் மற்றும்மில்ரன்ஹன்ட்ஆகியோர்திரை நீக்கஞ் செய்தனர். கலைக்கூட கட்டடத்தின் பெயர்ப் பலகையை முதன்மை விருந்தினரும், ஓவியக்கலைக்கூடத்தை சிறப்பு விருந்தினரும் ஆரம்பித்து வைத்தனர்.

தரம்10 11வகுப்புகளில்சித்திர பாடம் கற்கும்மாணவர்களுக்கானசித்திரக்கலை என்னும்நூல்வெளியீடு இடம்பெற்றது.

கலைக்கூடத் திறப்பு விழாவையொட்டி வடமாகாணபாடசாலைகளின்மாணவர்களிடையே நடத்தப்பட்ட ஓவியப் போட்டியில்வெற்றிபெற்றமுதல்மூன்றுஇடங்களைப் பெற்ற மாணவர்களுக்கு முறையே10ஆயிரம்ரூபா7ஆயிரம்ரூபா 4ஆயிரம் ரூபா பணப்பரிசில்களும் கற்றல் உபகரணங்களும் வழங்கப்பட்டன. போட்டியில் கலந்து கொண்ட 95 மாணவர்களில் 92 பேருக்கு பணப்பரிசில்களும்கற்றல்உபகரணங்கள்வழங்கப்பட்டன. நவீல்ட் பாடசாலை மாணவர்களின்சித்திரபாடமேம்பாட்டுக்கான நிதி உதவியும் அமரரின் குடும்பத்தினரால்வழங்கப்பட்டன. (ந-9,159)

# திருவாசக அரண்மனை நேற்றுத் திறந்து வைப்பு

யாழ்ப்பாணம், ஜீன் 25

நாவற்குழியில் கருங்கற்களால் அமைக்கப்பட்ட திருவாசக அரண்மனை நேற்றுத் திறந்து வைக்கப்பட்டது.

விநாயக வழிபாட்டுடன் தவில் நாதஸ்வர இசையுடன், கருங்கற்களில்பொறிக்கப்பட்ட658பாடல்களைகொண்ட, 11மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டதிருவாசகப் பாடல்களை உள்ளடக்கிய அரண்மனை விருந்தினர்களால் திறந்து வைக்கப்பட்டது.

வாசகம் பொறிக்கப்பட்ட அரணின் ஒவ்வொரு தூண்களின் இடை வெளியிலும் நான்கு சிவலிங்கம் மற்றும் நான்குமணிகள்வீதம்108சிவலிங்கமும்108 மணிகளும் அமைக்கப்பட்டுள்ளன. தட்சணா மூர்த்திக்கு அமைக்கப்பட்ட ஆலயத்தின்வழிபாட்டைதொடர்ந்து





21அடியில்தங்கமுலாம்பூசப்பட்டபாம்புச்சிவலிங்கம் இருக்கும், கருங்கல்லில்அமைக்கப்பட்டதேர்திறந்து வைக்கப்பட்டது.

அரண்மனை உருவாக்குவதற்கு பலவழிகளும் பாடுபட்ட சிற்பக்கலைஞர், கட்டடக் கலைஞர், செப்பு வேலை கலைஞர், கருங்கல் வேலைப்பாடுக் கலைஞர்கள் பொன்னாடை போர்த்தி பதக்கம் வழங்கி மதிப்பளிக்கப்பட்டனர்.

கருங்கற்களால் பொறிக்கப்கப்பட்ட எழுத்து வேலைகளை செய்தவர் மாவீரர் துயிலும் இல்லங்களின் பெயர்களைகருங்கல்லில்பெயர்பொறிக்கும்இளைஞன் என்பது குறிப்பிடத்தக்கது. திருவாசக அரண்மனை நூலும் வெளியிடப்பட்டது. இந்த நூலை சிவபூமி அறக்கட்டளையின் பொருளாளர் குகதாசன் வழங்கி வைக்க நல்லை ஆதீன முதல்வர் பெற்றுக்கொண்டார்.

நிகழ்வில்விருந்தினர்களாகஆஸ்திரேலியாமருத்துவநிபுணர் கலாநிதி மனமோகன் மருத்துவ கலாநிதி சிவகௌரி தம்பதியினர், கொழும்புமனிதநேய அறக்கட்டளைதலைவர் அபிராமி கயிலாசபிள்ளை, கம்பவாரிதி இ.ஜெயராஜ், சிதம்பரம் அண்ணாமலை பல்கலைக் கழக பேராசியர் தி.பாலசந்தர் தேசிகர் ஆகியோர் கலந்து கொண்டனர். (5,7)

# கோவில் திருவிழாவில் தீ 20 பக்தர்கள் படுகாயம்

மட்டக்களப்பு,ஜூன்25

திருவிழாவில் சுழற்றிய தீப்பந்தில் இருந்து நெருப்பு வீழ்ந்ததில் பக்தர்கள் பலர் படுகாயமடைந்துள்ளனர்.

இந்தச்சம்பவம்,நேற்றுமுன்தினம்இரவுஉன்னிச்சைப் பகுதி மாரியம்மன் ஆலய வருடாந்த உற்சவத்தின் போது ஏற்பட்டுள்ளது.

சம்பவத்தில் படுகாயமடைந்த 20 பேரும் கரடியனாறு மருத்துவமனையிலும் அதில் இருவர் மட்டக்களப்புபோதனாமருத்துவமனையிலும் சேர்க்கப்பட்டுள்ளதாகஆயித்தியமலை பொலிஸார்தெரிவித்தனர்.

மட்டு ஆயித்தியமலை உன்னிச்சை7ஆம்கட்டை மாரியம்மன் ஆலய வருடாந்த உற்சவம் இடம் பெற்று வருகின்றது.

இந்த நிலையில் நேற்று இரவு அம்மன் வீதி உலா வரும்போது அதற்கு முன்னால் பக்தர் ஒருவர் தீப்பந்து சுழற்றிக் கொண்டிருந்தார். திடீரெனதீப்பந்தில் இருந்து நெருப்பு பக்தர்கள் மேல்வீழ்ந்துதீப்பற்றியது. அச்சமடைந்த பக்தர்கள், சிதறி ஓடினர். அங்கிருந்தவர்கள்தீப்பற்றியவர்களின் உடைகளைக்கழற்றி தண்ணீர்ஊற்றித்தீயைஅணைத்ததுடன் படுகாயமடைந்தவர்களைமருத்துவமனையில்சேர்த்தனர். விசாரணைகளை ஆயித்தியமலை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ந,ரி2)

விளம்பி வருஷ வீரமாகாளியின் சிறப்பம்சம்



விரைந்து ஓடும் குதிரைகள் வீரமாகாளியை சுமக்கிறது

விரைந்து ஓடும் குதிரைகளைப் பாரீர்
வீரமாகாளியை சுமந்து பாய்கிறது
இரந்து வேண்டி நிற்கும் பொழுதினில்
ஈழத்தமிழரின் தீர்வுக்கு செந்நிறக் குதிரை பாய்கிறது
சுரந்திடும் சுந்தரம் விஞ்சிடும் வண்ணையில்
சுந்தரிகாளி அஸ்வங்களில் அமர்ந்து வருகிறாள்
வளர்ந்திரும் துயரினை நிலத்தினில் ஒழித்திட
வாளுடன் நாயகி குதிரையில் வருகிறாள்

**மதுரகவி காரை. எம்.பி.அருளானந்தன்**

[இன்று (25.06.2018) திங்கட்கிழமை
வண்ணை வீரமாகாளியம்பாளின் 22 ஆம் திருவிழா]
குதிரை வாகனங்களில் வருகிறாள்.
அன்னதானம் வழங்கப்படும்.

கழிவுகளால் மாசடையும்

# உத்திரிக்கைக் குளத்தை பாதுகாக்கக் கோரிக்கை





**அளவெட்டி, ஜூன் 25**
**சுன்னாகம் பிரதேசத்தில் உள்ள நீரேந்தும் குளமான உத்திரிக்கைக் குளமும், அதன் கரையோரமும் பொலித்தீன் பைகளும் வெற்றுப்போத்தல்களாலும் குப்பை கூழங்கள் சேர்ந்த கழிவுகளாலும் நிறைந்து காணப்படுவதுடன் அவ்வப்போது துர்நாற்றமும் வீசுகிறது என்று மக்கள் கவலை தெரிவித்தனர்.**

அவர்கள் தெரிவித்ததாவது;
சூழல் மாசடையும் வகையில் கழிவுகளையும், வெற்றுப்போத்தல், அழுகிய மரக்கறிவகைகள், உணவகங்களில் பாவித்த லஞ்சீட் வகைகளையும், இறைச்சிக்காகவெட்டப்பட்டகோழிமற்றும் விலங்குக்கழிவுகளையும் பொதி செய்து குளத்தின் கரையிலும் வீதிஓரங்களிலும் கொட்டி விட்டுச் செல்கின்றனர். அவை நீர்வழிந்தோடும் துரிசுவழிகளில் (கதவுவழி) மண் அணை போல் திரண்டு மழை காலங்களில் அடைத்துவருவதால் நீர்வழிந்தோடும் குளத்தில் நீர் தேங்குகின்றது. இது கடந்த வருடம் காலபோக நெற்செய்கை செய்யப்பட்ட வயல்களில் நீர்தேங்கி பயிரழிவு ஏற்படக் காரணமாக இருந்துள்ளது. இவ்வாறான செயற்பாடுகள்தற்போதும்இடம் பெறுகின்றன. இது தொடர்பில் சம்பந்தப்பட்ட பிரதேச செயலகமும், பிரதேசசபையும்விவசாய சம்மேளம், கமக்கார அமைப்புக்கள், இந்தப் பிரதேச கிராம அலுவலகர், பிரதேச சுகாதாரப்பகுதி உத்தியோகத்தர்கள் கவனமெடுக்க வேண்டும். வழுக்கியவாறு வழிந்தோடும் போது இந்தக் குளத்தில் தங்கி குளத்தைச் நிரப்பிச் செல்வது வரலாறாகும். இந்த நிலையில் பொறுப்பற்ற முறையில் செயற்படாது சூழல் சுற்றாடல், சுகாதார நலன் மற்றும் விவசாயிகளின் நலனிலும் அக்கறை கொண்டு இந்தப் பிரதேசத்தை அதிகாரிகள் கண்காணிக்கவேண்டும். குப்பைபோடுபவர்களைசட்டநடவடிக்கைக்கு உட்படுத்த ஆவண செய்ய வேண்டும்என்றனர். (21.36)



இந்திய அரசின் உதவித் திட்டத்தின்கீழ் யாழ்ப்பாணம் திறந்த வெளியரங்க வளாகத்தில் யாழ்ப்பாணம்கலாசார மத்திய நிலையத்துக்கான கட்டடம் அமைக்கப்பட்டு வருகின்றது. நவீன வசதிகளைக் கொண்டதாக நிர்மாணிக்கப்படும் இந்த கலாசார மத்திய நிலையக்கட்டிடத்தின் 9 ஆவது மாடிக்கட்டுமானப் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன. (135)

## 'செயற்பட்டு மகிழ்வோம்' விளையாட்டு நிகழ்வு



யாழ்ப்பாணம்.ஜீன் 25
யாழ்ப்பாணம்சுதுமலைஎச்சாட்டிநாவலர் பாலர்பாடசாலையின் செயற்பட்டு மகிழ்வோம் விளையாட்டு நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை மாலை 3 மணியளவில் பாலர்பாடசாலையின் தலைவர் இ.பேரின்பநாயகம் தலைமையில் இடம்பெற்றது.
இந்த நிகழ்வின் முதன்மை விருந்தினராக வடமாகாணசபை உறுப்பினர் பா.கஜதீபன் கலந்துகொண்டு வெற்றி பெற்ற மாணவர்களுக்கான பரிசில்களை வழங்கி வைத்தார்.

## முகாமையாளர் சம்மேளனத்தின் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்.ஜீன் 25
யாழ்ப்பாணம்முகாமையாளர்சம்மேளனம் "வடமாகாண பொருளாதார அபிவிருத்திக்கு தகவல் தொழில்நுட்பத்துறை"பற்றியகலந்துரையாடல்நிகழ்வினை ஒழுங்கு செய்துள்ளது. இந்த நிகழ்வானது யூரோவில் மாநாட்டு மண்டபத்தில் நாளை மறுதினம் புதன்கிழமை மாலை 4.30 மணிக்கு நடைபெறவுள்ளது. இந்தக் கலந்துரையாடலில் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பநிறுவனத்தின்தலைவர் பேராசிரியர் ரோகான் சமரஜீவ கலந்து கொண்டு சிறப்புரை வழங்கவுள்ளார். ஆர்வலர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு ஒருங்கிணைப்பாளர் வி.நிரஞ்சன் தெரிவித்துள்ளார்.

## செயற்பட்டு மகிழ்வோம் விளையாட்டுக்கள் இன்று

தென்மராட்சி ஜுன் 25
யாழ்ப்பாணம் தென்மராட்சி கல்வி வலய ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கிடையிலான வலய நிலை செயற்பட்டு மகிழ்வோம் நிகழ்வுகள் மீசாலை வீரசிங்கம் ஆரம்ப வித்தியாலய மைதானத்தில் இன்று மதியம் 1.30 மணிக்கு நடைபெறும்.
வலயக் கல்விப் பணிப்பாளர் சு.சுந்தரசிவம் தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக வட மாகாண கல்வித் திணைக்கள ஆரம்ப உதவிக் கல்விப் பணிப்பாளர் சு.சண்முகராசா கலந்து கொள்வார் என அறிவிக்கப்பட்டுள்ளது. (9)

## குடமுழுக்கு

அளவெட்டி ஜீன் 25
காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரி ஸ்ரீபுவனேஸ்வரி அம்பாள் தேவஸ்தான குடமுழுக்கு நாளை மறுதினம் புதன்கிழமை காலை 10.51 மணி தொடக்கம் 11.26மணிவரையுள்ள சுபநேரத்தில் இடம்பெறவுள்ளது. (36)

## பொங்கல் விழா

யாழ்ப்பாணம், ஜீன் 25
மண்டைதீவுபூமாவடிபூம்புகார் அருள்மிகு ஸ்ரீ கண்ணகி அம்பாள் ஆலய வருடாந்த பொங்கல்விழா இன்று திங்கட்கிழமை நடைபெறவுள்ளது. முற்பகல்11மணிமுதல்பூசைகள் நடைபெற்று மாலை ஆறு மணிக்கு பொங்கல் நிகழ்வுகள் நடைபெறும். இந்த பூசைநிகழ்வுகள் நள்ளிரவு 12 மணிவரை நடைபெறும் என ஏற்பாடாளர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது. (114)



மட்டக்களப்பு ஏறாவூர்பற்றுப் பிரதேச சபைக்குட்பட்ட சனசமூக நிலையப் பிரதிநிதிகள் திக்கம் மத்திய சனசமூக நிலையத்துக்கு வருகை தந்து சனசமூக நிலையச் செயற்பாடுகளை அறிந்து கொண்டார்கள். திக்கம் மத்திய சனசமூக நிலைய முன்னாள் தலைவரும் பருத்தித்துறைப் பிரதேச சபையின்உபதவிசாளருமானகு.தினேஸ்செயற்பாடுகளைபற்றிஅவர்களுக்கு விளக்கமளித்தார். இதில்ஏறாவூர்பற்றுப்பிரதேசசபையின்உபதவிசாளர் க.இராமச்சந்திரன் மற்றும் ஓய்வுநிலை மன்னார் மாவட்டச் செயலர் வே.விசுவலிங்கம்ஆகியோரும்கலந்துகொண்டார்கள். (21.173)



வேலும்மயிலும்பவுண்டேசன்நிறுவனத்தில்கணினிக்கற்கை நெறியைநிறைவுசெய்தமாணவர்களுக்கானசான்றிதழ்வழங்கும்நிகழ்வுநிறுவனப்பொதுமுகாமையாளர்தே.சிவகுமாரசாமி தலைமையில் அண்மையில் இடம்பெற்றது. இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராகப் பருத்தித்துறை நகரசபைத் தவிசாளர் இருதயராஜா கலந்துகொண்டார்.

## மாதாந்த கொடுப்பனவுகள் பிரதேச செயலகத்தில்

யாழ்ப்பாணம்.ஜீன் 25
யாழ்ப்பாண பிரதேச செயலகஎல்லைக்குட்பட்டமூத்த பிரஜைகளுக்கானமாதாந்த கொடுப்பனவுகள் இன்று தொடக்கம்பிரதேசசெயலக பணிமனையிலுள்ளசமூக சேவைப் பகுதியில் வழங்கப்படவுள்ளதாக பிரதேச செயலர் பொ. தயானந்தன் தெரிவித்துள்ளார்.
இதுவரைகாலமும்அஞ்சல் அலுவலகங்களூடாக வழங்கப்பட்டுவந்தகுறித்த கொடுப்பனவுகள் அஞ்சல் திணைக்கள ஊழியர்களின் போராட்டத்தினால் தடைப்பட்டுள்ளமையால் இந்த மாற்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (135)



யாழ்ப்பாணம். மானிப்பாய் இந்துக்கல்லூரியின் மாணவ முதல்வர்களுக்கான சின்னம் சூட்டும் நிகழ்வு கல்லூரியின் அதிபர் தலைமையில் அண்மையில் இடம்பெற்றது.

## 'மூத்தோரே எங்கள் மூலதனம்' முதியோரை ஊக்கப்படுத்தும் கருத்தரங்கு

யாழ்ப்பாணம்.ஜீன் 25
யாழ்ப்பாணபிரதேசகலாசார அதிகாரசபையின் கலை கலாசார மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ் "மூத்தோரேஎங்கள்மூலதனம்"என்னும்பொருளில் மூத்த பிரஜைகளை (முதியோர்) ஊக்கப்படுத்தும் கருத்தரங்கு யாழ்ப்பாண பிரதேச செயலக மண்டபத்தில் நாளை செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறும்.
'உடலுள மேம்பாட்டுக்கு யோகா' என்னும் தலைப்பில் யோகாப் போதனாசிரியர் கலாபூசணம் ந. சிவனேஸ்வரராஜாவும் 'முதுமையிலும் இளமையுடன் வாழ்வோம்' என்னும் தலைப்பில் யாழ்ப்பாண மாவட்ட சித்த ஆயுள்வேத மருத்துவமனை அதிகாரி மருத்துவர் சி.சிவசுப்பிரமணியமும் கருத்துரைகளை வழங்கவுள்ளனர்.
பிரதேசத்தின் சமூக பண்பாட்டு விழுமியங்களைப்பேணிப்பாதுகாப்பதற்காக அயராது பணியாற்றிய மூத்தோரை ஆற்றுப்படுத்தும் இந் நிகழ்விலேயாழ்பிரதேசசெயலகபிரிவுக்குட்பட்ட மூத்தோரைதவறாதுகலந்துகொள்ளுமாறுஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (135)

## பன்னாட்டு போதைப்பொருள் எதிர்ப்பு தினம்

யாழ்ப்பாணம்.ஜீன் 25
வடபிரதேச நல்லொழுக்க சம்மேளனத்தின் ஏற்பாட்டில்சர்வதேசபோதைப்பொருள் எதிர்ப்பு தின நடைபவனியானது நாளைசெவ்வாய்கிழமைகாலை8.00 மணிக்கு சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயத்திலிருந்து ஆரம்பித்து சங்கானைபேருந்துநிலையத்தில் நிறைவடையவுள்ளது.
இந்தப் பேரணியில் மாணவர்கள், அரச பணியாளர்கள், சம்மேளனத்தின் தொண்டர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் பங்குபற்றவுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.

## இலக்கிய அணியின் கம்பன் விழா

சாவகச்சேரி, ஜீன் 25
யாழ்ப்பாணம் தென்மராட்சி இலக்கிய அணியின்கம்பன்விழாசங்கத்தானை தமிழ்க் கோட்ட அரங்கில் நாளை மறுதினம்புதன்கிழமைமாலை 5 மணிக்கு ஓய்வுநிலை பிரதிக் கல்விப் பணிப்பாளர் அ. அகிலதாஸ் தலைமையில் நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வில் அணியின் சான்றோர் மதிப்பளிப்பு நிகழ்வில் பேராசிரியர் க. கந்தசாமி, ஓய்வுநிலை அதிபர் சியாமளாகந்தசாமிஆகியோர் இவ்வருடத்தின்சான்றோராகத்தெரிவுசெய்யப்பட்டு மதிப்பளிக்கப்படவுள்ளனர்.
அத்துடன் தெல்லிப்பளை துர்க்கா தேவஸ்தான தலைவர் கலாநிதி ஆறு. திருமுருகன்கம்பன்கவிச்சுவை என்னும் தலைப்பில் எழிலுரை நிகழத்தவுள்ளார். அணியின் கம்பன் விழாவை யொட்டிய சிறப்பு பட்டிமன்றம் இடம் பெறவுள்ளது.
கம்பராமாயணத்தின் புகழுக்குப் பெரிதும் காரணமாக அமைவது அதில் பதிந்துள்ள அழகியலே அறிவியலே என்னும் தலைப்பில் சிறப்பு பட்டிமன்றம் கம்பவாரிதி இ.ஜெயராமை நடுவராகக் கொண்டு இடம் பெறும்.
இரா. செல்வவடிவேல் பரா. ரதீஸ்ஆகியோர்அழகியலே என்றும் பேராசிரியர்தி. வேல்நம்பிஅ. வாசுதேவா ஆகியோர் அறிவியலே என்றும் வாதிடவுள்ளனர்.
தென்மராட்சி இலக்கிய அணியினர் வருடாந்தம் திருவள்ளுவர் விழா பாரதியார்விழா ஔவையார் விழா கம்பன் விழா என்னும்நிகழ்வுகளைநடத்தி வருவது தென்மராட்சியின் தமிழ் வளர்ச்சிக்கு எடுத்துக் காட்டாக உள்ளது எனலாம். (9)

## கம்பன் கழகம் நடத்தும் யாழ்ப்பாணக்கம்பன்விழா

யாழ்ப்பாணம், ஜீன் 25
அகிலஇலங்கைக்கம்பன்கழகம்நடத்தும்யாழ்ப்பாணக் கம்பன்விழாஎதிர்வரும்29ஆம்திகதிவெள்ளிக்கிழமை தொடக்கம் முதலாம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை மூன்று நாள்கள் காலையும், மாலையும் இரு அமர்வுகளாகநடைபெறும். முதல்நாள்நிகழ்வுமாலைஆரம்பமாகும். காலை ஆமர்வு 9.30 மணி தொடக்கம் நல்லூர் கம்பன் கோட்டத்திலும், மாலை அமர்வு மாலை 4.30 மணிக்குநல்லூர்ஸ்ரீதுர்க்காதேவிமணிமண்டபத்திலும் இடம்பெறும்.
வெள்ளியன்று மாலை மங்கள நிகழ்வுகளுடன் ஆரம்பமாகி சிறப்பு நிகழ்வாக இலக்கிய அணிக்குழு 'ஊழின் பெருவலியைப்பெரிதும்உணர்த்தும்தலைமைப்பாத்திரம் எனும் தகுதி' என்றபொருளில் இடம்பெறும்.
சனிக்கிழமை காலை கவியரங்கம், உரையரங்கம் போன்றவையும் மாலையில் விருது-வழங்கலைத் தொடர்ந்து சிறப்புநிகழ்வாக பட்டிமன்றம் இடம்பெறும் ஞாயிறன்றுகாலையில்கவிநயஅரங்குஇடம்பெறும், நடுவர் 'கம்பவாரதி' இ. ஜெயராஜ். பொருள் 'கம்பநாடன் கவி'. மாலை நாடக அரங்கமும் வழக்காடு மன்றமும் இடம் பெறும்.

## திருட்டுக் குற்றச்சாட்டு; சந்தேகநபருக்கு மறியல்

தென்மராட்சி, ஜீன் 25
கோவில்கதவை உடைத்து அங்கிருந்த விக்கிரகத்தைத் திருடிய குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட வேம்பிராய் வடக்கு வாசியை சாவகச்சேரி நீதிமன்ற பதில் நீதிவான் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.
கடந்த 22 ஆம் திகதி கொடிகாமம் பெரிய நாவலடியில் உள்ள கோவிலின் கதவை உடைத்து உள்நுழைந்த திருடர் அங்கிருந்த பெறுமதியான விக்கிரத்தைத் திருடிச் சென்றுள்ளனர்என கோவில்நிர்வாகத்தினர்கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தனர். அங்கு கிடைத்த தடயங்களின் பிரகாரம் பொலிஸார் மீசாலைவடக்குவேம்பிராயைச்சேர்ந்தநபரைநேற்றுக் கைதுசெய்துபதில்நீதிவான் முன்னிலையில் முற்படுத்தினர்.
வழக்கை விசாரித்த பதில் நீதிவான் இந்த நபரை எதிர் வரும் 29 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (21,9)

## அலங்கார உற்சவம்

அளவெட்டி, ஜீன் 25
யாழ்ப்பாணம் அளவெட்டி தெற்கு குருவளை நாகதம்பிரான் தேவஸ்தான வருடாந்த அலங்கார உற்சவம் நாளை மறுதினம் புதன்கிழமை காலை 6 மணிக்கு ஆரம்பமாகி தொடர்ந்து 11தினங்கள் உற்சவம் இடம்பெறும் என ஆலய பூசகர் தெரிவித்துள்ளார். (36)



யாழ்ப்பாணம் ஊர்காவற்றுறை புளியங்கூடல் செருத்தனைபதி அருள்மிகு ஸ்ரீ இராஜமகாமாரிஅம்மன் ஆலயதேர்த்திருவிழாநேற்றுமுன்தினம்சனிக்கிழமை சிறப்பாக இடம்பெற்றது. தேர் வீதி வலம் வருவதை படத்தில் காணலாம்

### அஞ்சல் ஊழியர்களின் போராட்டத்தால்

## தண்டப்பணங்கள், விண்ணப்பங்களை பிரதேச செயலகங்களில் வழங்கலாம்

தென்மராட்சி, ஜுன் 25
அஞ்சல் அலுவலகத்தினரின் தொடர் பணிப்புறக்கணிப்பினால்பொதுமக்கள்மற்றும்பரீட்சைகளுக்கு விண்ணப்பிப்பவர்களும்பாதிப்புக்குஉள்ளாகிவருவதைக் கருத்தில் கொண்டு அந்தந்தப் பிரதேச செயலகங்களில் பணம்செலுத்தும்நடவடிக்கைகள்மேற்கொள்ளப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டது.

வீதிச்சோதனையில் ஈடுபடும் போக்குவரத்துக் கண்காணிப்புப் பொலிஸார் போக்குவரத்துவிதிமுறைகளைமீறும் வாகனச் சாரதிகளுக்கு சம்பவ இடத்து தண்டம் விதித்து அருகில் உள்ள அஞ்சல்அலுவலகத்தில்செலுத்துமாறுகூறுகின்றனர். அஞ்சல் அலுவலகங்களில் பணிப்புறக்கணிப்பு இடம்பெறுவதால் தண்டப்பணம்செலுத்தமுடியாதநிலையில்பலர்காணப்படுகின்றனர். சிட்டை வழங்கப்பட்டு14தினங்களுக்குள்தண்டப்பணம் செலுத்தாவிடின் தண்டம் இருமடங்காகச் செலுத்த வேண்டிவரும்எனக்குறிப்பிட்டுள்ளதால்சாரதிகள் சிரமங்களை எதிர்நோக்குவதையும் காணமுடிந்தது.
இது தொடர்பாக பிரதேச செயலகத்துடன் தொடர்பு கொண்ட போது அஞ்சல் அலுவலகங்களில் செலுத்தப்படும் பொலிஸாரினால் விதிக்கப்படும் தண்டப் பணம் மற்றும் பரீட்சைக்கான விண்ணப்பக் கட்டணம் போன்றவை பிரதேச செயலகங்களில் செலுத்த முடியுமென அறிவித்துள்ளனர்
பொலிஸாரினால் தண்டம் விதிக்கப்பட்ட சாரதிகளும் பரீட்சைக்கு விண்ணப்பிப்பவர்களும் தத்தமது பிரிவு பிரதேச செயலகத்தில் உரிய கட்டணங்களைச் செலுத்தலாமெனவும் தெரிவிக்கப்பட்டது. (21,9)

## பட்டதாரிகள் பிரதேச செயலகத்தில் பதியவும்

பருத்தித்துறை, ஜீன் 25
பருத்தித்துறைப்பிரதேசசெயலாளர்பிரிவிற்குட்பட்ட வேலைதேடும்பட்டதாரிகளை பயிற்சிக்குஇணைப்புச்செய்துகொள்ளவதற்குபதிவுகளைமேற்கொள்ளுமாறுகேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. பருத்தித்துறைபிரதேசசெயலாளர்பிரிவைச்சேர்ந்தநிரந்தர வதிவிடத்தைக் கொண்ட இம்மாதம் 30 ஆம் திகதியன்று 45வயதிற்கு குறைந்த, பட்டம்பெற்ற விண்ணப்ப தாரிகள் எதிர்வரும் ஜீலை 15 ஆம் திகதிக்கு முன்னர் பிரதேச செயலகத்தில் அலுவலக நாள்களில் பதிவுகளை மேற்கொள்ளுமாறு பிரதேச செயலாளர்ஆழ்வாப்பிள்ளை சிறி தெரிவித்துள்ளார்.

## வீதி மீள் சீரமைப்புக்கு ரூ.18 இலட்சம் ஒதுக்கீடு

யாழ்ப்பாணம், ஜீன் 25
யாழ்ப்பாணம் அராலி மத்தி ஊரத்தி கிராமத்திற்கு உட்பட்ட பிரதேச சபை வீதி மீள்சீரமைப்புக்கு என வடமாகாண சபை உறுப்பினர் சபா. குகதாஸ் 18 லட்சம் ரூபா நிதி வழங்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.
வலி. மேற்கு பிரதேச சபைக்கு உட்பட்ட வகையில் கடந்த 40 வருடங்களுக்கு மேலாக சீரமைப்பு இன்றி அழிவடைந்த நிலையில் இருந்த வீதியே அங்குள்ள பொது அமைப்புக்கள் மற்றும் மக்களின் கோரிக்கைக்கு அமைய மீள்புனரமைப்பு செய்யப்படவுள்ளன. வலி. மேற்கு பிரதேச சபையூடாக மேற்படி அபிவிருத்தி உட்கட்டுமானத்தை முன்னெடுக்கவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. இதேவேளை வலி. மேற்கில் 8 சனசமூகநிலையங்கள், பொதுஅமைப்புக்கள்உட்பட14சமூகமட்ட நிறுவனங்களுக்கும் இவர் நிதி ஒதுக்கி வழங்கியுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டது. (50)

## தைக்கக் கொடுத்த ஆடையை வாங்கவந்தவர்மீது தாக்குதல்

ஊர்காவற்றுறை, ஜீன் 25
தையல் கடையில் ஆடை தைக்கக் கொடுத்து சிறிது காலத்தின் பின்னர் தைத்த ஆடையை வாங்க வந்த நபரை உரிமையாளர் தாக்கிய சம்பவம் ஊர்காவற்றுறை பகுதியில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.
ஊர்காவற்றுறை சந்தியில் உள்ள தையலகம் ஒன்றில் ஆடை தைக்க கொடுத்த நபர் சிறிது காலம் கழித்து அந்த ஆடையை வாங்க வந்த வேளை கடை உரிமையாளருடன் ஆடை தொடர்பாக ஏற்பட்ட வாய்த்தர்க்கம் கைகலப்பாக மாறியது.
பின்னர்கடைஉரிமையாளர்தன்னுடையஉறவினருடன்சேர்ந்துஆடை தைக்க கொடுத்தவரை கலைத்து தாக்கியமையால் காயமடைந்த நபர் ஊர்காவற்றுறை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.
தாக்கியதாக குற்றம் சாட்டப்பட்ட இருவரும் ஊர்காவற்றுறைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (138)

## திருவிழாவில் தவறவிட்ட பொருள்களை பெற்றுக்கொள்ள முடியும்

வரணி, ஜீன் 25
யாழ்ப்பாணம் வரணி சிட்டிவேரம் கண்ணகை அம்மன் ஆலய தேர் திருவிழா அண்மையில் இடம்பெற்றது. அன்றைய தினம் தவற விடப்பட்ட நகைகள் , கைக்கடிகாரம், தொலைபேசி என்பன அடியார்களால் கண்டெடுக்கப்பட்டு ஆலய நிர்வாகத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. தவறவிடப்பட்டபொருள்கள் இதுவரை உரிமை கோரப்படவில்லை. எனவே உரிமையாளர்கள்தங்கள்பொருள்களைப்பெற்றுக் கொள்ள முடியும் என ஆலய நிர்வாகத்தினர்தெரிவித்துள்ளனர். (159)

## ஆண்டு நிறைவு நிகழ்வு

அளவெட்டி, ஜீன் 25
வலிகாமம்பனைவளஅபிவிருத்திக் கூட்டுறவுச்சங்கங்களின்கொத்தணியின் 30 ஆவது ஆண்டு நிறைவும், கற்பகம்ஒளிமலர்வெளியீடுமற்றும் முன்பள்ளி மாணவர் ஆசிரியர்களுக்கானசீருடைத்துணிவழங்கும் நிகழ்வும் கொத்தணியின் கலையரங்கம் மண்டபத்தில் நாளை செவ்வாய்க்கிழமை காலை 10.30 மணிக்கு தலைவர் செ. செல்வராசா தலைமையில் நடைபெறவுள்ளது.
இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக வடக்குமாகாண மகளிர்விவகார அமைச்சர் அனந்தி சசிதரன் கலந்துகொள்ளவுள்ளார். (63)



வடமராட்சிசெவிப்புலனற்றோர்நிறுவனத்தின் கைத்தொழில்பயிற்சிக்கான கொட்டகைக்கு அடிக்கல் நடும் நிகழ்வு அண்மையில் இடம் பெற்றது. அடிக்கல்லை நிறுவனக் காப்பாளரும் முன்னாள் நவீல்ட் பாடசாலை அதிபருமாகிய கோபாலகிருஷ்ணன், நிறுவனத் தலைவர் தி. செந்தில்குமார் ஆகியோர் நட்டு வைத்தனர்.

## தமிழ்த்...

கள் இடமளிக்கக் கூடாது. ஒற்றுமையாக இருந்து ஒரு மித்துச் செயற்பட வேண்டும். இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வடக்கு மாகாண முதலமைச்சர் வேட்பாளராக தற்போதைய முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் போட்டியிட இடமளிக்கப்பட மாட்டாது என்று அந்தக் கட்சியின் ஊடகப் பேச்சாளர் தெரிவித்திருந்தார். இதன் பின்னர், வடக்கு மா்காண முதலமைச்சர், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்து வெளியேறி தனிக் கட்சி அமைத்துப் போட்டியிடவுள்ளதாக தகவல் வெளியாகியிருந்தது. அந்தகைய தகவலை முதலமைச்சர் மறுத்திருக்கவுமில்லை. அதற்கான முயற்சிகள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றதாகத் தெரிவிக்கப்படும் சூழலிலேயே, எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் மேற்கண்டவாறு நேற்று இடித்துரைத்துக் கூறியுள்ளார்.

வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனின் உரைகள் அடங்கிய நூல் வெளியீட்டு விழா வீரசிங்கம் மண்டபத்தில் நேற்று இடம்பெற்றது. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

1956ஆம் ஆண்டு தொடக்கம் எமது மக்கள் ஜனநாயக ரீதியாக அளித்த ஒவ்வொரு முடிவுகளும் இந்த நாட்டிலே இருக்கின்ற ஆட்சி முறை எமக்கு உகந்ததல்ல. அது அகற்றப்பட வேண்டுமென்ற முடிவையே எடுத்தியம்பின. 1956 ஆம் ஆண்டு தொடக்கம் இந்த நாட்டின் ஆட்சி முறை எம் மீது திணிக்கப்பட்டு வந்திருக்கின்றது. எமது சம்மதத்துடன், எமது ஒத்துழைப்புடன் ஆட்சி நடைபெறவில்லை. இது தான் உண்மை.

இது பன்னாட்டு மனித உரிமைகள் அறிக்கையைத் தோற்கடிக்கின்ற அல்லது உதாசீனம் செய்கின்றதொரு செயல். பன்னாட்டு மனித உரிமைகள் சட்டத்தைப் பொறுத்தவரையில் இது மாற்றியமைக்கப்பட வேண்டும். அதற்குப் பன்னாட்டுச் சமூகம் தனது பங்களிப்பைச் செய்ய வேண்டும். அது அத்தியாவசியமான செயற்பாடு. இவை எல்லாவற்றுக்கும் மேலாக இவற்றை நாங்கள் அடைவதென்றால் நாமெல்லோரும் ஒற்றுமையாக இருக்க வேண்டும். நாங்கள் ஒருமித்துச் செயற்பட வேண்டும். நாங்கள் ஒரு தூணாக இருக்க வேண்டும். அதை பெரும்பான்மையினரும் அதன் ஆட்சியாளர்களும் உணர வேண்டும்.

கடந்த 2015ஆம் ஆண்டு நாம் வழங்கிய ஒற்றுமையான தீர்ப்பு, இந்த நாட்டில் பல மாற்றங்களை ஏற்படுத்தியிருக்கின்றது. தமிழ் மக்கள் தங்களுடைய ஒற்றுமையின் மூலமாக தங்களுடைய தலைவிதியை தீர்மானிப்பது மாத்திரமல்ல, இந்த நாட்டில் யார் ஆட்சி புரியலாம் என்பதை நிர்ணயிக்கக் கூடிய வல்லமையும் அவர்களிடம் இருக்கிறது. அந்தச் சேவை தொடர வேண்டும். அந்த ஒற்றுமை பேணிப் பாதுகாக்கப்பட வேண்டும். வேறுபட்ட கருத்துக்கள் இருக்கலாம். அவற்றை நாங்கள் பேசித் தீர்த்துக் கொள்ள வேண்டும். ஒற்றுமையாக நிற்க வேண்டும். எவ்விதமான பிரிவினைகளுக்கும் இடமில்லை. அதை நாங்கள் உணர்ந்து செயற்பட வேண்டும்.

அரச தலைவர் தேர்தல் முடிந்த பின்னர், ஒரு முறை நானும் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவும் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவும் சந்தித்திருந்தோம். அரசியல் தீர்வு சம்பந்தமாக முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவைச் சந்தித்துப் பேச வேண்டுமென்று என்னிடம் சொல்லப்பட்டிருந்தது. அதற்கமை சந்திப்பு ஒழுங்கமைக்கப்பட்டு மகிந்தவை சந்தித்திருந்தோம். அதன் போது மகிந்த ராஜபக்ச முதல் சொன்ன விடயம் என்னவென்றால், என்னுடைய தோல்விக்கு நீங்கள் தான் காரணம் என்றார். அப்பொழுது நான் கூறினேன். அது நான் அல்ல. எமது மக்கள் தான் என்று. அதாவது எமது மக்கள் தான் வாக்களித்திருந்தார்கள். நான் ஒரு வாக்குத் தான் அளித்தேன் என்றேன்.

அவ்வாறான நிலமை இன்றைக்கும் இருக்கின்றது. தமிழ் மக்களுடைய ஆதரவை நாங்கள் பெற வேண்டும். தமிழ் மக்களை நாங்கள் தொடர்ந்தும் புறக்கணிக்க முடியாது. தமிழ் மக்களுடைய ஆதரவையும் பெற்றால் தான் நாங்கள் ஆட்சிக்கு வரலாம் என்று மகிந்த கூறியிருந்தார். அதனை நான் இங்கு புகழ்ந்து பேசவில்லை. அது எமது கடமை. அதனை நாங்கள் பாதுகாப்பதற்கு ஒற்றுமையாக ஒருமித்து நின்று நாங்கள் செயற்பட வேண்டும். அதைவிடுத்து நாங்கள் பிரிவோமேயானால் எமது மக்களை நாங்கள் அழிப்போம். அதற்கு நாங்கள் இடமளிக்கக் கூடாது. ஒற்றுமையாக இருந்து ஒருமித்துச் செயற்பட வேண்டும் - என்றார். (5,8,105)

## கொள்கை...

நிற்கின்றார்கள். அது கொள்கை முரண்பாடுகள் காரணமாக இருக்கலாம். தனிப்பட்ட காரணங்களுக்காகவும் இருக்கலாம். ஆனால் ஒரு ஏற்கப்பட்ட கொள்கைத் திட்டத்தின் அடிப்படையில் பிரிந்துபோன எல்லாக் கட்சிகளையும் சேர்த்து கூடிய வலுவுடைய ஒரு கட்டமைப்பை உருவாக்குவது காலத்தின் கட்டாயமாக அமைகின்றது. இவ்வாறு வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

ஒற்றுமையாக இல்லாமல் பிரிந்தால், அது தமிழ் மக்களை அழிப்பதற்கு ஒப்பானது என்று இரா.சம்பந்தன் உரையாற்றியிருந்த நிலையில், அதற்குப் பதிலளிக்கும் விதமாக, வடக்கு மாகாண முதலமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனின் உரைகள் அடங்கிய நூல் வெளியீட்டு விழா வீரசிங்கம் மண்டபத்தில் நேற்று இடம்பெற்றது. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

### நான் தேவையா? இல்லையா?

எழுதி வைத்து வாசித்ததால் இன்று இவ்வாறானதொரு நூலை வெளியிடமுடிகின்றது. எழுதி வைத்து வாசிப்பதை எனது மாணவன்ஒருவர் குறையாகக்குறிப்பிட்டிருந்தார். எழுதி வைத்து வாசிப்பதால் பல நன்மைகள் கிடைக்கின்றன என்று சுட்டிக்காட்டிய விக்னேஸ்வரன், நிகழ்வில் கலந்து கொண்ட அதிதிகளைப் பாராட்டினார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான இரா. சம்பந்தனைப் பற்றிக் கூறும்போது, காலம் தாழ்த்தி எம்முடன் இணைய சம்மதித்திருந்தாலும் அவர் வரவு எமக்கெல்லாம் பெருமையையும் மகிழ்வையும் ஊட்டி உள்ளது. என்னை இந்த முதலமைச்சர் பதவிக்குக் கொண்டு வந்தவர் அவரே. இதுவரையில் அவருக்கும் அவர் தலைமை வகிக்கும் கட்சிக்கும் விசுவாசமாகவே நான் நடந்து வந்துள்ளேன். கொடுத்த கையைக் கடிக்கும் பழக்கம் எனக்கில்லை.

ஆனால் உண்மைகளை உள்ளபடி வெளிக்கொண்டுவராது இருக்க முடியாதவன் நான். அதனால் எனக்கும் கட்சிக்கும் இடையில் விரிசல்கள் ஏற்பட்டிருப்பினும் என் நிலையைப் புரிந்து நடவடிக்கைகளில் இறங்கி வந்தவர் சம்பந்தன். ஆனால் கட்சியில் சிலர் என்னை வெளியேற்றக் குறி வைத்துக் கொண்டுள்ளார்கள்.

எனது சேவை தேவையா இல்லையா என்பதை மக்கள் தீர்மானிக்கட்டும். சம்பந்தனின் வருகையாலோ என்னவோ கூட்டணி சேர்ந்த பலர் இந்தக் கூட்டத்தில் பங்குபற்ற வந்துள்ளனர், என்று குறிப்பிட்டார்.

### கூட்டணிக்கு சரிவரார்கள்

இந்த நிகழ்வில் பங்கேற்றிருந்த நாடாளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தாவின் பெயரைக் குறிப்பிட்டு உரையாற்றிய முதலமைச்சர், மத்தியில் கூட்டாட்சி மாகாணத்தில் தன்னாட்சி என்று கூறிவிட்டு மத்தியின் முகவர்களாக நடந்து கொண்டு வந்திருப்பவர்கள் எமது பயணத்திற்கு இடையூறு விளைவிக்கக் கூடியவர்கள். அதே போல் தேசியக் கட்சிகளின் அங்கத்தவர்கள் மத்தியின் கட்டுப்பாடுகளுக்குக் கட்டுப்பட்டவர்கள். அவர்கள் எமது உறவுகளாக இருந்தாலும் எமது பயணத்தில் சேரக்கூடியவர்கள் அல்ல என்று தெரிவித்தார்.

முதலமைச்சர் தனது உரையில் மேலும் தெரிவித்ததாவது:

சிலர் என்னைத் தீவிர போக்குடையவர் என்று கூறுகின்றார்கள். அவர்களை எமது கட்சியின் தேர்தல் அறிக்கைகளை வாசிக்கக் கோருகின்றேன். சிலர் மக்களின் வாக்கெடுக்க அப்படித்தான் அறிக்கைகளில் போடவேண்டும். ஆனால் நாங்கள் அரசியல் செய்ய வேண்டுமென்றால் அவற்றையெல்லாம் புறம்தள்ளி வேலைசெய்ய வேண்டும் என்கிறார்கள். அவ்வாறானவர்கள் தான் என்னைத் தீவிர போக்குடையவர் என்று கூறுகின்றார்கள். அவ்வாறான போக்கை நான் கண்டிக்கின்றேன். மக்களை ஏமாற்றும் செயல்களில் ஈடுபடுவது பாவம் என்பதே எனது நிலைப்பாடு. தேர்தல் அறிக்கைகளில் கூறியிருப்பதை அசட்டை செய்வதாக இருந்தால் அவற்றை மாற்றி மக்களிடம் இருந்து பிறிதொரு முறை அவர்கள் ஆதரவைப் பெறுவது அவசியம்.

### உள்ளூராட்சியில் குழப்பம் வரும்

அண்மையில் கட்சி நலம் சார்ந்து பல உடன்படிக்கைகள் உள்ளூராட்சி மன்றங்களில் எட்டப்பட்டன. கொள்கை ரீதியாக அவை நடைபெறவில்லை. பதவி ஆசையே முக்கிய குறிக்கோளாக இருந்தது. விரைவில் இவ்வாறான கொள்கை அடிப்படை தவிர்ந்த உடன்பாடுகள் சுய இலாபங்களுக்காக முரண்பாடுகளை வருவிப்பன என்று எதிர்பார்க்கலாம். விட்டுக் கொடுக்க வேண்டும் என்று கூறி எம்மை நாம் விற்கும் நிலைக்கு வந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. ஆனால் சுய மதிப்புடனான இணைந்த அரசியலே மத்தியிலும் மாகாணத்திலும் கடைப்பிடிக்க வேண்டியுள்ளது. வெளியார் குடியேற்றம், பௌத்த விகாரைகள் 131 கட்டப்படுதல் போன்ற எல்லாவற்றிற்கும் சுய மதிப்புடனான இணைந்த அரசியலை நாம் நாடாததே காரணம்.

### பலமற்ற நிலையிலிருந்து விட்டுக்கொடுக்கக்கூடாது

சில தினங்களுக்கு முன் கிழக்கு மாகாணத்தில் இருந்து வந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இது காறும் இருந்து வந்தவர்கள் இப்பொழுதும் இருந்து வருபவர்கள் கிழக்கு மாகாணத்தில் விட்டுக்கொடுத்ததால் ஏற்பட்ட கெடுதிகள் பற்றி எமக்கறிவித்தார்கள். நாம் வலுவாக இருந்து கொண்டு மற்றவர்களுக்கு விட்டுக் கொடுக்கலாம். ஆனால் நாம்பலம்அற்றநிலையில்இருந்துகொண்டு விட்டுக்கொடுப்பது எம்மை நாமே அழித்துக் கொள்வதற்குச் சமமாகும் என்றார்கள். கிழக்கு மாகாணத்தின் தற்போதைய தமிழர் நிலை பரிதாபகரமாக மாறியிருப்பதை எடுத்துரைத்தார்கள். ஆகவே நாம் யாவரும் கூட்டுச் சேர வேண்டும்; ஒன்றுபட வேண்டும் எனும் போது அது கொள்கை அடிப்படையிலேயே நடைபெறவேண்டுமே ஒளிய கொள்வோனுக்குக் கொத்தடிமையாகும் விதத்தில் நடைபெறக் கூடாது.

### எமது நிலை பரிதாபம்

தமிழ் மக்களின் அரசியல் நிலை இன்று பரிதாபகரமானதாக மாறியுள்ளது. கட்சி ரீதியாக நாம் பிரிந்துள்ளோம். ஆனால் எமது பல்வேறு கட்சிகளின் தேர்தல் அறிக்கைகளில் காணும் உள்ளடக்கங்களில் உள்ள முரண்பாடுகள் மிகச் சொற்பமே. 2013ஆம் ஆண்டு வெளிவந்த எங்கள் கட்சியின் தேர்தல் அறிக்கையை அடிப்படையாக வைத்தே நான் எனது கருத்துக்களைத் தெரியப்படுத்தி வந்துள்ளேன்.

அரசமைப்பு பற்றிய எமது வடமாகாணசபையின் முன்மொழிவுகளும் தமிழ் மக்கள் பேரவையால் அரசுக்குக் கையளிக்கப்பட்ட முன்மொழிவுகளும் அடிப்படையில் பலத்த முரண்பாடுகளைக் கொண்டிருக்கவில்லை. அவை எமது 2013ஆம் ஆண்டின் தேர்தல் அறிக்கையை அடிப்படையாகக் கொண்டவையே. பின் எதற்காக மாறிய கொள்கைகள் உடையவர்களுடன் சேருகின்றோம். ஒரே கொள்கையுடையோருடன் முரண்டு பிடிக்கின்றோம்?

இங்கு தான் தமிழ் மக்களின் தனிப்பட்ட மனோநிலை வெளியாகின்றது. அடிப்படையில் நாங்கள் ஆணைக்குக் கட்டுப்பட ஆயத்தமாய் உள்ளோம். ஆனால் அயலவர்களை ஆதரித்து அரவணைத்து ஆணவத்தை அடக்கி வைத்துப் பயணம் செய்ய முடியாதவர்களாக இருக்கின்றோம். இது இங்கு மட்டுமல்ல. வெளிநாடுகளிலும் தமிழ் மக்களிடையே காணும் ஒரு குணாதிசயம். தன்னைவிட தன்னினத்தவன் எவனும் தகைநிலையடையக் கூடாது என்பதில் கண்ணும் கருத்துமாக இருக்கின்றோம். அதனால் மாண்பு மிக்க எமது இனம் சீர்குலைந்து போவதையுஞ் சிறப்பிழந்து போவதையும் நாம் காணக்கூடியதாக இருக்கின்றது.

வெவ்வேறு மனோநிலைகள் கொண்ட இவர்கள் யாவரையும் ஒன்றிணைத்துச் செல்வது அவ்வளவு இலேசான காரியமல்ல. ஆனாலும் இன்றைய எமது தமிழ் மக்களுக்கு ஒற்றுமை அவசியம். ஒருங்கிணைந்து செயற்படுவது அவசியம். உயரிய கொள்கைகளை உள்ளடக்கி அவற்றின் அடிப்படையில் சுயநலம் களைந்து முன்னேறுவதே இன்று தமிழ் மக்களுக்கிருக்கும் ஒரேயொரு அரசியல் பாதை - என்றார். (5,8,105)

## விக்கியின்...

பிரிந்து சென்ற முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

'நீதியரசர் பேசுகின்றார்' என்ற நூல் அவரது மாணவரும் தற்போது இலங்கை மற்றும் இங்கிலாந்தில் சட்டத்தரணியாக பணிபுரியும் ஆர்.டி.இரத்தினசிங்கத்தினால் உருவாக்கப்பட்டது. இந்த நூல் வெளியீட்டு விழா வீரசிங்கம் மண்டபத்தில் நேற்றுக் காலை 9.30 மணியிலிருந்து பி.ப. 2.20 மணிவரை நடைபெற்றது.

நிகழ்வில் சிங்கப்பூர் பல்கலைக்கழக சட்டத்துறைப் பேராசிரியர் மு.சொர்ணராஜா முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டார். சிறப்பு விருந்தினர்களாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தன், யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் இருதய சத்திர சிகிச்சை நிபுணர் பூ.லக்ஸ்மன், வலிகாமம் கல்வி வலய ஓய்வு பெற்ற பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி கோகிலா மகேந்திரன், தமிழகத்தின் குற்றாலத்தில் அமைந்துள்ள குறும்பலா மூலிகை மற்றும் ஆராய்ச்சி நிலைய இயக்குநர் வைத்திய கலாநிதி வெ.ஸ்ரீநிவாசன், யாழ்ப்பாண பல்கலைக்கழக ஓய்வு பெற்ற பேராசிரியர் சி.க.சிற்றம்பலம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை.சோ. சேனாதிராசா, செல்வம் அடைக்கலநாதன், த.சித்தார்த்தன், ஈ.சரவணபவன், எம்.ஏ. சுமந்திரன் ஆகியோரும் வடக்கு மாகாண அமைச்சர்கள், உறுப்பினர்களும் கலந்து கொண்டனர். அவர்களுடன் ஈ.பி.டி.பி.யின் செயலரும் நாடாளுமன்ற உறுப்பினருமான டக்ளஸ் தேவானந்தா, அந்தக் கட்சியின் மாகாணசபை உறுப்பினர் தவநாதன், எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா, அந்தக் கட்சியிலிருந்து தற்போது பிரிந்து சென்றுள்ள முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் ஆகியோரும் கலந்து கொண்டனர். இந்த நிகழ்வில் வெளியிடப்பட்ட நூலின் சிறப்புப் பிரதி, நாடாளுமன்ற மற்றும் மாகாண சபை உறுப்பினர்களுக்கு மேடையில் அழைத்து வழங்கப்படவில்லை. வர்த்தகப் பிரமுகர்களுக்கே சிறப்பு பிரதி வழங்கி வைக்கபட்டது.

இதேவேளை, நிகழ்வில் ஏற்புரையாற்றிய வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், கொள்கை அடிப்படையிலான கூட்டில், டக்களஸ் தேவானந்தாவை இணைத்துக் கொள்ள முடியாது என்று தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (5)

## பலா மரத்திலிருந்து...

சிவநகர் அரைஏக்கர் திட்டப் பகுதியில் வசிக்கும் கிட்டினன் (வயது-45) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. வீட்டில் உள்ள பலாமரத்தில் நேற்று முன்தினம் சனிக்கிழமை பலாப் பழம் பிடுங்குவதற்காக ஏறியுள்ளார். இதன்போது அவர் தவறி வீழ்ந்ததாகத் தெரிவிக்கப்பட்டு ஒட்டுசுட்டான் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். மேலதிக சிகிச்சைக்காக மாவட்ட வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டபோதும், உயிரிழந்துள்ளார். விசாரணைகளை ஒட்டுசுட்டான் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (5,ரி3)

# மைத்திரியைக் கைவிட்டு மகிந்தவுடன் சங்கமிக்கிறது சு.கவின் 16பேர் அணி

## தினேஸ் தரப்புடனான சந்திப்பில் இணக்கம்

கொழும்பு, ஜீன் 25

கூட்டு அரசிலிருந்து வெளியேறிய 16பேர் கொண்ட சுதந்திரக் கட்சியின் அணியினர், முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச தலைமையிலான கூட்டு எதிரணியுடன் சங்கமிப்பது உறுதியாகியுள்ளது.

கூட்டு எதிர்க்கட்சியின் நாடாளுமன்றக் குழுவின் தலைவர் தினேஸ் குணவர்த்தன தலைமையிலான அணியினருக்கும் சு.கவின் 16பேர் அணியினருக்கும் இடையில் நேற்றுமுன்தினம் இரவு தீர்க்கமான முடிவுகளை எடுப்பதற்கான சந்திப்பொன்று மகரகமவில் நடைபெற்றுள்ளது.

கூட்டுஎதிர்க்கட்சியுடன் சு.கவின் 16பேர்அணியினர்இணைந்து செயற்படுவது குறித்தே அதிக ளவில் கவனம் செலுத்தப்பட்டது. அதற்கு அமைவாகக் கூட்டுஎதிர்க்கட்சியின் நாடாளுமன்றக்குழுக் கூட்டத்தில் பங்கேற்பது குறித்து முதலில் பேச்சு நடத்தப்பட்டன.

தினேஸ்குணவர்த்தன தரப்பில், கூட்டு எதிரணியுடன் இணைந்து செயற்படுவதற்கு முன்வந்துள்ளமையையிட்டு நாம்மகிழ்ச்சியடைகின்றோம். கூட்டு எதிர்க்கட்சியின் நாடாளுமன்றக் குழுவில் பங்குபற்றுவதென்றால் அரசின் நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தில் பங்கு பற்றமுடியாது என்ற விடயம் இறுக்கமாகக் கூறப்பட்டது. அந்தக் கருத்தை சு.கவின் 16பேர் அணி ஏற்றுக் கொண்டதோடு கூட்டு எதிர்க் கட்சியின் அடுத்த நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தில் பங்கேற்கவுள்ளதாகவும் குறிப்பிட்டனர்.

முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச தலைமையிலான கூட்டு எதிரணியின் கட்சிக் கூட்டங்களில் சு.கவின் 16பேர் அணியைச் சேர்ந்த மூத்த அரசியல்வாதிகளான ஜோன் செனவிரட்ன மற்றும் எஸ்.பி.திசாநாயக்க ஆகியோர்பங்கேற்பதற்கும் இணக்கம் ஏற்பட்டது.

ஐக்கிய தேசியக் கட்சியின் நாட்டுக்குப் பொருத்தமற்ற கொள்கைகள், செயற்பாடுகளை மக்கள் மத்தியில் தெளிவுபடுத்தும் வகையில் தொடர்ச்சியான மாநாடுகள், பேரணிகள், போராட்டங்களை முன்னெடுப்பதில் இணைந்து பணியாற்றுவதென்றும் இரு தரப்பினருக்கும் இடையில் இணக்கம் எட்டப்பட்டுள்ளது.

முதற்கட்டமாகப்பொது மாநாடு ஒன்றை நடத்துவதென்று தீர்மானிக்கப்பட்டபோதும் அதைச் சப்ரகமுவ மாகாணத்தின் இரத்தினபுரி மாவட்டத்திலா அல்லது தென் மாகாணத்தின் காலி மாவட்டத்திலா நடத்துவது என்பது குறித்து இறுதி முடிவு எடுக்கப்படவில்லை.

கூட்டு எதிர்க்கட்சிக்குள் இருக்கும் ஏனைய தரப்பினர் சு.கவின் 16பேர் அணியினர் தொடர்பில் பல்வேறு கருத்துக்களை முன்வைத்தாலும் அவற்றைப் பொருட்படுத்தாது இலக்கை நோக்கிக் கூட்டாக நகர்ந்து செல்வோம் என்று தினேஸ்குணவர்த்தன தரப்பால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, கூட்டு எதிரணி நாடாளுமன்ற உறுப்பினர் காஞ்சன நடத்திய பத்திரிகையாளர் சந்திப்பில், சு.கவின்16பேர் கூட்டு எதிர்க்கட்சியின் நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தில் பங்கேற்கவேண்டுமாயின் மகிந்தவின் தலைமைத்துவத்தை மாத்திரமே ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று நிபந்தனை விதித்தமை குறிப்பிடத்தக்கது. (5.31)

## சந்தேகநபர்களைச் சுட்டுக் கொல்வது நீதிக்குப் புறம்பானது

சாலிய பீரிஸ்

நீதிக்கு மாறாகச் சந்தேக நபர்களைப் பொலிஸார் சுட்டுக்கொலை செய்வதை ஏற்றுக்கொள்ள முடியாது என்று காணாமற்போனோர் பணியகத்தின் தலைவரும் அரச தலைவர் சட்டத்தரணியுமான சாலிய பீரிஸ் தெரிவித்துள்ளார்.

"தடுப்பிலுள்ள சந்தேகநபர்களை ஆதாரங்களைத் தேடி அழைத்துச் செல்லும்போது, தப்பிக்க முயன்றனர். அதனால் அவர்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவிப்பதை அறிந்திருக்கின்றோம். ஆனால் நீதிக்கு மாறாகப் பொலிஸார் மேற்கொள்ளும் கொலைகளை ஏற்றுக்கொள்ள முடியாது" என்று அரச தலைவர் சட்டத்தரணி சாலிய பீரிஸ் தனது கீச்சகத்தில் பதிவிட்டார்.

மாத்தறைப் பகுதியிலுள்ள நகைக் கடையில் கொள்ளை முயற்சியைத் தடுக்கப் பொலிஸார் முற்பட்ட போது, கொள்ளைக் கும்பல் நடத்திய தாக்குதலில் பொலிஸ் உத்தியோகத்தர் உயிரிழந்தார். அதனையடுத்து பிரதான சந்தேகநபரைப் பொலிஸார் கைது செய்தனர். அதன்போது அவர் பொலிஸார் மீது தாக்குதல் நடத்த முயற்சித்தார் என்ற குற்றச்சாட்டில் பொலிஸாரால் சுட்டுக்கொல்லப்பட்டார். இந்த நிலையிலேயே காணாமற்போனோர் பணியகத்தின் தலைவரும் அரச தலைவர் சட்டத்தரணியுமான சாலிய பீரிஸ் இந்தக் கருத்தை வெளியிட்டார்.

இதேவேளை, கடந்த ஞாயிற்றுக் கிழமை மல்லாகத்தில் இடம்பெற்ற குழு மோதலின்போது தலையீடு செய்த பொலிஸார், ஒருவரைச் சுட்டுக்கொன்றனர். வன்முறையைத் தடுக்கப் பொலிஸார் தமது கடமையைச் செய்தனர் என்று இந்தச் சம்பவம் சுட்டிக்காட்டப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (5)

## ஊடகங்கள்தான் ஊதிப்பெருப்பிக்கின்றன

### இப்படிச் சொல்கிறார் மகிந்த ராஜபக்ச



கொழும்பு, ஜீன் 25

அடுத்த அரசதலைவர் தேர்தலில் கோத்தபாய ராஜபக்ச போட்டியிட்டால், அவரை அமெரிக்கா ஆதரிக்காது என்று, அமெரிக்கத் தூதுவர் அதுல் கெசாப் கூறியதாக வெளியான செய்திகளை முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச மீண்டும் முற்றாக நிராகரித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

2019ஆம் ஆண்டு அரச தலைவர் தேர்தலில், போட்டியிடுவதற்கு முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்சவின் தகுதியற்ற தன்மை அல்லது பொருத்தமற்ற தன்மையைப் பற்றி, அதுல் கேசாப் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் குறிப்பிடவில்லை.

இது எமக்கிடையிலான ஒரு தனிப்பட்ட கலந்துரையாடலாக இருந்தது. இதன்போது, அரசியல் பற்றியோ அல்லது எனது சகோதரர் பற்றியோபேசப்படவில்லை. ஊடகங்கள் தான் இதை ஊதிப் பெருப்பித்தன. இதைப் பற்றி நானோ, சிறிலங்கா பொதுமக்கள்முன்னணியோ கவலைப்படவில்லை.

2020ஆம் ஆண்டு அரச தலைவர் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர் யார் என்று, சிறிலங்கா பொது மக்கள் முன்னணி உரிய நேரத்தில் வெளிப்படுத்தும். அரசமைப்பின் படி, அரச தலைவர் தேர்தலை 2019ஆம் ஆண்டு ஜனவரியில் நடத்துவதற்குக் கூட, அரச தலைவர் மைத்திரி பால சிறிசேனவுக்கு அதிகாரம் உள்ளது.

அவ்வாறு அவர் அறிவித்தால், 2018ஆம் ஆண்டு இறுதியிலோ, 2019ஆம் ஆண்டு ஆரம்பத்திலோ எமது வேட்பாளரை அறிவிப்போம்.

அரச தலைவர் தேர்தலில் போட்டியிடுவது தொடர்பாக ராஜபக்ச குடும்பத்துக்குள், கோத்தபாயவுக்கும், பசிலுக்கும் இடையில் இழுபறிப் போர் நடப்பதாக வெளியிடப்படும் செய்திகளில் உண்மையில்லை, என்றும் அவர் தெரிவித்துள்ளார். (5)

## மீண்டும் மைத்திரிதான் மறுபேச்சுக்கு இடமில்லை

### மகிந்த அமரவீர திட்டவட்டம்



கொழும்பு, ஜீன் 25

அடுத்த அரசதலைவர் தேர்தலில் சிறிலங்கா சுதந்திரக் கட்சி தமது உறுப்பினர் ஒருவரையே வேட்பாளராகக் களமிறக்கும்.

அவ்வாறு களமிறக்கப்படுவர் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவாகவே இருக்கும். அவரைத் தவிர வேறு எவரையும் களமிறக்க மாட்டோம். இவ்வாறு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் செயலரும் அமைச்சருமான மகிந்த அமரவீர தெரிவித்தார்.

அரச தலைவர் தேர்தலில் போட்டியிடுவதற்கு மைத்திரியே பொருத்தமானவர். சிறிலங்கா சுதந்திரக் கட்சியை மேலும் பலமடையச் செய்யும் வேலைத்திட்டத்தை நாம் ஆரம்பித்துள்ளோம். அதைப் படிப்படியாக முன்னெடுத்து வருகிறோம். விரைவில் மீண்டும் கட்சியைப் பலமான நிலைக்குக் கொண்டு வருவோம். அவருக்கு ஆதரவு வழங்கும் எந்தக் கட்சியும் எம்முடன் இணைந்து செயற்பட முடியும் என்று மகிந்த அமரவீர குறிப்பிட்டார். (5)

30ஆண்டுகளின் பின்னர்

## தாயைத் தேடி 4தடவைகள் இலங்கை வந்த பெண்

### ஏமாற்றத்துடன் நாடு திரும்புகிறார்

கொழும்பு, ஜூன் 25

இலங்கையில் பிறந்த பெண்ணொருவர் 30 ஆண்டுகளுக்குப் பின்னர் தன்னைப் பெற்றெடுத்த தாயைத் தேடி இலங்கைக்கு வந்தார். இருப்பினும் அவரது தாய் குறித்த தகவல்கள் கிடைக்காமையால் நெதர்லாந்துக்கு மீண்டும் புறப்பட்டுச் சென்றுள்ளார்.

நாவலப்பிட்டி கொரகடவல பிரதேசத்தைச் சேர்ந்த உதுபென் வித்தான லாகே சோமாவதி என்ற பெயரில் பெண் ஒருவர் 30 ஆண்டுகளுக்கு முன்னர் இந்தப் பெண்ணைப் பெற்றெடுத்தார். பிறந்த சில நாள்களிலேயே குழந்தையை வளர்க்க நெதர்லாந்துப் பெண்ணுக்கு வழங்கியுள்ளார். தற்போது 30 வயதான ஐரிஸ் நந்தனி குமாரி திருமணம் செய்து கொண்டதுடன் தனது தாயைத் தேடி நான்கு முறை இலங்கைக்கு வந்தார்.

குழந்தையை நெதர்லாந்துப் பெண்ணிடம் வளர்க்கக் கொடுக்கும்போது பெற்ற தாய் அவர் குறித்துப் பொய்யான தகவல்களை வழங்கியதால், தாயைத் தேடிக்கொள்ள முடியாமல் உள்ளது.

இறுதியாகப் பேருவளைப் பிரதேசத்திருந்த ஐரிஸ் நந்தனி குமார, இலங்கையில் இருக்கும் தனது தாயைக் கண்டுபிடிக்க உதவுமாறு ஊடகங்களிடம் கோரிக்கை விடுத்தார்.

இது குறித்துக் கருத்து வெளியிட்ட அவர்: "நான் இலங்கையில் பிறந்தேன். நெதர்லாந்தைச் சேர்ந்த குடும்பம் என்னை வளர்த்தது. நான் இப்போது என்னைப் பெற்றெடுத்த தாயைத் தேடுகிறேன். என் தாய் இலங்கையில் இருப்பார் என்று நம்புகிறேன். என்னால், அவரை இன்னும் கண்டுபிடிக்க முடியவில்லை. நான் எனது தாயையும் எனது குடும்பத்தையும் தேடிக் கண்டுபிடிக்கவேண்டும்" - என்றார்.

அதேவேளை இது குறித்துப் பெண்ணின் கணவர் கருத்து வெளியிடும் போது, "ஐரிஸ் எனது மனைவி, அவரது தாய் அல்லது அவரது குடும்பத்தைச் சந்திக்க முடியும் என்று எதிர்பார்க்கின்றேன். அறிந்தால் எமக்குத் தெரியப்படுத்துங்கள்" - என்றார். (5)

## கோத்தா என்றால் பயம்

### மகிந்த தெரிவிப்பு

நாட்டிலுள்ள சில அரசியல்வாதிகளுக்கு பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலர், கோத்தபாய ராஜபக்ச அரச தலைவர் தேர்தலில் போட்டியிடுவார் என்கிற அச்சம் ஏற்பட்டுள்ளது என்று முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

ஒன்றிணைந்த எதிரணியினரின் சார்பில் எதிர்வரும் அரச தலைவர் தேர்தலில் யாரை களமிறக்குவது என்பது இதுவரையில் தீர்மானிக்கப்படவில்லை எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலர் கோத்தபாயவின் பிறந்தநாள் நிகழ்வில் கலந்துகொண்டிருந்த, அஸ்கிரிய பீடத்தின் துணை மகாநாயக்கர் வெண்டருவே உபாலி தேரர், ஹிட்லரை போன்ற சர்வாதிகார ஆட்சி நடத்தியேனும், நாட்டை சரி யான பாதைக்கு இட்டுச்செல்லுமாறு ஆசி வழங்கியிருந்தார்.

இந்தக் கருத்துக்கு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன உள்ளிட்டவர்கள் கடும் எதிர்ப்பை வெளியிட்டிருந்தனர்.

முன்னாள் அரசதலைவர் மகிந்த ராஜபக்ச இந்தக் கருத்து தொடர்பில சிங்களமொழி ஊடகத்துக்கு கருத்துத் தெரிவிக்கும்போதே மேற்கண்டவாறு கூறியுள்ளார். 'அஸ்கிரிய பீடத்தின் துணை மகாநாயக்கர் வெண்டருவே உபாலி தேரர், அதிகமான விடயங்கள் தொடர்பில் கருத்து வெளியிட்டிருந்தபோதிலும், ஹிட்லர் ஆட்சிப் பற்றி பேசியிருந்தமை மாத்திரம் பேசப்பட்டு வருகின்றது' என்று கூறியுள்ளார். (5)

# வடக்கு-கிழக்கில் 40 ஆயிரம் வீடுகள் அமைக்கும் சீன நிறுவனம்

## இலங்கையிடம் கவலை வெளியிட்டுள்ள இந்தியா



கொழும்பு, ஜூன் 25

வடக்கு – கிழக்கில் 40 ஆயிரம் வீடுகளை அமைக்கும் ஒப்பந்தம், சீன நிறுவனத்துக்கு வழங்கப்பட்டமை தொடர்பாக இலங்கை அரசிடம் இந்தியா கவலை வெளியிட்டுள்ளது.

இதற்கு முன்னர் இலங்கையில் வீடுகளை அமைத்திராத சீன நிறுவனத்துடன், கேள்விப் பத்திரம் எதுவும் கோரப்படாமல், ஒப்பந்தம் செய்யப்பட்டமை குறித்து இலங்கையின் உயர் மட்டத்துக்கு இந்தியா கவலையை வெளிப்படுத்தியுள்ளது.

சீன ரயில்வே பெய்ஜிங் பொறியியல் குழும நிறுவனத்தின் இலங்கைப் பிரதிநிதியான, யப்கா கட்டுமான நிறுவனத்துக்கு, 40 ஆயிரம் வீடுகளை வடக்கு, கிழக்கில் அமைக்கும் திட்டத்தைச் செயற்படுத்தும் பொறுப்பை ஒப்படைக்கும், அமைச்சர் டி.எம்.சுவாமிநாதனின் அமைச்சரவைப் பத்திரத்துக்குக் கடந்த மாதம் அமைச்சரவை அனுமதி அளித்திருந்தது.

மண் சரிவால் பாதிக்கப்பட்டவர்களுக்கு 10 ஆயிரம் வீடுகளைக் கட்டும், ஒப்பந்தமும் இந்த நிறுவனத்துக்கே வழங்கப்பட்டுள்ளது.

இந்த ஒப்பந்தத்தின் விளைவாக, வடக்கு - கிழக்கில் சீனத் தொழிலாளர்களின் பரம்பல் அதிகரிக்கக் கூடிய நிலையில், சீன நிறுவனத்துக்கு வழங்கப்பட்ட இந்த ஒப்பந்தம் தொடர்பாக இந்திய அரசு கேள்விகளை எழுப்பியுள்ளதாக அறியப்படுகிறது.

இலங்கையில் இந்த நிறுவனம் இன்னமும் ஒரு வீட்டைக் கூடக் கட்டியிருக்காத நிலையிலும், குறித்த பிரதேசத்துடன் எந்தப் பரீட்சயமும் இல்லாத நிலையிலும், அதற்கு வீடுகளை அமைக்கும் வாய்ப்பு அளிக்கப்பட்டமை குறித்துக் கேள்வி எழுப்பப்பட்டுள்ளது.

அத்துடன், காலநிலை மற்றும் மண் தொடர்பான ஆய்வுகள் எதுவும் செய்யப்படாமல் இந்த ஒப்பந்தம் அளிக்கப்பட்டமை குறித்தும் இந்தியா கேள்வி எழுப்பியுள்ளது. (5)

# வீட்டுத் திட்டத்தைச் சீனா நிறுவனம் பொறுப்பெடுத்தது எமக்குத் தெரியாது

## இரா.சம்பந்தன் தெரிவிப்பு



கொழும்பு, ஜூன் 25

வடக்கு - கிழக்கில் 40 ஆயிரம் வீடுகளை அமைக்கும் ஒப்பந்தம் சீன நிறுவனத்துக்கு வழங்கப்பட்டமை தொடர்பிலோ, இது ஒரு சீனாவின் திட்டம் என்றோ தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குத் தெரியப்படுத்தப்படவில்லை. ஏனைய விவரங்களும் எங்களுக்குத் தெரியாது.

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

வடக்கு - கிழக்கில் 40 ஆயிரம் வீடுகளைக் கட்டும் திட்டம் சீன நிறுவனத்துக்கு ஒப்படைக்கப்பட்டமை குறித்து இந்தியா கவலை எழுப்பியதுடன், கேள்விகளையும் எழுப்பியுள்ளது.

கடந்த மார்ச் மாதம் பதுளையில் இந்த நிறுவனம் அமைத்த மாதிரி வீட்டைப் பார்வையிட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு, அதனைப் போன்ற வீடுகளை வடக்கு-கிழக்கில் அமைப்பதற்கு இணங்கியிருந்தது. இந்த மாதிரி வீட்டை அடிப்படையாகக் கொண்டு வடக்கு - கிழக்கில் வீடுகளை அமைக்க இணங்குவதாக, அமைச்சர் சுவாமிநாதனுக்கு, இரா.சம்பந்தன் கடிதம் ஒன்றையும் எழுதியிருந்தார். இந்த நிலையில், சீன நிறுவனம் வடக்கு - கிழக்கில் 40 ஆயிரம் வீடுகளை அமைக்கத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் துணை போனதாகக் குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

இதுகுறித்து, கொழும்பு ஆங்கில வார இதழ் ஒன்றுக்குக் கருத்து வெளியிட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன்:

"இது ஒரு சீனாவின் திட்டம் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குத் தெரியப்படுத்தப்படவில்லை. ஏனைய விவரங்களும் எங்களுக்குத் தெரியாது. இது முன்னர் பரிந்துரைக்கப்பட்ட உலோக வீடுகளுக்கு மாற்றானதாக அறிவிக்கப்பட்டது. கூட்டமைப்பின் சில நாடாளுமன்ற உறுப்பினர்கள், மலையகத்தில் அமைக்கப்பட்ட மாதிரி வீடுகளைப் பார்வையிட்டு, திருப்தி வெளியிட்டனர். ஆனால் இப்போதுதான, இது ஒரு சீனத் திட்டம் என்று அறிவிக்கப்பட்டது. அத்துடன் கட்டுமானத்துக்குப் பயன்படுத்தப்படும் மூலப் பொருள்கள் தொடர்பாகவும் சில கேள்விகள் எழுப்பப்படுகின்றன. இது எமக்குக் கவலை அளிக்கிறது. எமது நாடாளுமன்ற உறுப்பினர்கள் சென்று பார்வையிட்ட போது, சிலவற்றை அறியவில்லை. இது எப்படிப் போகிறது என்று பார்ப்போம்" என்று தெரிவித்தார். (5)

# தயானுக்கு வலுக்கிறது எதிர்ப்பு



கொழும்பு, ஜூன் 25

ரஷ்யாவுக்கான தூதுவராக நியமிக்கப்படுவதற்குப் பெயரிடப்பட்ட கலாநிதி தயான் ஜயதிலகவுக்கு, 100இற்கும் மேற்பட்ட சிவில் சமூகப் பிரதிநிதிகளும், மனித உரிமை அமைப்புக்களும் எதிர்ப்புத் தெரிவித்தன.

நாட்டின் பெயரைக் காப்பாற்றிக் கொள்வதற்கு, இவரை ரஷ்யாவுக்கான தூதுவராக நியமிக்கும் முடிவைக் கைவிடுமாறு அரச தலைவர் மைத்திரிபாலவிடம் இவர்கள் கேட்டுக் கொண்டனர்.

முன்னைய ஆட்சிக்காலத்தில் நீதிக்குப் புறம்பான படுகொலைகளை நியாயப்படுத்தும் வகையில் செயற்பட்ட தயான் ஜயதிலக, ரஷ்யத் தூதுவராக நியமிக்கப்படுவதற்கு, நாடாளுமன்றத்தின் உயர் பதவிகளுக்கான குழுவிடம், 100 வரையிலான சிவில் சமூகச் செயற்பாட்டாளர்கள் மற்றும் கல்வியாளர்களும், 14 அமைப்புக்களும் எதிர்ப்பை வெளியிட்டனர்.

அத்துடன் தயான் ஜயதிலகவின் நியமனத்தை நிராகரிக்குமாறும் அவர்கள் கோரியுள்ளனர்.

புதிய அரசமைப்பை ஆதரிப்போர் கொல்லப்பட வேண்டும் என்று வலியுறுத்திய, கோத்தபாய ராஜபக்சவால் உருவாக்கப்பட்ட வியத்மக அமைப்பின் முக்கியமான ஒரு நபராக தயான் ஜயதிலக இருக்கிறார் என்பதையும் இவர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

ரஷ்யாவுக்கான தூ துவராகத் தயான் ஜயதிலகவை நியமிக்க அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன திட்டமிட்டார். எனினும், நாடாளுமன்ற உயர் பதவிகளுக்கான குழு இதற்கு அனுமதி அளிக்க வேண்டும்.

இந்த நியமனத்துக்கு எதிர்ப்புகள் இருந்தால் தெரிவிக்குமாறு நாடாளுமன்ற உயர் பதவிகளுக்கான குழு கோரியிருந்த நிலையிலேயே, சிவில் சமூகத்தினர் அவருக்குக் கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர். (5)

# ஜனநாயகத்தை நிலைநாட்டியவர் ஹிட்லர் போன்று செயற்படுவாரா?

## கலாநிதி நாலக்க கொடஹேவா கேள்வி

கொழும்பு, ஜூன் 25

வடக்கு - கிழக்கு உட்பட நாட்டில் ஜனநாயகத்தை நிலைநாட்டுவதற்குக் காரணமாக இருந்த முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ச சர்வாதிகாரி ஹிட்லர் போன்று செயற்படுவாரா?

இவ்வாறு கோத்தபாய ராஜபக்சவின் வியத்கம அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் கலாநிதி நாலக்க கொடஹேவா கேள்வி எழுப்பியுள்ளார்.

முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்சவின் 69ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு நடைபெற்ற சமய நிகழ்வின்போது அதில் கலந்து கொண்ட அஸ்கிரிய பீடத்தின் துணைத் தலைவர் வண.வெதருவே உபாலி தேரர் வழங்கிய ஆசீர்வாதப் பேச்சில் ஹிட்லருடன் தொடர்புபடுத்தி ஆற்றிய உரைசம்பந்தமாகச் சர்ச்சைகள் எழுந்த நிலையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

முன்னாள் பாதுகாப்புச் செயலரே இந்த நாட்டில் குருதி சிந்துவதற்குக் காரணமாக இருந்த போரை நிறைவுக்குக் கொண்டுவந்து அமைதியான இலங்கையை உருவாக்கக் காரணியாக இருந்தவர். போர் நிறைவடைந்த பின்னர் வடக்கிலும் சரி கிழக்கிலும் சரி அரசின் பங்காளிகளாகச் செயற்பட்டுக் கொண்டிருந்த தமிழ்த் தரப்பிடத்தில் இருந்த ஆயுதங்களை மீளக் களைந்திருந்தார். இதன் காரணமாக அரசின் ஆட்சியில் பாதிப்புக்கள் ஏற்படும் வாய்ப்புக்கள் இருந்தாலும் அவர் அதைப் பொருட்படுத்தாது செயற்பட்டிருந்தார்.

இந்த ஆயுதக் களைவுக்குப் பின்னர் வடமாகாணத் தேர்தல் நடத்தப்பட்டது. ஆயுதங்களை மீளப் பெறாது தேர்தல் நடத்தப்பட்டிந்தால் முடிவுகள் எவ்வாறு அமைந்திருக்கும் என்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வடக்கில் பெரும் வெற்றி பெறும் என்று நன்கு அறிந்திருந்தபோதும் மேற்படிச் செயற்பாட்டைத் துணிந்து எடுத்திருந்தார். அரசியல் இலாபங்களைக் கடந்து நாட்டின் நலன் சார்ந்து அவருடைய முடிவுகளைச் சிந்திக்கத் தவறக்கூடாது.

அவருடைய பிறந்த தின உரையின்போது வணக்கத்துக்குரிய தேரர் நாட்டின் அவல நிலையைச் சுட்டிக்காட்டியிருக்கின்றார். பாதாள உலகக்குழுக்களின் செயற்பாடுகள், நீதி நிர்வாகக் கட்டுப்பாடற்ற நிலமையால் முழு நாட்டிலும் காணப்படும் அமைதியற்ற நிலமை போன்ற பல விடயங்களைக் குறிப்பிட்டார். மிக மோசமான நிலமைக்குள் நாடு இருப்பதால் மக்கள் கொண்டிருக்கும் ஆதங்கத்தின் வெளிப்பாட்டையும் சுட்டிக் காட்டியிருந்தார்.

அவற்றையெல்லாம் புரிந்துகொள்ளாதும் சிந்திக்காதும் பொய்யான பரப்புரை முன்னெடுக்கப்படுகின்றது. தேரர் குறிப்பிட்ட விடயத்தை நன்கு அவதானித்தால் உண்மைத் தன்மையைப் புரிந்து கொள்ள முடியும் - என்றார். (5,31)

இரு மாதங்களுக்கு ஒருமுறை மின்மானி வாசிக்கப்படுவதால்

# துண்டிக்கப்படுகிறதா? இலவச மின்னிணைப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 25

**இலங்கை மின்சார சபையின் மின்மானி வாசிப்பால் பொருளாதார நிலையில் பின்தங்கிய குடும்பங்களுக்கு இலவசமாக வழங்கப்பட்ட மின்சார இணைப் புகள் கூடத் துண்டிக்கப்படும் நிலை அண்மைக்காலமாக ஏற்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது. இரண்டு மாதங்களுக்கு ஒரு முறை மின்வாசிப்புஇடம்பெறு வதால் அதிகரிக்கும்கட்டணங்களை அடுத்தேஇந்த நிலை ஏற்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகிறது.**

இலங்கை மின்சார சபையினால் வடக்கு மாகாணத்தில் கடந்த ஒரு வருடத்துக்கு மேலாக இரண்டு மாதங்களுக்கு ஒரு தடவை மின் வாசிப்பு மேற்கொள்ளப்பட்டு கட்டணம் அறவிடப்படுகிறது. இதனால் பலருக்கு மின்பாவனை அளவு அதிகரித்துக் காணப்படுகிறது.

இரு மாதங்களின் பாவனையின் போது மின்பாவனை அலகு அதிகரித்துக் காணப்படுவதால் அதற்கேற்றகட்டணம்பதிவுசெய்யப்பட்டு சிட்டை வழங்கப்படுகிறது.

மின்சாரசபையினர்குறித்தமின்பாவனை அலகுக்கெனகட்டணங்கள் அறிவித்துள்ளனர். அந்த அலகுக்கு மேல்பாவிக்கப்பட்டால்கட்டணமும் அதிகரித்துக் காணப்படுகிறது.

மாதாந்தம்மின்வாசிப்புமேற்கொள்ளப்படும் போது பதிவு செய்யப்படும் கட்டணம்தற்போதையநடைமுறையால் இரு மடங்குக்குப் பதிலாக நான்கு மடங்கு கட்டணம் பதிவு செய்யப்பட்டு வழங்கப்படுகிறது.

பொருளாதாரநிலையில்பின்தங்கிய குடும்பங்களின் குடியிருப்புகளுக்கு இலவசமாக மின்சாரம் வழங்கப்பட்டபோதிலும் இரு மாதங்களுக்கு ஒரு முறை மின்மாணி வாசிப்பு இடம்பெறுவதால்அந்தக்குடும்பங்களுக்கு வழங்கப்படும் சிட்டையின் பிரகாரம்பாவனைக்கட்டணத்தைச் செலுத்த முடியாத நிலை பல குடும்பங்களுக்கு ஏற்பட்டுள்ளது.

குறிப்பிட்ட தொகைக்கு மேல் நிலுவைப் பணம் செலுத்தாவிடின் மின் இணைப்புத் துண்டிக்கப்படுகிறது.

மாதாந்தம் மின் சிட்டை வழங்கும் போதுகட்டணத்தைச்செலுத்திவந்த பலகுடும்ப்ங்கள்இருமாதங்களுக்கு ஒரு முறை மின்சிட்டை வழங்கும் போது அதனைச் செலுத்த முடியாமல் தவிக்கின்றனர்.

மின்சாரத்தின் தேவை அதிகம் என்பதால் பாவனயும் அதிகரித்துச் செல்கின்றன.

மாதாந்தம் மின்மானி வாசிக்கப்படும்போதுவழங்கப்பட்டசிட்டையை விட இரு மாதங்களுக்கு ஒரு முறை வழங்கும் போது அதிக கட்டணம் குறிப்பிடப்படுவதால் அதனைச் செலுத்த முடியாத நிலை அனைவருக்கும் ஏற்படுகிறது மின் கட்டணம் செலுத்த முடியாததால் பல குடும்பங்களின் மின் இணைப்பு துண்டிக்கப்பட்டுள்ளது அவர்கள் பொருளாதாரநிலையில் பின்தங்கியவர்களாகவே காணப்படுகின்றனர்.

இது தொடர்பாக இலங்கை மின்சார சபையுடன்தொடர்புகொண்டபோது; மின்பாவனையாளர்களின் எண்ணிக்கைக்கேற்பமின்மானிவாசிப்பவர்களின் எண்ணிக்கை குறைவு என்பதால் இருமாதங்களுக்கு ஒரு முறை மின்மானி வாசிக்கப்பட்டு நாள்அடிப்படையில்கட்டணம்பிரிக்கப்பட்டு பாவ்னையாளர்களுக்குச் சிட்டை வழங்கப்படுகிறது என்றனர். கடந்த ஒரு வருடத்துக்கு முன்னர் கூறிய வார்த்தைகளையே தற்போதும்அவர்கள்கூறுகின்றனர்.

மின் விநியோக எல்லையை அதிகரித்துச்செல்லும்இலங்கைமின்சார சபையினர் அதிகரித்துச் செல்லும் அளவுக்கு மின்மானி வாசிப்பவர்களின் எண்ணிக்கையையும் அதிகரித்திருக்க வேண்டும். யாழ்ப்பாண மாவட்டத்தில் ஆயிரக்கணக்கான இளைஞர்கள் வேலைவாய்ப்பின்றிக் காணப்படுகின்றனர். அவர்களைநாளாந்தக்கட்டணஅடிப்படையில் நியமித்து மாதாந்தம் மின்மானிவாசித்தால்பாவனையாளர்களுக்குஏற்படும்சிரமங்கள்தவிர்க்கப்படும். கடந்த ஒரு வருடத்துக்கு மேலாக மேற்கொள்ளப்பட்டு வரும் இரு மாதங்களுக்கு ஒரு தடவை மின்வாசிப்பினால் கோடிக்கணக்கான பணம் மின்சார சபை பாவனையாளர்களிடமிருந்துஅதிகரித்த கட்டணமாக அறவிடப்பட்டிருக்கும். அந்தப் பணத்திலாவது எமது மாவட்ட இளைஞர்களை மின்மானி வாசிப்பவர்களாக நியமித்து அந்தக் குடும்பங்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதுடன்மின் பாவனையாளர்களும்பயன்பெறமுடியும் என்று மக்கள் தெரிவித்தனர். (21,9)

## 102 வயதில் உயிரிழந்தார் மூதாட்டி



இறப்பு வீட்டில் நான்கு தலைமுறைபங்கேற்பு

தென்மராட்சி, ஜீன் 25

102 வயதுவரை தென்மராட்சிப் பிரதேசத்தில் வாழ்ந்த ஒருவர் 102 ஆவது வயதில் நேற்றுமுன்தினம் சாவடைந்துள்ளார்.

மீசாலை அல்லாரை தெற்கைச் சேர்ந்த சின்னம்மா நாகமுத்து என்னும் மூதாட்டியே இவ்வாறு 102வயது வரை வாழ்ந்து சாவடைந்தவராவார்..

இவரது சாவு வீட்டில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நான்கு தலைமுறையினர்கலந்துகொண்டுள்ளனர்எனவும்நேற்று நடைபெற்ற இவரது இறுதிக்கிரியைகளில் பிரதேசத்தைச் சேர்ந்த பெருமளவானோர் கலந்து கொண்டனர் எனவும் தெரிவிக்கப்பட்டது. கடந்த 1917 ஆம் ஆண்டு பிறந்த மூதாட்டிக்கு ஆறு பிள்ளைகள் உள்ளனர் எனவும் மூதாட்டி நேற்று முன்தினம் வரை ஆரோக்கியமாக வாழ்ந்து வந்த்வர் எனவும் தெரிவிக்கப்பட்டது. (21,9)

## ஒட்டுசுட்டானில் கிளைமோர் மீட்புச் சம்பவம்; சாந்தபுரத்தில் ஆயுதங்களைத் தேடி வேட்டை

கிளிநொச்சி, ஜீன் 25

கிளைமோர் விவகாரத்தில் கைது செய்யப்பட்ட சந்தேக நபர் வழங்கிய தகவலுக்கு அமைய நேற்று கிளிநொச்சி, சாந்தபுரம் பகுதியில் படையினர், பொலிஸார் பெரும் தேடுதல்நடவடிக்கை ஒன்றை முன்னெடுத்தனர்.

விடுதலைப் புலிகள் அமைப்பால்தயாரிக்கப்பட்ட 20கிலோ எடையுடைய கிளைமோர், அதைஇயக்கும்ரிமோட்கருவிகள், தமிழீழவிடுதலைப்புலிகளின்வரிச்சீருடை, புலிக்கொடி என்பன கடந்த வெள்ளிக்கிழமை ஒட்டுசுட்டானில் மீட்கப்பட்டுள்ளன. அவற்றை முச்சக்கரவண்டியில் கொண்டு சென்றனர்என்றகுற்றச்சாட்டில் மூவர் கைதுசெய்யப்பட்டனர். அவர்களில் இருவர் சம்பவ இடத்திலிருந்து தப்பியோடியிருந்தநிலையில் இராணுவத்தினர், பொலிஸார் இணைந்து நடத்திய நீண்ட தேடுதலின் பின்னர் கைது செய்யப்பட்டனர்.

அவர்கள் முன்னாள் போராளிகள் என்று முதல் கட்டவிசாரணைகளில் தெரியவந்தது. அவர்களில் கிளிநொச்சி, சாந்தபுரத்தைசேர்ந்தநபர்வழங்கிய வாக்குமூலத்துக்கு அமையவே நேற்றுமுன்தினம் இரவு முதல்நேற்று வரை சாந்தபுரம் பகுதியில் தேடுதல் நடத்தப்பட்டது.

கைதான குறித்த நபர் பொலிஸார் மற்றும் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரால் சாந்தபுரத்துக்குஅழைத்துவரப்பட்டே தேடுதல்கள் இடம்பெற்றன.

இதன்போது அந்தப் பகுதிகளுக்கு எவரும் அனுமதிக்கப்படவில்லை. (21,35)

கடலட்டைவிவகாரம்;

# தீர்வில்லையேல் குடாநாட்டை முடக்கி போராடுகின்ற சூழல் உருவாகும்

*யாழ்ப்பாணக் கடற்றொழிலாளர் சம்மேளனத் தலைவர் சீற்றம்*

யாழ்ப்பாணம்,ஜீன்.25

வடக்கின் கடலட்டைப் பிரச்சினைக்கு விரைந்து தீர்வுகாண கொழும்பு அரசு தவறும் பட்சத்தில் குடாநாட்டை முற்று முழு தாக முடக்கி பெரிய போராட்டங்களில் ஈடுபடுகின்ற சூழல் உருவாகும் என்று யாழ்ப்பாணக்கடற்றொழிலாளர் சம்மேளனத் தலைவர் வே. தவச்செல்வம் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் வடமராட்சிக் கடற்பகுதியில் வெளிமாவட்ட மீனவர்களின் கடலட்டைத் தொழில் காரணமாகப் பிரச்சினைகள் எழுந்துள்ளன.

இது தொடர்பில் கவனவீர்ப்புப் போராட்டங்களும் இடம்பெற்றன. எனினும் அங்குஅத்துமீறியகடலட்டைத்தொழில் இடம்பெறுகிறது என்று தெரிவிக்கப்படுகிறது.

அட்டைத்தொழிலில்ஈடுபட்டனர்என்று தெரிவித்து தொழிலாளர்களால் சிலர் அண்மையில்பிடிக்கப்பட்டுமிருந்தனர். இவ்வாறான ஒரு சூழலிலேயே சம்மேள்னத்தலைவர்இவ்வாறுதெரிவித்தார்.

அவர்தெரிவித்ததாவது:

வெளிமாவட்ட மீனவரின் கடலட்டைத் தொழிலில் அரசு கூடுதலான அக்கறை செலுத்தி விரைந்து நடவடிக்கை எடுக்க முன்வரவேண்டும். ஏற்கனவே கடற்றொழில் அமைச்சருக்கும், நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடையில் இடம்பெற்ற பேச்சில் எந்த வித பயனும் கிடைக்கவில்லை, வெறும் கண்துடைப்பானபேச்சேஅது. இந்த அரசுதமிழ்சமூகத்தைத் தொடர்ந்தும் ஏமாளிகளாக்க முற்படுகின்றது.

காலம்காலமாகவடக்குக்கடலைதமிழர் ஆண்டு அனுவித்து வந்த போதிலும் போருக்குப் பின்னர் தென்னிலங்கை முஸ்லிம்களின்சொர்க்கபூமியாகவடக்குக் கடல் மாறிவருகின்றது.

தென்னிலங்கையில் உள்ள முஸ்லிம் அரசியல் வாதியினுடைய செல்வாக்கைப் பயன்படுத்திக் கடற்றொழில் அமைச்சின் அனுமதியுடன் வடக்கில் சட்டவிரோதமாக நடவடிக்கை மேற்கொள்வதுடன் வடக்கின் கடல்வளத்தைச்சுரண்டியும்வருகின்றனர். வடக்கு மக்களைப் பாதாளக்குழியில் தள்ள முயற்சிக்கின்றனர். இதனைகடற்றொழிலாளர் சம்மேளனம் வன்மையாகக் கண்டிக்கின்றது. அத்துடன் தமிழ்நாடாளுமன்ற உறப்பினர்கள் மற்றும் மாகாணசபை உறுப்பினர்களும் எங்களுடையகடற்றொழில்சம்மேளனத்துடன் இணைந்து விரைவில் தீர்வுகாண முன்வ்ர வேண்டும்.

சாதாரணமாகஇந்தக்கடற்றொழிலாளர் பிரச்சினையைத் தீர்க்க முடியாத இந்த அரசு எப்போது நல்லிணக்கத்தை ஏற்படுத்தப்போகிறது -என்றார். (21,113)

## ஆனந்தசுதாகரனின்விடுதலைதொடர்பாக பாலச்சந்திரனைசந்தித்தார்சர்வேஸ்வரன்

யாழ்ப்பாணம், ஜீன் 25

வடக்கு கல்வி அமைச்சர் க. சர்வேஸ்வரன் யாழ்ப்பாணத்துக்கான இந்திய கொன்சூலர் ஜெனரல்பாலச்சந்திரனைகடந்தவெள்ளியன்று நேரில்சந்தித்துஆனந்தசுதாகரனின்விடுதலை தொடர்பாகக்கலந்துரையாடினார்.

தாயைஇழந்து, தந்தைசிறையில்அடைக்கப்பட்டதால்அநாதரவாக்கப்பட்டு, வயதானபேர்த்தியுடன் வாழ்கின்றனர் அரசியல் கைதியான ஆனந்தசுதாகரனின் பிள்ளைகள். அவர்களின் ஆரோக்கியம், பாதுகாப்பு மற்றும் எதிர்காலம் ஆகியவற்றைக்கருத்தில்கொண்டுஆனந்தசுதாகரனை அரசதலைவரின் கருணை அடிப்படையில் விடுவிக்க வேண்டுமென வடமாகாண கல்விச்சமூகமாகிய கல்விமான்கள், அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் ஆகியோரிடம் இருந்து பெறப்பட்ட 3 இலட்சம் கையெழுத்துக்கள் மற்றும்கோரிக்கைக்கடிதங்கள் குறித்த சந்திப்பின் போது பாலச்சந்திரனிடம் கையளிக்கப்பட்டன.

"இந்திய அரசு ஆனந்த சுதாகரனின் விடுதலையில் கவனம் எடுக்க வேண்டும்'' என்று இதன்போது கல்வி அமைச்சர் கேட்டுக்கொண்டார். இந்த விடயத்தை இந்திய தலைமை அமைச்சரிடம் தெரியப்படுத்தி, இலங்கைச் சிறுவர்களின்எதிர்காலத்தையும்நலனையும்கருத்தில் கொண்டு இவ்விடயம் பற்றி கவனம் எடுப்பதாக பாலச்சந்திரன் கல்வி அமைச்சரிடம் தெரிவித்திருந்தார் என்றுதெரிவிக்கப்பட்டது. (21)

# வனவளத் திணைக்களத்துக்கு எதிராக உணவு ஒறுத்துப் போராடுவதே வழி

## ஜெயபுரம் மக்கள் தீர்மானம்

**யாழ்ப்பாணம், ஜூன் 25**

**வயல் காணிகளை ஆக்கிரமித்து எல்லையிட்டு விவசாயம் செய்ய விடாமல் தடுக்கும் வனவளத் திணைக்களத்துக்கு எதிராக உணவு ஒறுப்புப் போராட்டத்தில் ஈடுபடுவதுதான் ஒரே வழி என்று கிளிநொச்சி ஜெயபுரம் கிராம மக்கள் ஆதங்கத்துடன் தெரிவித்தனர்.**

இராணுவ ஆக்கிரமிப்பை எதிர்த்து மக்கள்போராடுகின்றார்கள், நாங்கள் வனவளத் திணைக்களத்தை எதிர்த்துப்போராடவுள்ளோம்என்றும் அவர்கள்கவலை தெரிவித்தனர்.

வாழ்வதற்கு வழியின்றி இடம்பெயரும் நிலையில்கிளிநொச்சி, ஜெயபுரம் மக்கள் உள்ளனர். குடிதண்ணீர் இல்லாத நிலையில் கூட உழைப்பு இருக்கிறது என்றுநம்பி, நெடுந்தூரத்தில் இருந்து பெரும் கஸ்டங்களுக்கு மத்தியில் குடிதண்ணீரைப் பெற்று வாழ்ந்த மக்களுடைய வாழ்வாதார நிலம்பறிக்கப்பட்டதாலேயே அவர்கள் இடம்பெயரும் நிலை ஏற்பட்டுள்ளது என்று மக்கள் தெரிவித்தனர்.

கிளிநொச்சி, ஜெயபுரம்மக்கள்போராட்டத்தின்போது இடம்பெயர்ந்தனர். குடிப்பதற்குதண்ணீர் இல்லாத நிலையிலும், அந்த மக்கள் தங்களுடைய நிலத்தையும், உழைப்பையும் நம்பி மீண்டும் அங்கு குடியமர்ந்தனர்.

இன்று அவர்களுடைய நிலங்கள் அபகரிக்கப்பட்டநிலையில்வாழவழியின்றிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். வனவளத் திணைக்களம் அவர்களுடைய விவசாயக் காணிகளைப் பறித்துள்ளது. நிலங்ளைத் துப்புரவு செய்ய விடாதுதுரத்துகிறது. குறித்தநிலங்கள் மக்களுக்குச் சொந்தமானவை. அது 1985ஆம் ஆண்டு ஒரு ஏக்கர் வீதம் அரசால் வழங்கப்பட்டது. அதற்கான சான்றுகள் இன்னமும் அந்த மக்களிடமேயே உள்ளது. இந்த நிலையிலே அங்குள்ள 548ஏக்கர் காணியையும் வனவளத் திணைக்களம் முழுங்கியுள்ளது.

"ஜெயபுரம் கிராத்தில் கடந்த 1984 ஆண்டு குடியமர்த்தப்பட்டோம், அப்போது இருந்த அதிகாரிகள் ஒரு குடும்பத்துக்குஒருஏக்கர்வீதம் எமக்குவயல் காணிகளைப் பகிர்ந்தளித்தனர்.

அந்தக் காணிகள் காடுகளாக காணப்பட்டது. அதைத் துப்புரவு செய்யும் நடவடிக்கையில்ஈடுபடும்போதுநாட்டிலே பிரச்சினைகள் ஏற்பட்டன. நாட்டிலே தொடர்ச்சியான இடப்பெயர்வுகள் ஏற்பட்டதால் நாங்கள் தொடர்ச்சியாக இடப்பெயர்வுகளைச் சந்தித்து விவசாயத்தை மேற்கொள்ளமுடியாமல் போனது. இறுதிக்கட்டப் போர் முடிவடைந்துமீண்டும்மீள்குடியமர்த்தப்பட்டோம். விவசாயத்தையே பெரிதும் நம்பினோம். ஆனால்7,8ஆண்டுகள் ஆகிவிட்டன. எம்மால் விவசாயம் செய்ய முடியவில்லை. இத்தனையும் தாண்டி ஒருவாறு விவசாயம் செய்ய காணிகளைத் துப்புரவு செய்தோம். வனவளத் திணைக்களம் தங்களுடைய காணிகள் என்று எல்லையிட்டுள்ளது. குடிப்பதற்குக் குடிதண்ணீர் இல்லை, வாழ்வதற்குநிலம் இல்லை, தொழில் வாய்ப்புகள் இல்லை, காட்டு விலங்களிடமிருந்துபாதுகாப்பில்லை. இவ்வாறு பல பிரச்சினைகளுடன் வாழ முடியுமா? எப்படி வாழ்வது? பசி பட்டினி, பஞ்சம்தலைவிரித்தாடுகிறது. நாங்கள் அல்லஎமது சந்ததிகள் இங்கு வாழவேண்டும் என்றால் அவர்கள் விவசாயம் செய்வதற்கு நிலம் வேண்டும். அந்த நிலத்தை நாமே போராடிப் பெறவேண்டும். பிரதேச செயலருக்கு தகவல்ளைத் தெரிவித்துள்ளோம். கவனவீர்ப்பு போராட்டத்தையும் மேற்கொண்டுள்ளோம். இனியும் நிலத்தைவிடுவிக்கவில்லை என்றால் வனவளத்திணைக்களத்துக்குஎதிராக உணவு ஒறுப்புப்போராட்டத்தில் ஈடுபடுவோம். அந்தப்போராட்டம் தொடர்ச்சியாகமேற்கொள்ளப்படும்என்றுகிராம மக்கள் ஆதங்கமடைந்தனர். (21)

# முல்லைத்தீவில் இன்று கவனவீர்ப்பு

முல்லைத்தீவு, ஜீன் 25

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள மருந்தகங்களின் உரிமையாளர்கள் இன்று கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்றை மேற்கொள்ளவுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாவட்டத்தில் உள்ள மருந்தகங்கள் சிலவற்றின் மீது பிராந்திய சுகாதாரப் பணிமனையினர் சட்ட நடவடிக்கை எடுத்துள்ளமைக்கு எதிர்ப்பு தெரிவித்து முல்லைத்தீவு, மாவட்டச் செயலகத்தின் முன்பாக இன்று காலை இந்தக் கவனவீர்ப்பு இடம்பெறவுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாவட்டத்தில் நான்கு மருந்தகங்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதனால் குறித்த நான்கு மருந்தகங்களும்மருந்துவழங்கும்நடவடிக்கையை கடந்த 20 ஆம்திகதி முதல் நிறுத்தியுள்ளன.

முல்லைத்தீவுமாவட்டமருத்துவமனைக்கு முன்பாக உள்ள ஒரு மருந்தகம், புதுக்குடியிருப்பில் உள்ள ஒரு மருந்தகம், மற்றும் முல்லைத்தீவு நகரில் இரண்டு மருந்தகங்கள் என நான்கு மருந்தகங்கள் இதுவரை சட்டரீதியான பதிவுகளை மேற்கொள்ளவில்லைஎன்று பிராந்திய சுகாதாரத்திணைக்களம் குற்றஞ்சாட்டியுள்ளது.

> **வடக்கு மாகாண முதல்வர் மற்றும் அரசியல்வாதிகளுக்கு மருந்தக உரிமையாளர்களின் நியாயமான செயற்பாட்டை எடுத்துக்காட்டியும், பிராந்திய சுகாதாரப் பணிமனையின் அசமந்தப் போக்கான நடவடிக்கையைக் கண்டித்தும் கவனவீப்பு போராட்டம் முன்னெடுக்கப் படவுள்ளது**

இது தொடர்பில் பிராந்திய சுகாதாரப் பணிமனைஅந்தமருந்தகங்களுக்குக் கடிதங்கள் அனுப்பியுள்ளது.

கடந்த காலங்களில் பதிவு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட போதும் பிராந்திய சுகாதாரப் பணிமனையினர் மற்றும்சம்பந்தப்பட்டஅதிகாரிகள்தங்கள் பதிவு நடவடிக்கைக்கு இழுத்தடிப்புச் செய்து தற்போது பதிவு செய்யவில்லை எனக் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

இந்த மருந்தகங்களின் பதிவு நடவடிக்கைக்குப் பெருந்தொகைப் பணத்தைச் செலவு செய்ய வேண்டிய நிலைக்கு நாம் தள்ளப்பட்டுள்ளோம். அவ்வாறு பணம் கொடுத்துப்பதிவு செய்வதாயின் இங்கு ஏன் அரசஅலுவலகங்கள் என்று மருந்தகங்களின் உரிமையாளர்கள்தெரிவித்தனர். இதற்கு எதிர்ப்புத் தெரிவித்தே இன்று கவனவீர்ப்பு இடம்பெறவுள்ளது என்றும் அவர்கள் தெரிவித்தனர். முல்லைத்தீவுமாவட்ட அபிவிருத்திக்குழுக்கூட்டம் இன்று மாவட்டச்செயலகத்தில் நடைபெறவுள்ளது. இந்த அபிவிருத்திக்குழுக்கூட்டத்துக்கு வருகைதரும்வடக்கு மாகாண முதல்வர் மற்றும் அரசியல்வாதிகளுக்கு மருந்தக உரிமையாளர்களின்நியாயமானசெயற்பாட்டைஎடுத்துக்காட்டியும், பிராந்திய சுகாதாரப் பணிமனையின் அசமந்தப்போக்கானநடவடிக்கையைக் கண்டித்தும் கவனவீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது என்றும் அவர்கள் தெரிவித்தனர். (21.ரி3)

# பனைசார் உற்பத்தியாளர்கள் வடக்கில் அதிகரிப்பு

யாழ்ப்பாணம், ஜீன் 25

கடந்த வருடங்களுடன் ஒப்பிடுகையில் வடக்கு மாகாணத்தில் பனைசார் உற்பத்தியாளர்கள் அதிகரித்துள்ளனர் என்று யாழ்ப்பாண மாவட்ட பனை அபிவிருத்திச்சபை தெரிவித்துள்ளது.

எமது மாகாணத்தின் அடையாளமாகப் பனை மரங்கள் காணப்படுகின்றன.

பனையின் ஒவ்வொரு பாகங்களும் பல்வேறு பயன்பாட்டுக்குப் பயன்படுத்தலாம். ஆகவே பனைசார்உற்பத்திப்பொருள்களைஉற்பத்தி செய்யும் பயிற்சிகளை சபை வழங்கி வருகின்றது.

இதுவரை ஆயிரத்து 95 பேர் பயிற்சிகளை நிறைவுசெய்துள்ளனர். ஆண்டுக்கு ஆண்டு உற்பத்தியார்கள் அதிகரித்துச்செல்கின்றனர்.

கடந்த 2015 ஆம் ஆண்டு 906 உற்பத்தியாளர்கள், 2016ஆம் ஆண்டுஆயிரத்து91உற்பத்தியாளர்கள் . 2017ஆம் ஆண்டு ஆயிரத்து237உற்பத்தியார்கள் என்ற எண்ணிக்கையில் அதிகரித்துச் செல்கின்றது. ஆகவே உற்பத்தியாளர்களை அதிகரிப்தற்கு அவர்களுக்கான பயிற்சிகள் தற்போது கிராமமட்டங்களில்வழங்கப்பட்டு வருகின்றதுஎன்றுதெரிவிக்கப்பட்டது. (21,7)



# சூரிய சக்தியில் நீர் இறைக்கும் செயற்றிட்டம் குடாநாட்டில்முதன்முதலில்ஆரம்பிக்கப்பட்டது

யாழ்ப்பாணம், ஜீன் 25

சூரிய சக்தியில் இயங்கும் நீர் இறைக்கும் இயந்திரப் பாவனை யாழ்ப்பாணத்தில்வெற்றிகரமாக நடைமுறைப் படுத்தப்பட்டது.

வடக்கு மாகாணத்தில் விவசாயம் மக்களின் வாழ்வாதாரத்தில் பெரும்பங்கு வகிக்கின்றது. ஆகவே விவசாயத்துக்குத் தேவையான தண்ணீரை அனைத்துக் காலத்திலும் பெற்றுக் கொள்வது அவசியம்.

விவசாயிகள் பயிர்களுக்குத்தண்ணீர் பாய்ச்சுவதற்கு மின் மோட்டர் மற்றும் மண்ணெய்யில்இயங்கும் மோட்டார்களைப் பயன்படுத்தி வருகின்றனர்.

எரிபொருள் விலை அதிகரிப்பு , மின் கட்டணம்செலுத்துவதற்கு அதிகபணம் செலவிடப்படுகின்றது.

ஆகவே இயற்கையாகக் கிடைக்கும் சூரிய ஒளியை உள்வாங்கி அதன் மூலம் செயற்படும் தண்ணீர் இறைக்கும் மோட்டர்களைத் தற்போது அரசதலைவர் செயலகம் அறிமுகப்படுத்தி வருகின்றது. இந்த மோட்டர்களை மானிய விலையில் வழங்கவும் அரசு முன்வந்துள்ளது. அரசதலைவர் செயலகம், மற்றும் நல்லிணக்க அமைச்சின் எற்பாட்டில் வடக்கு மாகாண விவசாய நிலங்களை இயற்கை சூரிய ஒளிக்கதிர் மூலமான மின்சாரத்தைப் பெற்றுச்சிறந்த நீர்ப்பாசனம் மூலமாக விவசாயத்தை மேம்படுத்தும் நோக்கில்புதியவேலைத்திட்டம்யாழ்பாணம் நவக்கிரிவடக்குமத்தியபகுதியில்அண்மையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

அந்த நிகழ்வில் வடக்கு மாகாண விவசாய அமைச்சின் பணிப்பாளர் சிவகுமார், யாழ்ப்பாண மாவட்ட சமூர்த்திப் பணிப்பாளர்என். மகேந்திரம், மற்றும் சூரிய கல நீர்வழங்கும் செயற்றிட்டத்தின் உயர் அதிகாரிகள், சமூர்த்தி உதவிப்பணிப்பாளர்கள். பொதுமக்கள், விவசாயிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (21,7)

# வலி.தெற்குப் பிரதேச சபைக்கு பவுசர் கையளிக்க நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஜீன் 25

வடக்கு மாகாண விவசாய அமைச்சால் முதலமைச்சர் அமைச்சுக்குக் கையளிக்கப்பட்ட தண்ணீர் பவுசர் வலிகாமம் தெற்குப் பிரதேச சபைக்கு வழங்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று முதலமைச்சர் அமைச்சு தெரிவித்துள்ளது.

சிறப்புச்செயற்றிட்டம் மூலம் விவசாய அமைச்சுக்கு 6 தண்ணீர்த் பவுசர்கள் வழங்கப்பட்டன. அவற்றில் நான்கு ஏற்கனவே பிரதேசசபைகளுக்கு வழங்கப்பட்டன.

எஞ்சிய 2 பவுசர்கள் உள்ளூராட்சித் திணைக்களம் முதலமைச்சர் அமைச்சின் கீழ் வருவதால் அந்த அமைச்சுக்கு வழங்கப்பட்டது.

எனினும் அவற்றில் ஒன்றை வலிகாமம் தெற்குப் பிரதேச சபைக்கும், மற்றையதை மீண்டும் விவசாய அமைச்சின் தேவைகளுக்குப் பயன்படுத்துவதற்காகக் கையளிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (21,7)

# அஞ்சல் பணியாளர்கள் திங்களன்று போராட்டம்

மட்டக்களப்பு, ஜீன் 25
மட்டக்களப்பு அஞ்சல் மற்றும் தொலைத் தொடர்பு உத்தியோகத்தர்கள் சங்கத்தினர் இன்று திங்கட்கிழமைகவனவீர்ப்புஆர்ப்பாட்டத்தை நடத்தவுள்ளனர் என்று அறிவித்துள்ளனர்.

நாடு தழுவிய ரீதியிலும், தலைநகர் கொழும்பிலும் இடம்பெற்று வரும் தொடர்ச்சியான தொடர் வேலை நிறுத்தப் போராட்டத்துக்கு அதரவு தெரிவிக்கும்வகையில்மட்டக்களப்பில் இந்தக் கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டம்ஏற்பாடுசெய்யப்பட்டுள்ளது என்று அஞ்சல் மற்றும் தொலைத் தொடர்பு உத்தியோகத்தர்கள் சங்கம் தெரிவித்தது.

அனைத்து அஞ்சல்துறை பணியாளர்களையும் மட்டக்களப்பு முதன்மை அஞ்சலகத்தின் முன்னால் இன்று காலை 8.45 மணிக்கு வருகை தந்து கவனவீர்ப்பில் கலந்து கொள்ளுமாறுசங்கம்கேட்டுள்ளது.

மட்டக்களப்பு முதன்மை அஞ்சலகத்துக்கு முன்னால் தொடங்கும் கவனவீர்ப்புப்போராட்டம்மட்டக்களப்பிலுள்ள கிழக்கு மாகாண பிரதித் தபால் மா அதிபர்காரியாலயத்துக்குச் சென்று மனு கையளிப்புடன் நிறைவு பெறும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

12 வருடங்களாக நிகழும் அஞ்சல் சேவைப் பிரச்சினைகளுக்கு உடனடியாகத் தீர்வு வழங்க வேண்டும், 5 வருடங்கள் கடந்த 2ஆம் வகுப்பு நியமனங்களை உடனடியாக உறுதி செய்யவேண்டும்,கணினி தொழில்நுட்பக் கோளாறுகளைச் சீர் செய்ய வேண்டும், ஜனவரி 10ஆம் திகதி வாக்குறுதியளித்த கெபினெட் பத்திரிகைக்கு அனுமதி வழங்கித் தீர்வைப் பெற்றுக் கொடுக்க வேண்டும், 2012 பொறுப்புப் பரீட்சையை நடைமுறைப்படுத்தவேண்டும், பொறுப்புக்கொடுப்பனவை உடனடியாகவழங்கவேண்டும், விரிவுரையாளர் சம்பளத்தைபுதியசம்பளத்துக்கு பெற்றுக் கொடுக்க வேண்டும், பொறுப்புப் பரீட்சையில் சித்தியடைந்த 1ஆம் வகுப்பு உத்தியோகத்தர்களுக்கு எம்.என். 7 வேதன மட்டத்தைப் பெற்றுக் கொடுக்க வேண்டும், அரசின் மூடிய திணைக்கள ஆட்சேர்ப்பு முறைகள் முடிவுக்குக் கொண்டு வரப்பட வேண்டும் என்பன போன்றகோரிக்கைகளை முன்வைத்தேபோராட்டம் நடத்தப்பட்டுவருகின்றது.

சக்தி வாய்ந்த அஞ்சல் மற்றும் தொலைத் தொடர்பு உத்தியோகத்தர்கள் சங்கங்கம் மற்றும் ஒருங்கிணைந்த தபால் தொழிற் சங்கங்களின்கூட்டமைப்பு ஆகியவற்றின் தொடர் வேலை நிறுத்தத்தால் கடந்த 12ஆம் திகதியிலிருந்து நாட்டின் சகல அஞ்சல் சேவைகளும் தடைப் பட்டுள்ளன. (ற)




கொழும்பு மறைமாவட்டத்தின் புதிய துணை ஆயராக அருட்திரு ஜே.டி. அன்ரனி நியமிக்கப்பட்டுள்ளார். துணை ஆயரை திருநிலைப்படுத்துவதற்கான திருப்பலி கொழும்பு கொட்டாஞ்சேனை புனிய லூசியா பேராலயத்தில் நேற்று இடம்பெற்றது. (ற.ரி2)

# தமிழர்களுக்குத் தீர்வு ஒருபோதும்கிடைக்காது

## மனோகணேசன் தெரிவிப்பு



**கொழும்பு, ஜூன்25**
**நாட்டின் தற்போதைய சூழ்நிலையில், தமிழர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வை முன்வைக்கும் அரசியல் தீர்வு ஒருபோதும் ஏற்படாது.**

இவ்வாறுதேசியசகவாழ்வு, நல்லிணக்கம்மற்றும்அரசகருமமொழிகள்அமைச்சர் மனோகணேசன்தெரிவித்தார்.

கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற நூல் வெளியீட்டுநிகழ்வொன்றில்கலந்துகொண்டுஉரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர்தெரிவித்ததாவது:
"அரசியல் தீர்வு வருமென கூறிக்கொண்டே 10 வருடங்கள்வெறுமனேகழிந்துவிட்டன. வடக்கு- கிழக்கு மக்கள் இன்னும் கண்ணீரும் கவலையுடனுமே வாழ்ந்து வருகின்றனர் எனச்சுட்டிக்காட்டினார். இதனைக் கருத்திற்கொண்டே தமிழ்த்தேசியக்கூட்டமைப்பினர் அமைச்சுப் பதவிகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

இன்றைய சூழ்நிலையில் புதிய அரசமைப்பை ஏற்படுத்துவதற்கான சூழலும் குறைவாகவே உள்ளது. அரசமைப்பு வழிநடத்தல் குழுவில்அங்கம்வகிக்கின்றவர் என்ற ரீதியில் இந்த விடயம் தொடர்பில் தமக்குத்தெரியும்என்றும்சுட்டிக்காட்டினார்.

வடக்கு- கிழக்கு மக்களின் நிலையுணர்ந்து அரசின் வளங்களைப் பகிர்ந்தளிக்கும் கடப்பாடு அரசுக்கு உண்டுஎன்றும், அந்த மக்களின் பிரதிநிதிகள் நேரடியாக அரசுக்குள் வந்து அதனைமேற்கொண்டால் மாத்திரமே வளப்பகிர்வு நியாயமானதாகவும் சரியாகவும் இருக்கும்"- என்றார். (ற-ரி5)

## விமானத்தில் உயிரிழந்த பாகிஸ்தான் நாட்டுப் பெண்

கொழும்பு,ஜீன்25
சிங்கபூர்ஷெங்கிவிமான நிலையத்திலிருந்து கட்டுநாயக்கபண்டாரநாயக்க வானூர்தி நிலையத்தை நோக்கி வந்துகொண்டிருந்த வானூர்தியில் பயணித்த பாகிஸ்தான் நாட்டுப்பெண் உயிரிழந்தார். இந்தச் சம்பவம் நேற்று அதிகாலைநடந்தது.

86 வயதுடைய நீசா எலிமுன் எனும் பெண்ணே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

விமானத்துக்குள் உயிரிழந்தபாகிஸ்தான்நாட்டு பெண்ணின் உடற்கூற்றுப் பரிசோதனைகள் நேற்று நடைபெற்றன எனப்பொலிஸார்தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் வானூர்திப் பொலிஸார் மேலதிக விசாரணைகளைமேற்கொண்டுவருகின்றனர். (ற-ரி5)

# சிறுமி வன்புணர்வு: சந்தேகநபருக்கு மறியல்

திருகோணமலை,ஜீன்25
திருகோணமலை சேருநுவர, ஈச்சிலம்பற்று பகுதியில் 15 வயது சிறுமியொருவரை வன்புணர்வுக்கு உட்படுத்திய சந்தேகநபரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

இதுதொடர்பானவழக்குநேற்றுமுன்தினம்மூதூர்நீதிமன்ற நீதிவான் எம்.எஸ்.எம்.சம்சுதீன் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதே சந்தேகநபரை எதிர்வரும்ஜீலை மாதம்13ஆம்திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் கருக்காமுனை, ஈச்சிலம்பற்று பகுதியைச் சேர்ந்த 17 வயதுடைய நபரே விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டது.

பாதிக்கப்பட்டுள்ள சிறுமி மருத்துவ பரிசோதனைக்காக வெருகல் கிராமிய மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர். (ற-ரி5)

# தங்க ஆபரணங்களை கொள்ளையிட்டவர் கைது

கொழும்பு. ஜீன்25
களுபோவிலபிரதேசத்தில்குடியிருப்பில்சுமார்ஐந்துலட்சம் பெறுமதியான தங்க ஆபரணங்களைக் கொள்ளையிட்ட ஒருவர் பொலிஸாரால் நேற்றுக் கைது செய்யப்பட்டார்.

கொஹூவலை பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற தகவலுக்கு அமையவே கைது செய்யப்பட்டார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

சந்தேக நபர் தொடர்பில் தகவல்கள் கிடைக்காத நிலையில் பொலிஸார்விசாரணைகளைமுன்னெடுத்துவருகின்றனர். சந்தேக நபரை நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளையும் முன்னெடுத்து வருகின்றனர். (ற-ரி5)






யாழ்ப்பாணம்வண்ணைமேற்குஅண்ணாமார்முருகமூர்த்திதேவஸ்தான (முருகமூர்த்தி பிள்ளையார் ஆலயம்) புனருத்தான அஷ்டமத்தன நவகுண்டாபிஷேகபிரதிஷ்டாமகாகும்பாபிசேகப்பெருவிழாவைமுன்னிட்டு நேற்று யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணை சிவன் கோவில் வீதியில் இருந்துஆரம்பித்துமுருகமூர்த்திபிள்ளையார்ஆலயம்வரை பாற்குடபவனி நடைபெற்றது. இந்த ஆலயப் பாற்குட பவனியில் யானையின் நடைபவனி மேற்கொள்ளப்பட்டது. இந்த விழாவில் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டனர். (ற.ரி5,113)

## உருக்குலைந்த நிலையில் ஆணின் சடலம் மீட்பு

மட்டக்களப்பு, ஜீன்25
வாழைச்சேனை நாசிவன்தீவு கிராம அலுவலர்பிரிவில்உருக்குலைந்தநிலையில் இனந்தெரியாத ஆணின் சடலமொன்று.நேற்றுமுன்தினம்மீட்கப்பட்டது.


நாசிவந்தீவு. கட்டுமுறிவு பாலத்தின் வாவிக்கரையில் மீன்பிடிக்கச் சென்ற மீனவர்ஒருவரேசடலமாகமீட்கப்பட்டார்.

வாவிக்கரை கண்ணாக் காட்டுப் பகுதியில் இருந்து துர்நாற்றம் வீசுவதை அறிந்து இந்த இடத்துக்குச் சென்று பார்வையிட்ட போதே , ஆணின் சடலம் கண்டுபிடிக்கப்பட்டது. பொலிஸாருக்கு வழங்கிய தகவலையடுத்து பொலிஸார் சடலத்தைமீட்டனர்எனத்தெரிவிக்கப்பட்டது.

சடலத்துக்கு அருகில் இரண்டு அலைபேசிகளும்பொதியொன்றும்கண்டெடுக்கப்பட்டுள்ளன.

இவர் 35 வயதுக்கும் 40 வயதுக்கும் இடைப்பட்டிருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகிக்கின்றனர். சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை வாழைச்சேனை பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர். (ற-ரி5)





# ட்ரம்புடன் பேச வாய்ப்பில்லை

### அசாத் அறிவிப்பு

டமஸ்கஸ், ஜீன் 25


அமெரிக்க அதிபர் ட்ரம்புடன் பேச்சு நடத்த வாய்ப்புக்கள் இல்லை என்று சிரிய அதிபர் அல் அசாத் தெரிவித்தார்.

வடகொரிய அதிபர் கிம் ஜோங் உன் அண்மையில் அமெரிக்க அதிபர் ட்ரம்பைச் சந்தித்துப் பேசியது போன்று, உள்நாட்டு போரில் சிக்கியுள்ள சிரியாவின் அதிபர் அசாத்தும் ட்ரம்பைச் சந்திப்பாரா என்று பன்னாட்டு அளவில் விவாதங்கள் நடைபெற்று வருகின்றன. இவ்வாறிருக்க "ட்ரம்பைச் சந்திக்க வாய்ப்பில்லை" என்று அழுத்தம் திருத்தமாகத் தெரிவித்துள்ளார் அசாத்.

"அமெரிக்காவுடன் பேச்சு நடத்த வாய்ப்பில்லை. அமெரிக்காவின் கொள்கைகள் ஒருபோதும் மாறாது. அந்த நாட்டுடன் பேச்சு நடத்துவது நேரத்தை வீணடிப்பதற்குச் சமமாகும். என்ன பேச வேண்டும் என்பதை அமெரிக்காதான் தீர்மானிக்கும். இந்த அராஜகப் போக்கு நிமையை மேலும் மோசமாக்கும்" என்றும் அசாத் மேலும் தெரிவித்தார். (ம)

### சிம்பாப்வே தேர்தல் பரப்புரையில்

# அதிபர் எமர்சனை கொல்லத் திட்டம்



ஹராரே, ஜீன் 25

சிம்பாப்வேயின் அதிபர் எமர்சனை இலக்குவைத்து மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் இருந்து அவர் அதிர்ஸ்டவசாக உயிர்தப்பினார்.

சிம்பாப்வேயின் அதிபர் பதவிக்கு அடுத்த மாதம் தேர்தல் நடைபெறவுள்ளது. இந்தத் தேர்தலுக்கான பரப்புரைகள் தற்போது தீவிரமாக முன்னெடுக்கப்பட்டுவருகின்றன. தற்போதைய அதிபர் எமர்ஸனும் முதன்மை வேட்பாளர்களில் ஒருவராக உள்ளார். அவரின் தேர்தல் பரப்புரைக் கூட்டமொன்று நேற்று முன்தினம் நடைபெற்றது. எமர்சன் உரையாற்றிவிட்டு மேடையில் இருந்து இறங்கு கையில் அவரை இலக்கு வைத்து கைக்குண்டு ஒன்று வீசப்பட்டது என்றும் அதில் அவர் அதிர்ஸ்டவசமாக உயிர் தப்பினார் என்றும் பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. எனினும் தேர்தல் வெற்றியை இலக்குவைத்து ஆளுங்கட்சி நடத்தும் திட்டமிட்ட நாடகமே இது என்று சிம்பாப்வே நாட்டின் எதிர்கட்சிகள் தெரிவித்துள்ளன. (ம)



# சிரியாவுக்குள் புகுந்து ஈராக் படை தாக்குதல்

### 45 ஆயுததாரிகள் சாவு

டமஸ்கஸ், ஜீன் 25

சிரியாவுக்குள் புகுந்து ஈராக் படை நடத்திய வான் தாக்குதலில் 45 ஆயுததாரிகள் கொல்லப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஈராக், சிரிய நாடுகளின் பெரும்பகுதியைக் கைப்பற்றி அவற்றைத் தனிநாடு என்று அறிவித்திருந்தது ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு. அந்த அமைப்பின் பிடியில் இருந்து ஈராக் விடு பட்டுள்ளது.

எனினும் சிரியாவுக்குள் இருந்து இன்று ஐ.எஸ். ஐ.எஸ். அமைப்பு அழிக்கப்படவில்லை. இதனால் சிரியாவில் இருந்து மீண்டும் ஈராக் நாட்டுக்குள் அந்த அமைப்பு வேரூன்றுவதற்கான சாத்தியங்கள் அதிகளவில் உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இதனால் சிரிய எல்லைக்குள் புகுந்து ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்புக்கு எதிரான தாக்குதல்களை ஈராக் மேற்கொண்டு வருகிறது.

அந்த வகையில் சிரியாவின் ஹாஜின் நகரில் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் 45 ஆயுததாரிகள் கொல்லப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ம)

### மத்திய தரைக் கடலில்

# இரு நாள்களில் 215 பேர் சாவு



திரிபோலி, ஜீன் 25

லிபியாவில் இருந்து ஐரோப்பா நோக்கி சென்ற இரு வேறு படகுகள் நேற்றுமுன்தினமும், கடந்த வெள்ளிக்கிழமையும் கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் அவற்றில் பயணித்த 215 பேர் உயிரிழந்தனர்.

கடந்த வெள்ளிக்கிழமை 100 பேருடன் சென்ற படகொன்று கவிழ்ந்ததில் 95 பேர் உயிரிழந்தனர். 5 பேர் மீட்கப்பட்டு மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டனர். நேற்றுமுன்தினம் 160 பேருடன் சென்ற படகொன்று விபத்துக்குள்ளானதில் அதில் பயணித்த 120 பேர் உயிரிழந்தனர். இதையடுத்து இருவேறு படகு விபத்துக்களிலும் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 215ஆக அதிகரித்தது. (ம)

# கோமைத்தனமான செயல் என்கிறார் அதிபர் எமர்சன்

ஹராரே, ஜீன் 25



தனது தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் நடத்தப்பட்ட தாக்குதல் கோழைத்தனம் மிக்க அற்பத்தனமான செயல் என்று கருத்துத் தெரிவித்தார் சிம்பாப்வேயின் அதிபர் எமர்சன். தேர்தல் பரப்புரைக் கூட்டத்தின் போது கைக்குண்டு வீசப்பட்டமைக்குக் கண்டனம் தெரிவித்து உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

"தேர்தல் பரப்புரைக் கூட்டம் மிகவும் அமைதியான முறையில் சுற்றுச்சூழலுக்கு எந்த பாதிப்பும் இன்றி நடைபெற்றது. தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் வெடிகுண்டு வீசி தாக்குதல் நடத்துவது மிகவும் கோழைத்தனமான செயல். இதுபோன்ற செயலை நாங்கள் ஏற்றுக்கொள்ள மாட்டோம்" என்று எமர்சன் மேலும் தெரிவித்தார். (ம)

# வடகொரியாவிடம் இருந்து அச்சுறுத்தல் உள்ளது நாடாளுமன்றுக்கு வழங்கிய அறிக்கையில் ட்ரம்ப்

வொஷிங்டன், ஜீன் 25



வடகொரியாவிடம் இருந்து ஆணுவாயுத அச்சுறுத்தல் இல்லை என்று கருத்துத் தெரிவித்திருந்த அமெரிக்க அதிபர் ட்ரம்ப், அமெரிக்க நாடாளுமன்றத்துக்கு நேற்றுமுன்தினம் வழங்கிய அறிக்கையில் "வடகொரியாவில் இருந்து அணுவாயுத அச்சுறுத்தல்கள் தற்போதும் தொடர்கிறது" என்று குறிப்பிட்டுள்ளார்.

அமெரிக்காவும் வடகொரியாவும் பரம எதிரி நாடுகளாக இருந்தன. இந்த நிலையில் இந்த இரண்டு நாடுகளின் அதிபர்களான ட்ரம்ப், கிம் ஜோங் உன் இருவரும் சிங்கப்பூரில் கடந்த மாதம் 12ஆம் திகதி சந்தித்துக் கொண்டனர். இந்தச் சந்திப்பு பெருவெற்றி பெற்றதாகக் குறிப்பிட்டு வந்தார் ட்ரம்ப். அமெரிக்காவுக்கு இனி வடகொரியாவிடம் இருந்து அணுவாயுத ஏவுகணை அச்சுறுத்தல் இல்லை.

அமெரிக்க அதிபர்கள் எவரும் செய்யாத, செய்யத் துணியாத காரியத்தை நான் செய்துள்ளேன் என்று அவர் பெருமை பேசி வந்தார். இவ்வாறிருக்க அமெரிக்க நாடாளுமன்றத்துக்கு நேற்றுமுன் தினம் வழங்கிய அறிக்கையில் "வடகொரியாவிடம் இருந்து அணுவாயுத அச்சுறுத்தல் உள்ளது" என்று அவர் குறிப்பிட்டுள்ளமை முன்பின் முரணாக அமைந்துள்ளது. (ம)


ES
Printers
குறைந்த விலையில் உங்களுடைய
சகல அச்சக வேலைகளையும்
செய்து பெற்றுக்கொள்ள
இன்றே நாடுங்கள்...
BATTLE NORTH
AR.Rodry
18
மணியம் கபே
Maniyam Cafe
பனர் பிரிண்ட்
(Banner),
35/=
பனர் பிரிண்ட் (Banner),
வியாபார மற்றும்
ஏனைய நிறுவனங்களுக்கான
பெயர் பலகைகள் (Name Board).
மக் பிரிண்ட். ரீ-சேட். புத்தகங்கள்.
கையேடு (Handbills).
நோட்டீஸ் (Notice) மற்றும்
அன்னைத்து ஓவ்செற்.
டிஜிற்றல் அச்சக வேலைகள்
சகல நிறுவனங்களுக்குமான
பட்டியலேடு ( Bill Book)
காபன் பிரதி மற்றும் காபன்
பிரதி அற்ற, வர்ண மற்றும்
கறுப்பு வெள்ளை நிறத்தில்.
விரும்பிய அளவுகளில்
குறித்த நேரத்தில்
குறைந்த விலையில்
தரமாக செய்துதரப்படும்.
K'si காசி
GVS
357. கஸ்தூரியார் வீதி.
யாழ்ப்பாணம்.
கரடிப் போக்குச் சந்தி. ஏ-9 வீதி.
கிளிநொச்சி.
நவீன சந்தை. முதலாம் மாடி. சாவகச்சேரி.
021 222 7432
021 492 7454 / 021 492 7471 / 021 492 7472
esprintersjaffna@gmail.com
www.esprinters.com

# யாழ்ப்பாணம்-வண் வடமேற்கு

# திருவருள்மிகு ஸ்ரீ

# மஹாகணபதி மூர்த்

## (முருகமூர்த்தி பிள்

# மஹா கும்பாபிஷே

## இன்று (25.06.2018) திங்கட்கி

## முற்பகல் 9.30 -11.25 வரை

### மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம்
### செஞ்சொற்செல்வரின் ஆசிச்செய்தி

யாழ்ப்பாணம் வண்ணை விஸ்வலிங்க மகா கணபதி தேவஸ்தானத் திருக்கோயில் மகா கும்பாபிஷேகம் குறித்து வாழ்த்துவதில் மிகவும் ஆனந்தமடைகின்றேன். திருக்கோயில்கள் காலத்துக்குக் காலம் புனர் நிர்மாணம் செய்தல் அடியார்களின் கடமையாகும். சமூகம் விருத்தி பெறுவதற்கு ஆலயங்கள் நேர்த்தியாகப் பேணுதல் அவசியமாகும். எம் மண்ணிலுள்ள சமயங்களில் ஆதியானது சைவம். ஏனைய மதங்கள் படையெடுப்புக்களால் பரவியவை என்பதை யாவரும் ஒப்புக்கொள்வர். புண்ணிய பூமியாகிய சிவபூமியில் எம்முன்னோரின் வழிபாட்டு மரபில் விநாயக வழிபாடு முக்கியத்துவ ம் பெற்றுள்ளது அவ்வகையில் வண்ணை விஸ்வலிங்க மகா கணபதி விநாயகர் ஆலயம் இவ்வூர் மக்களால் நன்கு பாதுகாக்கப்பட்டு வருகிறது. பல லட்சம் ரூபா செலவில் பல்வேறு திருப்பணிகள் பூர்த்தி செய்யப்பட்டு முன்னோர் நெறியில் காக்கும் பக்தர்கள் நன்றிக்குரியவர்கள் - இத்திருக்கோயில் மகா கும்பாபிஷேகம் சிறக்கப் பிரார்த்திப்பதோடு எம் மண்ணில் தர்மம் சிறக்க அனைவரும் வேண்டுதல் செய்வோம். இத்திருக்கோயில் திருப்பணியில் பங்கு கொண்ட அனைவருக்கும் நல்லாசி கூறி அமைகிறேன்.

**கலாநிதி ஆறு. திருமுருகன்**
**தலைவர், ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தானம் தெல்லிப்பழை**
**தலைவர், சிவபூமி அறக்கட்டளை இலங்கை.**

### பிரார்த்தனையுரை

பழமையும் பெருமையும் பொருந்திய சைவ சமயத்தின் முதற் கடவுள் விநாயகப் பெருமானின் புகழ்மிக்க ஆலயமாக வண்ணை ஸ்ரீ விஸ்வலிங்க மஹா கணபதி மூர்த்தி ஆலய மஹா கும்பாபிஷேக பெருவிழா இன்று (25.06.2018) சிறப்புற முழு முதற் கடவுளை பிரார்த்திக்கின்றேன்.

மேற்படி ஆலயத் திருப்பணி நிறையெய்துவதற்கு எமது ஆலய திருப்பணி சபையினரின் விடா முயற்சியும் பல சிரமங்களுக்கு மத்தியிலும் செயல்பட்டு நிறைவு செய்தமைக்கு நிர்வாக சபை சார்பாக பாராட்டுகின்றேன். மேலும் இத் திருப்பணி சிறப்புற சிறுவர்கள், இளைஞர்கள்,பெரியவர்கள் முதல் இந்த ஆலயத்தில் தொண்டு செய்பவர்களை பார்க்கும்போது .

"நிலை பெறுமா றெண்ணுதியேல் நெஞ்சே நீவா"

என்ற தேவார பாடலில் அப்பர் சுவாமிகள் இறை தொண்டின் மகிமையை விளக்கியது. இவ்வூர் மக்கள் காட்டிய சிறப்பன்றோ!

மேலும் இத் திருப்பணி சிறப்புறவும், மக்கள் நலம் பெற, நாட்டில் அமைதி சமாதானம் உருவாக விநாயக பெருமானின் பாத கமலங்களை வணங்கி அவன் அருள் வேண்டி பிரார் த்திக்கின்றேன்.

**த.க. சோமசுந்தரம் நிர்வாக சபைத் தலைவர்**
**வண்ணை ஸ்ரீ விஸ்வலிங்க மஹா கணபதி மூர்த்தி தேவஸ்தானம்.**

### ஆசிச் செய்தி

யாழ் - வண். வடமேற்கு அண்ணமார் களனிப் பதி திருவருள் மிகு ஸ்ரீ விஸ்வலிங்க மஹா கணபதி மூர்த்தி தேவஸ்தானம் (முருகமூர்த்திப் பிள்ளையார்) ஆலயம் புனரமைக்கப்பட்டு இன்று மஹாகும்பாபி ஷேகப் பெருவிழா காண்பது அப்பிரதேச மக்களின் இறை நம்பிக்கையையும் ஒற்றுமையையும் பிரதிபலிக்கின்றது.

ஆலயங்கள் புனரமைக்கப்பட்டு கும்பாபிஷேகம் நடத்தப்படுவது அவ்வாலயம் அமைந்துள்ள சூழலையும், பிரதேசத்தையும் புனிதப்படுத்துகின்றது. கும்பாபிஷேகம் எனப்படுவது எங்கும் நிறைந்த பிரபஞ்ச சக்தியை கும்பம், அக்னிகாரியம், வேத பாராயணம் இவற்றின் மூலம் விக்கிரகத்தில் எழுந்தருளச் செய்யும் நிகழ்வாகும்.

இவ்வாறு சக்தியூட்டப்பட்ட விக்கிரகத்தை கும்பாபிஷேக தினத்தன்று நேரில் தரிசிக்காமல் கண்ணாடியில் தோன்றும் விம்பத்தில் தரிசிக்கின்றோம். இச் செயற்பாடானது. நாம் என்றும் அப்பரம் பொருளின் விம்பங்களையே எங்கும் தரிசிக்கின்றோம் என்பதைக் குறித்து நிற்கின்றது. இத்தகைய விழாக்களைத் தரிசிக்கும் அடியார்கள் தொடர்ந்து தினமும் ஓர் சிறிதளவு நேரத்தையாவது இறைவழிபாட்டுக்கென ஒதுக்குவது அவர்களது வாழ்வில் சிறந்த பயனை விளைவிக்கும்.

இத்தகைய சிறப்பு வாய்ந்த இப் பெருவிழா இனிதே நிறைவேறவும், இதனை முன்னிட்டு வெளிவரும் சிறப்பு மலர் சிறப்பாக வெளிவரவும் ஆசிவேண்டி எல்லாம் வல்ல ஸ்ரீ விஸ்வலிங்க மஹா கணபதிப் பெருமானையும் பூஜ்ய குரு தேவரையும் பிரார்த்திக்கின்றோம்.

"இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க"

**இறை பணியில், சுவாமி சிதாகாசானந்தா**
**சின்மயா மிஷன், யாழ்ப்பாணம்.**

### பெருஞ்சாந்தி காண வாரீர்!

வளம்பல கொண்டிலங்கு வண்ணைநகர் விளங்கிடு
விஸ்வலிங்க மகாகணபதிப் பெருங்கோயில் - தன்னில்
பெருஞ்சாந்திப் பெருவிழாக் காணக் கண்ணாயிரம்
படைத்திலனே அந்த பிரமன்தானே!

ம்முழுமுதற் கடவுளாகப் போற்றப்படும் விநாயகப் பெருமான் விஸ்வலிங்க மகா கணபதி மூர்த்தி எனும் நாமம் கொண்டு வண்ணையம் பதியில் வீற்றிருந்து அருள் பாலித்துக்கொண்டிருக்கும் இத் திருக்கோயிலில் நீண்ட நிறை வான திருப்பணிகள் நிறைவு பெற்று பெருஞ்சாந்தி விழாவாகிய திருக்குடமுழுக்கு நடைபெறுவதையிட்டு இவ்வூரே விழாக்கோலம் பூண்டுள்ளது. இவ்வேளையில் வெளிவரும் இச் சிறப்பு மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெரு மகிழ்வடைவதோடு இச்சிறப்பான கும்பாபிஷேகப் பெருவிழாவை எம்பெருமான் அயலில் வாழ்ந்து காணக் கிடைப்பதைப் பெரும் பேறாக கருதுகின்றேன். இவ் அரிய புண்ணிய கைங்கரியத்தில் பங்கு கொண்ட இவ்வூர் வாழ் பெருமக்களுக்கும் சரியைத் தொண்டில் ஈடுபட்ட இளைஞர்களுக்கும் எல்லாம் வல்ல விநாயகப்பெருமானு டைய திருவருள் கிடைப்பதோடு நாட்டு மக்கள் அனைவருக்கும் சுபீட்சமான வாழ்வு கிடைக்கவேண்டும் எனவும் எம் பெருமானைப் பிரார்த்தித்து இவ்வாலயத்தில் அறப்பணிகள் மென் மேலும் தொடர வாழ்த்தி அமைகிறேன்.

"மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்"

**வை.சுரேஸ் (M.A)**
**கிராம உத்தியோகத்தர் (J/98)**





எடுக்
நடக்
தடக்
களி

மெய்யடியார்கள்,

விராட் புருஷனாது இடைநாடிஸ்தானம் எனப் போற்றப்படுவதும் சிவபூமி புண்ணியபூமி எ இறைவழிபாடும் சிறந்துவிளங்கும் யாழ்ப்பாணம் வண்ணை அருள்மிகு ஸ்ரீ விஸ்வலிங்க ம வருடம் ஆனித் திங்கள் 11 ஆம் நாள் (25.06.2018) திங்கட்கிழமை திரயோதசி திதியு சிம்மலக்கின சுபமுகூர்த்தத்தில் மஹா கும்பாபிஷேகம் நடைபெற விநாயகப் பெருமான் கிரியாகாலங்களில் கலந்து கொண்டு பக்தியோடு வந்தனம் செய்து இறையருள் இன்பத் நல்லவண்ணம் வாழ்வீர்களாக!


## கும்பாபிஷேகம் சிறப்புற வாழ்த்துவோர்

**வண்ணை**
**ஸ்ரீ விஸ்வலிங்க மஹாகணபதி**
**மூர்த்தி ஆலய**
**முருகமூர்த்தி**
**இளைஞர்கள்**

**விமலா களஞ்சியம்**
பலசரக்கு வியாபாரம்
மொத்தமாகவும் சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ளலாம்.
இல.6, ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி,யாழ்ப்பாணம்.
தொ.பே.: 077 199 9618

**B.K.மல்ரிசொப்**
மின் உபகரணங்கள், T.V அன்ரனாக்கள்,
PVC பைப் வகைகள், கல்வனைஸ் பைப்
வகைகள் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.
No.03 K.K.S. Road,
Kokuvil.
T.P. 021 221 7704

ஜ
ஆடியபாதம் வீ

**செல்வம் ஸ்ரோர்ஸ்**
இல.41,முருகமூர்த்திவீதி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்
தொ.பே.: 021 221 7241

**சுகந்தன்**
**சிவில் வேர்க்ஸ்**
பிரவின் அரச ஒப்பந்தகாரர்
முருகமூர்த்தி வீதி,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

**ராஜா ஸ்ரோர்ஸ்**
இல.59, முருகமூர்த்தி வீதி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.
தொ.பே.: 077 421 0080

**கணேசா**
**களஞ்சியம்**
இல.18/4, முருகமூர்த்தி வீதி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

**அம்ச மஹால்**
**திருமணமண்டபம்**
ஆடியபாதம் வீதி,
கொக்குவில் மேற்கு, கொக்குவில்.
தொ.பே.: 021 222 3488,
077 030 418

**Senthil**
**Complex**
No.88,
Sivapiragasam Road,
(Near Thaddartheru Junction)

**மேகவண்ணன்**
**லைற் அன் சவுண்ஸ்**
1/2, கோயில் வீதி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.
தொ.பே.: 077 623 7009

**விஜயா**
**மிக்சர் அன் சுவிற்ஸ்**
இல.06, பஸ் நிலையம்,
யாழ்ப்பாணம்.
தொ.பே.: 077 648 7264

# கு-அண்ணமார்களனிப்பதி
# ஸ்ரீ விஸ்வலிங்க
# ர்த்தி தேவஸ்தானம்
# ர்ளையார் ஆலயம்)
# ஷேகப் பெருவிழா

கிழமை
ரை



திருச்சிற்றம்பலம்

டுக்குமாக் கதை இன்தமிழ்ச் செய்யுளாய்
டக்குமேன்மைநமக்கருள் செய்திடத்
டக்கைஐந்துடைத் தாழ்செவிநீண்முடிக் கடக்
களிற்றினைக் கருத்துள் இருத்துவாம்.

திருச்சிற்றம்பலம்

ி என விதந்து கூறப்படுவதுமான இலங்கைத் திருநாட்டின் வடபால் சைவமும் தமிழும் மஹா கணபதிக்கும் ஏனைய பரிவார மூர்த்திகளுக்கும் நிகழும் மங்கலகரமான விளம்பி ியும், அனுஷ நட்சத்திரமும் கூடியமுற்பகல் 9.30 மணிமுதல் 11.25 மணிவரையுள்ள ான் திருவுளம் கொண்டருளியுள்ளார். அடியார்கள் ஆசாரசீலர்களாக கும்பாபிஷேகக் த்தோடுநாம் வாழ்வில் பெறவேண்டிய பதினாறு செல்வப்பேறுகளும் பெற்றுமண்ணில்

## ஆசியுரை



சிவபூமி என திருமூலரால் அழைக்கப்பட்ட இலங்கையின் வட பாகத்தில் யாழ்ப்பாணம் அமைந்துள்ளது. யாழ்ப்பாணத்து சைவ சமய மரபில் கோயில்கள் நிறைந்து விளங்கும் சிறப்பும், சைவத்தமிழ்ப் பாரம்பரியங்கள் சிறந்து விளங்கும் சிறப்புடையன. இம்மரபில் யாழ்ப்பாணம், வண்ணார்பண்ணை வடமேற்கு அண்ணமார் களனிப்பதி ஸ்ரீ விஸ்வலிங்க மஹாகணபதி மூர்த்திக்கு மஹாகும்பாபிஷேகம் நிகழ்வதனையொட்டி ஆசியுரை வழங்குவதில் பெருமகிழ்வடைகின்றேன்.

சிவாகம மரபில் தெய்வசானித்தியம் மேன்மையடைவதற்கு பன்னிரெண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை நிகழும் சிறப்புக் கிரியை மஹா கும்பாபிஷேகம் எனும் பெருஞ்சாந்தி நிகழ்வாகும். முருகமூர்த்திப்பிள்ளையார் ஆலயம் என அழைக்கப்படும் இவ்வாலயம் மிக நீண்ட வரலாற்றுப் பாரம்பரியங்களைத் தன்னகத்தே கொண்டுள்ளது. இவ்வாலயத்தில் நீண்ட நாள்களாக பாலஸ்தாபனம் நடைபெற்று திருப்பணிகள் பலவும் பலரது ஒத்துழைப்பினாலும், ஒத்தாசையினாலும் நிறைவுபெற்று மஹாகும்பாபிஷேகம் நிகழ இருப்பது இறைவன் திருவருளேயாகும்.

அஷ்டமூர்த்தி வடிவமாக விளங்கும் இறைவனின் இயற்கை வடிவமான அமைப்பினை தெய்வ சான்னித்திய தன்மை உடையதாகவும், பக்தர்களுக்கு அருளும் சான்னித்தியத்தை வளம் பெறச்செய்யும் இம் மஹாகும்பாபிஷேகம் "ஆகமப்பிரவீன" " சிவஸ்ரீ கைலை வாமதேவக்குருக்கள் அவர்களதும் ஏனைய சிவாச்சாரியர்களதும் ஒத்தாசையுடன் சிறப்புற நடைபெற இருப்பது மிகுந்த சிறப்புடைதாகும். நித்திய நைமித்திய பூஜைகள் குறைவறாமல் நடைபெறுவதுடன் தெய்வ கைங்கரியத்தில் விநாயகர் அடியார்கள் அனைவரும் பங்கு கொண்டு இறையருள் பெறவேண்டும் என பிரார்த்தித்து ஆசிர்வதிக்கின்றேன்.

"லோகா சமஸ்தா சுகினோ பவந்து"

சிவாச்சார்ய திலகம் ஈசான சிவம்
சிவஸ்ரீ நாத ரிஷாந்த குருக்கள்
ஆலய பிரதமகுரு



திருவருள் மிகு ஸ்ரீ விஸ்வலிங்க விநாயகப்பெருமானின் திருவருளால் மகா கும்பாபிஷேகம் நடைபெறுகிறது. கும்பாபிஷேகம் என்பது மந்திர சக்தியால் யந்திரத்தில் தந்திரமாக ஏற்றுவது அந்த தந்திரவகையில் பூர்வாங்க கிரியைகள் அனுஞ்ஞை முதல் திரவ்விய விபாகம் சாந்திவகைகள் அங்குறும் இறுதகாலகலாகர்ஷணம் செய்து யாகம் அமைத்து பிரபஞ்சமாகிய நீர், நிலம், காற்று, நெருப்பு ஆகாயம் என்கிற ஐந்தையும் உருவாக்கி அதில் இறைவனை ஆராதித்து சக்தியை பெருக்கி பூர்வ பஞ்சிம சந்தானத்தின் மூலம் திரு உருவங்களில் சேர்ப்பித்து ஸ்வர்சமூலம் தொட்டு இருத்தி சூரிய, சந்திரன் இருக்கும் வரை இந்த திருஉருவத்தில் இருக்க பிரார்த்தித்து கும்பநீரினால் பூரணப் படுத்தி தேவர்கள் வானவர்கள் பூஜிக்க வைத்து மங்கள தர்சனங்கள் காட்டி வழிபாடாற்றுவது வணங்குவது, பிரார்த்தனைகளை நிறைவேற்றி வேண்டுவார்க்கு வேண்டிய அருளை அள்ளிவழங்கும் எம்பெருமானாகிய விநாயகர் திருவருளை பெற்று நீடுழி காலம் வாழ எல்லாம் வல்ல அன்னை நாகபூஷிணியும் எம் ஆன்ம நாயகனாகிய குருநாதன் கைலாசநாதகுருவின் பாதம் பணிந்து வாழ்த்தி பிரார்த்திக்கின்றோம்.

கும்பாபிஷேக பிரதமகுரு
சிவஸ்ரீ கைலை வாமதேவக் குருக்கள்
நயினாதீவு



## திருப்பணிச்சபை தலைவரின் வாழ்த்துச் செய்தி

முருகமூர்த்தி பிள்ளையார் என அனைவராலும் பக்தியூர்வமாக அழைக்கப்படும் ஸ்ரீ விஸ்வலிங்க மஹாகணபதி மூர்த்திக்கும், ஏனைய பரிவார மூர்த்திகளுக்கும் இன்று கும்பாபிஷேக பெருவிழா நடைபெற விநாயக பெருமான் திருவருள் கொண்டருளியுள்ளார் என்பதை எண்ணி நாம் பேரானந்தம் அடைகிறோம். பிள்ளையாருக்கு கும்பாபிஷேகம் எப்போது நடைபெறும் என்று மெய்யடியார்களால் ஆவலுடன் எதிர்பார்க்கப்பட்ட நிகழ்வு இன்று நிறைவேறுகிறது. எம்பெருமான் எம்முடன் துணை நிற்க அவர் மேல் பற்றுக்கொண்ட அடியார்களின் ஒத்துழைப்புடன் திருப்பணிகள் சிறப்பாக நடைபெற்று நாம் நினைத்து பார்க்காத அளவுக்கு ஆலயம் புதுப்பொழிவுபெற்று காணப்படுகிறது. இவ்வாறான நிலையில் ஏம்பெருமானுக்கு கும்பாபிஷேகம் நடைபெறுகிறது. திருப்பணி கும்பாபிஷேகம் ஆகிய இரண்டையும் ஒன்று சேர நினைத்துப் பார்க்கும் போது இம் மண்ணில் பிறந்ததன் பயனை நான் அடைந்து விட்டதாகவே நான் கருதுகிறேன். ஏனென்றால் ஆலயத்துடன் எம்மை இணைத்து எம்பெருமானுக்கு சேவை செய்யும் போது அதனால் ஏற்படும் திருப்தி எம்மை இவ்வாறு எண்ணத்தோன்றும் என்பதை உணர்கிறேன். எம்பெருமானின் திருவருள் அனைவருக்கும் கிடைக்கப்பெற்று அமைதியாகவும், மகிழ்ச்சியாகவும் வாழ வேண்டும் என அவனது பாதங்களை வணங்கி பணிகிறேன்.

ந.நாகராசா (தலைவர்)
திருப்பணிச்சபை

## இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளரின் வாழ்த்துச்செய்தி



யாழ்ப்பாணத்து வண்ணார்பண்ணைக் கிராமத்தின் மேற்கே அண்ணமார்களனிப் பகுதியில் வீற்றிருந்து அருளொளி வீசிக்கொண்டிருக்கும் இற்றைக்கு நூற்றைம்பது ஆண்டுகள் பழமைமிகு பதியாய்த் துலங்கும், ஸ்ரீ விஸ்வலிங்க மகாகணபதி மூர்த்தி தேவஸ்தானம் 1962 இற் கருவறை, மகா மண்டபம், தேவசபை ஆகியன புனரமைக்கப்பட்டு 1967 இல் மகா கும்பாபிஷேகம் கண்டு வைகாசி மாதப் பௌர்ணமியைத் தீர்த்த தினமாகக் கொண்டு துவஜாரோகணமாகிப் பத்துத்தினங்கள் நடைபெறும் இவ்வுற்சவம் ஏழு தசாப்தங்களாகச் சிறப்புடன் நிகழ்ந்தேறி வரும் இப்பதியில், 25.06.2018 இன்று எம்பெருமான் ஆலய மஹா கும்பாபிஷேகங்காணவிருப்பது அவன் பெருங்கருணையே. இப் பெருமைமிகு பக்தி நிகழ்வு சிறப்புற நிகழ்ந்தேற எம்பெருமான் பாதம் பணிந்து வாழ்த்தி அமைகின்றேன்.

அ.உமாமகேஸ்வரன்
பணிப்பாளர்
இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம்

## மஹா கும்பாபிஷேக வாழ்த்துச் செய்தி

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

நல்லூர் பிரதேசசெயலக பிரிவில் வண்ணார்பண்ணையில் எழுந்தருளியிருந்து அருள்பாலிக்கும் ஸ்ரீ விஸ்வலிங்க மகாகணபதி மூர்த்தி ஆலயமானது கடந்த காலப்பகுதியில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக பெரிதும் பாதிப்புக்குள்ளாகி இந் நிலையில் இவ் ஆலயத்தினை புனர்நிர்மாணம் செய்ய வேண்டுமென்ற நோக்குடன் ஆலய நிர்வாகசபையினரும், மகாசபையினரும் இணைந்து திருப்பணிசபை ஒன்றினை அமைத்து அதனூடாக சைவசமய விதிப்படி திருப்பணி வேலைகள் யாவும் நிறைவடைந்து இன்று 25.06.2018 ஆம் திகதி கும்பாபிஷேகம் செய்ய எல்லாம் வல்ல விநாயகப் பெருமானின் அருள்கிடைத்தமையினையிட்டு பெருமகிழ்வடைகின்றேன். ஸ்ரீ விஸ்வலிங்க மகாகணபதி மூர்த்தி ஆலய மஹா கும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெற்றுப் பக்தர்கள் வருகைதந்து கும்பாபிஷேக தரிசனம் செய்து பெருமானின் திருவருட்கடாட்சத்திற்கு ஆளாகி சகல சௌபாக்கியங்களையும் பெற்று இன்புற்று வாழ வாழ்த்தி வணங்குகின்றேன்.

திருமதி அஜிதா பிரதீபன்
உதவிப் பிரதேச செயலாளர்,
பிரதேச செயலகம், நல்லூர்.

ராஜ்
ஜுவல்லர்ஸ்
வீதி, திருநெல்வேலி.

ராஜ்
ஜுவல்லர்ஸ்
சுன்னாகம் பஸ் நிலையம், சுன்னாகம்.
தொ.பே.: 021 790 3646

மகாகணபதி
களஞ்சியம்
கே.கே.எஸ்.வீதி,
நாச்சிமார் கோயிலடி.
தொ.பே.: 077 283 3627

Neelampary
Hotel
No.744, K.K.S. Road,
Thaddatheru, Jaffna.
T.P.: 021 222 0351

ரமணன்
கட்டடப்பொருள் விற்பனை நிலையம்
ஸ்ரீலக்ஷ்மிவிலாசா
திருமணமண்டபம்
இல.84, ஐயனார் கோயில் வீதி,
(தட்டாதெருஅருகில்) யாழ்ப்பாணம்.
தொ.பே.: 021 222 9296, 075 783 6550

நீலாம்பரி மங்களசேவை
திருமணம், பூப்புனித நீராட்டுவிழா,
மங்கள நிகழ்விற்கு தேவையான பந்தல்
மணவறை, மாலைகள், கதிரைகள்
என்பன வாடகைக்கு பெற்றுக்கொள்ளலாம்.
கே.கே.எஸ். வீதி, தட்டாதெரு, யாழ்ப்பாணம்.
தொ.பே.: 075 672 9589

SPORTS WORLD
Kasthuriyar Road,
Kannathiddi Junction,
Jaffna.
T.P.: 077 360 4830

Vishali CCTV
Camera Installation
|Jaffna|Colombo|Vavuniya.|
T.P.: 021 490 6596, 076 461 1582

மிலன்
பேக் ஹவுஸ்
115,சிவப்பிரகாசம் வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே.:077 603 0568077 020 4602

நிர்வாக சபையினரும்
திருப்பணிச் சபையினரும்
வண்ணை ஸ்ரீ விஸ்வலிங்க
மகா கணபதி தேவஸ்தானம்
வண்ணார்பண்ணை மேற்கு.

## துயர் பகிர்கின்றோம்



**K.S.கணபதிப்பிள்ளை**

அவர்கள் நீண்டகாலமாக எமது குருபீடத்தின் வளர்ச்சியில் அக்கறை கொண்டு செயல்பட்டதுடன் உபதலைவராகவும் சிறப்புடன் கடமையாற்றி வந்துள்ளார். இவரது ஆத்மா சாந்திபெற பிரார்த்திக்கின்றோம். இவரது பிரிவால் துயருறறிருக்கும் குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்கள்.

க.கனகரத்தினம்
நம்பிக்கைப் பொறுப்பாளர்
ஸ்ரீ சிவகுருநாதகுருபீடம், வேதாந்தமடம்.
18, குமாரசாமி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

(CS 17744) (14,17)

## ஆத்மசாந்திப் பிரார்த்தனை அழைப்பு



கடந்த 27.05.2018 ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்த

செல்வி

**புஷ்பாவதி செல்வநாயகம்**

அவர்களின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை நிகழ்வுகள் நாளை 26.06.2018 செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.00 மணியளவில்

**நல்லூர் ஸ்ரீ துர்க்காதேவி மணி மண்டபத்தில்**

நடைபெறும்.

அத்தருணம் தாங்கள் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

**தயவு கூர்ந்து இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்**

347, கோயில் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

### சின்னத்தம்பி சிவராசா



செல்லப்பிள்ளையார் கோயிலடி, மட்டுவில் வடக்கு, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி சிவராசா நேற்று (24.06.2018) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான வைரமுத்து - தங்கம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், விஜயலட்சுமியின் அன்புக் கணவரும், ஜெயந்தினி, சிவகணேசன் ஆகியோரின் அன்புத் தந்தையும், நிறோஜனின் அன்பு மாமனாரும், முகுந்தன், சந்தோஷ் ஆகியோரின் அன்புப் பேரனும், நாகராசா, காலஞ்சென்ற செல்லப்பா மற்றும் அம்பிகாவதி ஆகியோரின் அன்புச் சகோதரரும், சத்தியசீலன் (கனடா), சத்தியநாதன், சத்தியவதனா, சத்தியமோகன், காலஞ்சென்றவர்களான சத்தியகுமார், சத்தியமூர்த்தி மற்றும் சத்தியரூபன் ஆகியோரின் அன்பு சிறிய தந்தையும், சுபாஜினி (UK), கஜன் (சுவிஸ்), சுதர்சினி (UK), பிரியந்தி ஆகியோரின் அன்பு தாய் மாமனும், காலஞ்சென்ற சிவயோகி மற்றும் தம்பிப்பிள்ளை, பானுமதி, உமாபதிசிவம், சிவஞானபானு ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.06.2018) திங்கட்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மட்டுவில் ஊரிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

செல்லப்பிள்ளையார் கோயிலடி,
மட்டுவில் வடக்கு,
சாவகச்சேரி.

(CS/17746) (11,17)

தகவல்
குடும்பத்தினர்.

## வேலையாள்கள் தேவை

மீசாலை - புத்தூர் சந்தியில் இயங்கும் நிமல் வெல்டிங் (மின் ஒட்டு) தொழிலகத்திற்கு அனுபவம்மிக்க ஆள்கள் தேவை. பழக விரும்புவர்களும் வரலாம்.

தங்குமிட வசதி செய்து தரப்படும்.

(CH 402) (14,17)

தொடர்புகளுக்கு: **077 345 6552**

## 45ஆம் நாள் வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 12.05.2018 சனிக்கிழமை சிவபதமடைந்த எமது அன்புச் செல்வன்

அமரர் செல்வன்

**சுரேஸ்குமார் சுகன்ஜன்**

அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (25.06.2018) திங்கட்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறவுள்ளதால் அத்தருணம் தாங்களும் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

பிறப்பு 22.08.1997

இறப்பு 12.05.2018

**குடும்பத்தினர்.**

உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய்.

(CS/17710)(11,17)

## மரண அறிவித்தல்கள்

### சோமாஸ்கந்தர் சத்தியநாதன்



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 10.01.1972 | 22.06.2018 |

திருகோணமலையைப் பிறப்பிடமாகவும், கனடா, ரொரன்ரோவில் வசித்து வந்தவருமாகிய சோமாஸ்கந்தர் சத்தியநாதன் 22.06.2018 வெள்ளிக்கிழமை இறைவனடி எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற சோமாஸ்கந்தர் - மற்றும் தியாகேஸ்வரி தம்பதிகளின் அன்பு மகனும், விருத்தாசலம் - இராஜேஸ்வரி தம்பதிகளின் அன்பு மருமகனும், சிந்துஜாவின் அன்புக் கணவரும், சாய்சரண், சாய்சந்தோஷ், சாய்லட்சுமி ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற உமாதேவி, சிவரஞ்சனி (இலங்கை), சிவகுமாரன் (கனடா) ஆகியோரின் அன்பு சகோதரரும், ஜெயக்குமார், அருந்தவக்குமார், மோனிக்கா, தர்சன், லவன் (கோபி), மோகன்ராஜ், திலீபன் ஆகியோரின் அன்பு மைத்துனரும், குமுதினி, ஜாழினி, ஜனனி, சுஜந்திகா ஆகியோரின் அன்பு உடன்பிறவாச்சகோதரரும், ஸ்ரீபிரணவ், கேசிகா ஆகியோரின் அன்புப் பெரியப்பாவும், அஞ்சனா, அக்ஷயன், அக்ஷரா, மேகவி, மேகனா, தனுஜா, கமலபாதன், ரகுபிரியன் ஆகியோரின் அன்பு மாமாவும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் அஞ்சலிக்காக 8911 Woodbine Ave, Markham, On L3R 5G1 இலுள்ள Chapel Ridge Funeral Home இல் கனடா நேரத்தின்படி 24.06.2018 ஞாயிற்றுக்கிழமை மாலை 7 மணிமுதல் இரவு 10 மணிவரையும் மறுநாள் 25.06.2018 திங்கட்கிழமை பகல் ஒரு மணிமுதல் 2.30 மணி வரையும் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு தொடர்ந்து 4 மணியளவில் இறுதிக்கிரியைகள் நடைபெற்று பின்னர் 12492 Woodbine Avenue, Gormley, On Loh 5 Go இலுள்ள Highland Hills Crematorium இல் மாலை 5 மணிக்கு தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(CS//17740)(11,17)

**தகவல்: குடும்பத்தினர்.**

சிவகுமார் - 905 - 922 - 2247, சிவரஞ்சனி (இலங்கை) - 011-94-75-628-4110,
தர்ஷன் - 647-701-0482, மோகன்ராஜ் - 647-505-5703,
திலீபன் - 514-402-9385, கோபி (இலங்கை) - 011-94-77-428-6052

## முருகர் நடராஜா

*(ஓய்வு நிலை உதவிக்கல்விப் பணிப்பாளர் - வலிகாமம் வலையம்)*



கிளானை, கொல்லங்கலட்டியைப் பிறப்பிடமாகவும் அம்பானை வீதி, சுன்னாகத்தை வதிவிடமாகவும் கொண்ட முருகர் நடராஜா நேற்று (23.06.2018) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற முருகர் சின்னப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற கந்தையா தங்கம்மா தம்புதிகளின் அன்பு மருமகனும் மனோரஞ்சிதமலரின் அன்புக்கணவரும் கர்ஜினி(கனடா), ரஜீவ், கஜீவ் (சிறைச்சாலை உத்தியோகத்தர், தல்தெனிய, பதுளை), காலஞ்சென்ற சுஜானி ஆகியோரின் அன்புத் தந்தையும் சுதர்சனின் (கனடா) அன்பு மாமனும் அனுஷ்கா, ஆருஷன், ஆதிரன் ஆகியோரின் அன்புத் தாத்தாவும் காலஞ்சென்றவர்களான சிவபாக்கியம், சின்னத்தங்கம், அன்னம்மா, நாகேந்திரம், வேலாயுதம் மற்றும் விமலேஸ்வரி, நகுலேஸ்வரி ஆகியோரின் அன்புச்சகோதரனும் காலஞ்சென்றவர்களான மயில்வாகனம், கதிரவேல், நரசிங்கம், ஞானதேவி மற்றும் கமலாதேவி, தர்மலிங்கம், அழகரட்ணம், தர்மலிங்கம்(கனடா), மனோரஞ்சிதலிங்கம் (லண்டன்), பூபாலகிருஷ்ணலிங்கம் (ஜேர்மனி) காலஞ்சென்ற சற்குணேஸ்வரன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.06.2018) திங்கட்கிழமை காலை 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 11.00 மணிக்கு கொத்தியாலடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

அம்பனை வீதி,
சுன்னாகம்.

(CS 31956) (14,17)

தகவல்:
குடும்பத்தினர்.

## காணி விற்பனைக்கு

A9 வீதி யாழ். கச்சேரிக்கு அருகில் சுற்று மதிலுடன் கூடிய 1 3/4 பரப்பு சதுரக்காணி விற்பனைக்குண்டு.

தொடர்பு - 077 302 3722

## வேலையாள் தேவை

யாழ்ப்பாணம் இணுவில் பகுதியில் அமைந்துள்ள வீடு ஒன்றிற்கு 35 வயதுக்கு மேற்பட்ட வீட்டு பணிப்பெண் தேவை. தங்குமிட வசதிகள் செய்துதரப்படும். சம்பளம் பேசித்தீர்மானிக்கப்படும்.

077 603 0667

## வீடு வாடகைக்கு

கண்டி வீதி, கொடிகாமம் நாவலடி பாடசாலைக்கு முன்பாக அமைந்துள்ள வீடு வாடகைக்கு விடப்படும்.

(CS 0050606) (7)

076 179 9981

## வாடகைக்கு


வேம்பிராய் கொடிகாமம் வீதியில் அமைந்துள்ள மில் கட்டடம் மற்றும் வீடும் வாடகைக்கு விடப்படும்.

(CS 0050606) (7)

076 179 9981

உதயன் விளம்பர தொடர்புகளுக்கு advt@uthayan.com, 021 493 1111

அ. சண்முகதாஸ



# சிவபூமி திருவாசக அரண்மனையும் சிவதெட்சணாமூர்த்தி திருக்கோயிலும்

எம்முடைய முழுமுதற் கடவுளாகிய சிவபெருமானை அடையாளப்படுத்தும் சிவலிங்கத்தினைத் தேரிலேற்றி அந்தத்தேரின் வலவன் போல மாணிக்கவாசகப் பெருமான் அமர்ந்திருக்கும் அருமையான ஒரு காட்சியினைக் கண்டு நாம் வியப்படைந்தோம். தன் தேனினும் இனிய திருவாசகப் பாடல்களினூடாக எம்பெருமானை எமக்கு உள்ளத்திலே கொண்டுவந்து இருத்திய மாணிக்கவாசக சுவாமிகள் அந்தப் பெருமானைத் தேரிலே ஏற்றி எம்முடைய ஊனக்கண்களுக்கு அருள் விருந்தாகத் தருகிற காட்சியினைப் பார்க்க வாய்ப்பளித்துள்ளனர் சிவபூமி அறக்கட்டளையினர். இந்தத் காட்சியை யாழ்ப்பாணம் நகரின் நுழை வாயிலாக அமையும் நாவற்குழியூரில் அமைக்கப்பட்டுள்ள சிவதெட்சணாமூர்த்தி திருக்கோயிலின் முன்பாக அடியார்கள் கண்டு மகிழலாம். எமக்கென ஒரு அரண்மனை அமைப்பது இதுவே முதல் தடவையாகும். எம்முடைய பண்பாடு, சமயம், ஆன்மகி வாழ்வியல் ஆகியனவற்றுக்கு அரணாக அமையக்கூடிய மனையாக இது அமைகின்றது.

*பாரொடு விண்ணாய்ப் பரந்தஎம் பரனே*
*பற்றுநான் மற்றிலேன் கண்டாய்*
*சீரொடு பொலிவாய் சிவபுரத் தரசே*

என்று மணிவாசகர் விளிக்கும் 'சிவபுரத்தரசன்' தங்கி இருப்பதற்கு இலங்கையில் யாழ்ப்பாணநகர் நுழைவாயிலிலே திருவாசக அரண்மனை அமைத்திருப்பது மிகப் பொருத்தமானதாகும். இந்த அரண்மனையிலே தங்கியிருந்து தன் திருவருட் பார்வையாலே நலங்கள் யாவும் நிகழவும் அறமற்ற செயல்கள் யாவும் முற்றாக நீங்கவும் அருள்பாலிக்கவுள்ளான். அவனருளாலே எம்முடைய பண்பாட்டினைப் பேணும் அருங்கலையகமாகவும் இந்த அரண்மனை விளங்கவுமுள்ளது. இதனுடைய பணி பன்முகப்பட்டதாக அமையவுள்ளது. கடுகு சிறிது காரமுள்ளதாக அமையும்.

அரண்மனைக்கு வெளியிலேதான் திருக்கோயில்கள் அமைவதுண்டு. ஆனால் இந்த அரண்மனையிலோ அருள்மிகு சிவதெட்சணாமூர்த்தி திருக்கோயில் உள்ளே அமைந்துள்ளது. தெற்குத் திசையை நோக்கியே சிவன் இங்கே வீற்றிருக்கும் படியாகத் திருக்கோயில் அமையவுள்ளது. இத்தகு வியப்பான செயற்பாடுகளைச் செய்பவர்கள் யார்?

**அற்புதமான இந்தப் பணியின் பின்னணியில் உள்ளோர்கள் போற்றப்பட வேண்டியவர்கள்**

யாழ்ப்பாணத்திலே ஆன்மிக, மனிதநேயப் பணிகளைத் தொடர்ந்து ஆற்றி வரும் சிவபூமி நிறுவனத்தை அறியாதவர் எவரும் இருக்க முடியாது. அந்த நிறுவனம் பல்வகைப் பணிகளை ஆற்றிவருகிறது. அந்தப் பணிகளுக்கு உலகிலேயுள்ள பல அருள் உள்ளம் கொண்டவர்கள் உதவும் கரங்களாக இருந்துவருகிறார்கள். ஆஸ்திரேலியாவில் வதியும் வை. மனோமோகன் நீண்ட காலமாக 'அபயகரம்' என்னும் அமைப்பினூடாக மிகப் பயனுள்ள அறப் பணிகளை ஆற்றிவருகிறார். திருநெல்வேலிச் சைவச் சிறுவர் இல்லத்துக்கு அவர் செய்த அறக்கொடை பற்றி நான் நன்கு அறிவேன். மருத்துவ நிபுணர்களாகிய வை. மனோமோகன் அவருடைய அன்புத் துணைவியார் சிவகௌரி இணையர் அரியதொரு அரண்மனையினையும் திருக்கோயிலையும் அமைப்பதற்கு மண்ணையும் பொன்னையும் வழங்கியுள்ளனர். அவர்களுடைய உளவண்ணமும் கை வண்ண மும் திருவண்ணமும் சேர்ந்து ஆறு. திருமுருக வண்ணத்தினூடாக இந்தப் பெரிய பயன்மிகு செயற்பாடு நடைபெற்றுள்ளது. இந்தப் பெரிய செயற்பாட்டுக்கு வையகமும் வானகமும்தான் நன்றிக்கடனாகக் கொடுக்கப்பட வேண்டியவை. அவை நம்மாலே என்றும் கொடுக்கமுடியாதவை. இப்பணியை திங்களும் கதிரவனும் உள்ளவரை பேணுதற்கு அந்த வையகமும்வானகமும்தான் காப்பு. அவை இவர்களுக்கும் காப்பு.



**திருவாசகங்கள் செதுக்கப்பட்டு அமைவு பெற்றது அரண்மனை**

சிவபூமி அரண்மனையின் இன்னொரு சிறப்பு என்னவெனில் அதன் இடப்பக்க வலப்பக்கச் சுவர்களிலே மாணிக்கவாசகப்பெருமானுடைய திருவாசகங்கள் கல்லிலே செதுக்கப்பெற்றள்ளன. தமிழ் நாட்டிலே திருப்பெருந்துறைத் திருக்கோயிலில் திருவாசகங்கள் முழுவதும் சுவர்களிலே செதுக்கிக் காட்சிப் படுத்தப்பெற்றுள்ளன. எம்முடைய நாட்டிலே இதுவே முதல் முயற்சியாகும். திருவாசகப் பாடல்கள் முழுவதையும் இந்த அரண்மனைக்குள்ளே நின்றுகொண்டு படித்து மகிழக்கூடிய வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. இவ்வாறு இவற்றை மக்கள் பார்வைக்காகவும் படிப்புக்காகவும் கருங்கற் சுவர்களிலே செதுக்கி அரண்மனைச் சொத்தாக ஆக்கியதற்குக் காரணம் திருவாசகப் பாசுரங்கள் நம் மண்ணிலே பெறும் உயர்சிறப்பே ஆகும்.

வணக்கத்துக்குரிய ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலருடைய வழிகாட்டலிலே வளர்ந்து வரும் சைவசமய வழக்கம் ஒன்று இன்று வரை யாழ்ப்பாணத்திலே வழங்கி வருகின்றது. மார்கழித் திங்கள் பிறந்தவுடன் அந்தத் திங்கள் நிறைவடையும்வரை இங்குள்ள சைவத் திருக்கோயில்களிலே வழக்கமாகப் படிக்கப்பட்டு வரும் பஞ்சபுராணத்துக்கு நிகராக மாணிக்கவாசகப் பெருமானுடைய திருவாசகம் மட்டுமே படிக்கப்பட்டு வருகின்றது. யாழ்ப்பாணம் அவ்வளவு மதிப்பினைத் திருவாசகத்துக்கு வழங்கிவருகின்றது. அதற்கு பொன்முடி சூடியதுபோல சிவபூமி அறக்கட்டளையினர் அமைத்துள்ள திருவாசக அரண்மனை அமைகின்றது. எல்லாமாக 661 பாடல்கள் கொண்ட 51 திருவாசகப் பகுதிகள் உள்ளன. அவை 3382 அடிகளை உடையன.

'நமச்சிவாய வாழ்க நாதன்தாள் வாழ்க'

எனத் தொடங்கும் 'சிவபுராணம்' தொடக்கப் பாடற் பகுதியாக அமைய 51ஆவது பாடற் பகுதியாக 'அச்சோப் பதிகம்' அமைகிறது.

**108 சிவலிங்கங்கள்**

இராவணன் இலங்கைத்தீவில் எண்ணற்ற இடங்களிலே சிவலிங்கங்களைப் புதைத்துவைத்ததாக ஒரு தொன்மச் செய்தி மக்களிடையே நீண்ட காலமாகக் கடத்தப்படு வருவதை நாம் அறிவோம். இத்தகைய ஊக்குதல் 108 சிவலிங்கங்களைத் திருக்கோயில்களிலே அமைக்கும் வழக்கத்தையும் உண்டாக்கியது. திருவாசக அரண்மனையில் 108 சிவலிங்கங்கள் ஒரே இடத்தில் திரு விருத்தப்ப ட்டுள்ளன. இது திருவாசக அரண்மனைக்கு இன்னொரு சிறப்புத் தரும் செயற்பாடாகும்.

இன்று எமக்கு மன அமைதியைத் தரக்கூடியது வழிபாடேயாகும்.

இதனை எமது இளைய தலைமுறை உணரவைப்பதற்குப் பல பணிகளைச் செய்யவேண்டியுள்ளது. அவற்றுள் ஒன்றாக திருவாசக அரண்மனையும் சிவதெட்சணாமூர்த்தி திருக்கோயிலும் ஒன்றாக அமைந்திருக்கும் இந்தப் புனித இட அமைப்பு விளங்கும் என எண்ணுகிறோம். எம்முடைய பண்பாட்டுப் பேணலை நாம் மறந்துவிடக்கூடாது என்பதைத் திருவாசக அரண்மனை என்றும் நம் இளையவர்களுக்கு நினைப்பூட்டிய வண்ணம் இருக்கும். திருக்கோயில் வழிபாடும் சிவலிங்க வழிபாடும் எம்முடைய வழிபாட்டு மரபினை நினைவூட்டும். இத்தொண்டு நின்றுநிலைக்க இறையருளை வேண்டுகிறோம்.

நாளை

**26.06.2018**

செவ்வாய்க்கிழமை

ஆனி 12

திதி: திரயோதசி மு.ப. 07.54
நட்சத்திரம்: அனுசம் மு.ப.08.55
சுபநேரம்: 10.25–11.55 வரை
ராகுகாலம்: 02.55–04.25 வரை

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# புதிய அரசமைப்பு என்பது கூட்டு அரசின் கடமையே!

புதிய அரசமைப்புநிறைவேற்றப்பட வேண்டும். தமிழ் மக்கள்தத்தமது விருப்பத்துக்கும்சம்மதத்துக்கும்எதிராக ஆளப்படுகின்றனர் இவ்வாறு நோர்வே அரசின் பிரதிநிதிகளுக்கு வலியுறுத்தியுள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான சம்பந்தன்.

நாடாளுமன்றத்தில்எதிர்க்கட்சிஎன்கிறஅந்தஸ்தில்அமர்ந்திருந்த போதிலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன – தலைமை அமைச்சர் ரணில்விக்கிரமசிங்க தலைமையிலான அரசுக்கு எதிராகக் குரல்கொடுத்தமை ஒப்பீட்டு அளவில் மிகக்குறைவு. அரசின் பல்வேறு திட்டங்களை ஆதரித்தமை அல்லது எதிர்ப்பை வெளியிடாமைக்கு பல்வேறுபட்ட காரணங்கள், தேவைகள் கூட்டமைப்புக்கு இருந்துள்ளன. காணாமற் போனவர்கள் பற்றிய அறிதல், காணி விடுவிப்பு, பௌத்தமயமாக்கலைக் குறைத்தல் அல்லதுகட்டுப்படுத்தல் என்று இந்தப் பட்டியல் நீண்டு செல்லும். அவற்றில் புதிய அரசமைப்பு உருவாக்கமும் ஒன்று.

கூட்டமைப்பு மேற்கொண்ட அல்லது மேற்கொள்ள எத்தனித்த முக்கிய பணிகளில் புதிய அரசமைப்பு உருவாக்கம் முதன்மையானது என்பதைத்தவிர்க்கவோ அல்லது மறுக்கவோமுடியாது.தமிழ்த்தேசியக்கூட்டமைப்பும்இணைந்து மேற்கொண்டுவந்த இந்தப் பணிகள் கடந்த பெப்ரவரி மாதம் 10ஆம் திகதி நடைபெற்ற உள்ளூராட்சித் தேர்தலுடன் கிட்டத்தட்ட முடங்கிப் போயுள்ளன.

புதிய அரசமைப்புக்கான இடைக்கால அறிக்கையானது நிதித்துறைச் சுதந்திரம், வடக்கு – கிழக்கு இணைப்பு, வழங்கப்பட்ட அதிகாரங்கள்திரும்பப் பெறப்பட முடியாதவாறான இறுக்கமான பொறிமுறையூடான அதிகாரப் பகிர்வு ஆகிய மூன்று அம்சக் கோரிக்கைகளைக் கூட்டமைப்பு வலியுறுத்தியதை வெளிப்படுத்தி நின்றது. இதனால் அந்த இடைக்கால அறிக்கையின் மீது சிறிலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் சார்பில் போட்டியிட்ட முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச முன்வைத்த கடும் 'இனவாத' விமர்சனங்கள் அவருக்கு உள்ளூராட்சித் தேர்தலில் பெரும் வெற்றியைத் தேடிக் கொடுத்தன. மகிந்தவின்வெற்றி புதிய அரசமைப்புஉருவாக்கத்துக்கு பெரும் தடைக்கல்லாக வந்தமைந்தது.

ஆக, புதிய அரசமைப்பு நிறைவேற்றப்பட்டால் மைத்திரி – ரணில் இருவருக்குமான வாக்குவங்கிகள் பெரும் சரிவைக்காணும் என்பது நிதர்சனமாகியதை அடுத்து அந்தப் பணிகள் கிடப்பில் போடப்பட்டுள்ளன. மாகாண சபைகளுக்கான தேர்தல்கள் இந்த வருடத்தின் இறுதிப் பகுதிக்குள்ளோ அல்லது அடுத்த வருடத்தின் முற்பகுதியிலோ நடத்தப்படக்கூடிய சமிக்ஞைகள் வெளிப்படுத்தப்பட்டுள்ள நிலையில், புதிய அரசமைப்புக்கான பணிகள் மீண்டும் ஆரம்பிப்பது என்பது மிகப்பெரும் கேள்விக்குறியே.

கூட்டு அரசு மீண்டும் அந்தப் பணிகளைக் கையிலெடுத்தால்மகிந்தமீண்டும்இனவாதத்தீயைக்கக்கிதனது தேர்தல் நகர்வுகளை ஆரம்பிப்பார். இதனால்அரசமைப்பு உருவாக்கத்தைக் கிடப்பில் போடுவதற்கே கூட்டு அரசு எத்தனிக்கும். சிங்கள– பௌத்த பேரினவாதம்என்ற 'மாயையைத்' தகர்த்தெறிந்து தமிழர்களின் நலன்களை நிறைவேற்றும் வகையில் இந்தக் கூட்டு அரசு செயற்படும் என்ற நம்பிக்கையை இழந்தவர்களாகவேதமிழ் மக்கள்உள்ளனர். தமிழ் மக்களின் கோரிக்கைகளைக் கூட்டு அரசு தொடர்ந்து நிராகரித்தே வந்துள்ளது. இவ்வாறானதொரு பின்னணியில் 'தமிழ் மக்கள் தமது விருப்பத்துக்கும் சம்மதத்துக்கும் எதிராகவே ஆளப்படுகின்றனர்' என்று சம்பந்தன் அழுத்தம் திருத்தமாக வலியுறுத்தியமை சரியானது, ஏற்கத்தக்கது.

நோர்வே உள்ளிட்ட் பன்னாட்டுச் சமூகம், உருவாக்கப்பட்ட புதிய அரசமைப்பின் தேவையையும் அதன் கனதித்தன்மையையும் உணர்ந்து செயற்பட வேண்டும். அரசமைப்பு உருவாக– நிறைவேற வேண்டிய அழுத்தங்களை மைத்திரி– ரணில்தலைமையிலானகூட்டுஅரசுக்குவழங்க வேண்டும். அதுவே தமிழ் மக்களின் விருப்பமும் தேவையுமாகும்.



# முன்னுதாரணமாக செயற்பட வேண்டும் பௌத்த தேரர்கள்

இந்துமதி

ஜேர்மனியின் சர்வதிகாரி ஹிட்லர் போன்று மாறி இராணுவ ஆட்சியைக் கொண்டு வந்து நாட்டை அபிவிருத்தி செய்யுமாறு முன்னாள் பாதுகாப்புச் செயலரான கோத்தபாயவிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. இந்த வேண்டுகோளை ஒரு சாதாரண அரசியல்வாதி விடுத்திருந்தால் அதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமே இருந்திருக்காது. ஆனால் கருணையையும், இரக்கத்தையும், அகிம்சையையும் போதிக்க வேண்டிய பௌத்த அஸ்கிரிய பீடத்தின் உப நாயக்க தேரர் விடுத்ததுதான் ஆச்சரியத்தை ஏற்படுத்துகின்றது.

நாடு பிடிக்கும் ஆசையில் பல்லாயிரம் மக்களை ஈவிரக்கமின்றிக் கொன்று குவித்த கொலையாளிதான் ஹிட்லர். ஏதுமறியாத இலட்சக்கணக்கான அப்பாவிகளான யூத மக்களை சிறிதுகூட இரக்கமின்றிக் கொன்று குவித்தவனும் இந்தக் கொலையாளிதான். ஜேர்மனி இரண்டாகப் பிளவுபடுவதற்கும் இவன்தான் காரணமாக இருந்துள்ளான். இத்தகைய ஒருவன் போன்றுமாறி ஆட்சிபுரியுமாறு கோத்தபாயவிடம் வேண்டுகோள் விடுத்த தேரருக்கு என்ன நடந்தது என்பது புரியவில்லை?

## இராணுவத்துக்குப் பேராதரவை வழங்கி வருகிறார் கோத்தபாய

கோத்தபாய இராணுவத்தில் ஓர் உயரதிகாரியாகப் பணியாற்றியவர் என்பதால் இராணுவத்தினருக்கு எப்போதுமே ஆதரவு தெரிவித்து வந்துள்ளார். அவரது சகோதரரான மகிந்த ராஜபக்ச அரச தலைவராக பதவி வகித்ததால் சுதந்திரமாகச் செயற்படுவதற்குரிய அரிய சந்தர்ப்பம் இவருக்குக் கிடைத்தது. இதனால் தாம் விரும்பியதையெல்லாம் நிறைவேற்றிக் கொண்டார். இறுதிப் போரின்போது இவர் முக்கிய பங்கை வகித்தார்.

2020ஆம் ஆண்டு இடம்பெறவுள்ள அரசதலைவர் தேர்தலில் மகிந்த தரப்பின் சார்பில் கோத்தபாயவே போட்டியிடுவாரென ஆரம்பத்தில் கூறப்பட்டது. கடந்த அரசின் காலத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு இதுவொரு நல்ல செய்தியாக அமையவில்லை. குறிப்பாகத் தமிழ்மக்கள் தாம் மீண்டும் துன்பங்களுக்கு உள்ளாகப் போகின்றோமா? என அஞ்சினர். பின்னர் மகிந்த குடும்பத்தில் ஏற்பட்ட உள்வீட்டுப் பூசல்களால் கோத்தபாய போட்டியிடுவதில் சந்தேகம் நிலவியது.



இதைவிட அமெரிக்கக் குடியுரிமையும் ஒரு தடையாக அமைந்துவிடுமெனக் கூறப்பட்டது. இவற்றுக்கெல்லாம் மசியாத கோத்தபாய தேர்தலில் போட்டியிடுவதில் உறுதியாக இருக்கின்றார். மகிந்த ராஜபக்ச தேர்தலில் போட்டியிடாமல் ஒதுங்கி நிற்பதும் அவருக்கு வாய்ப்பாக அமைந்துவிட்டது. இந்த நிலையிலேயே அவரை ஹிட்லர் போன்று ஒரு சர்வதிகார ஆட்சியை அமைக்குமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

## பௌத்த மதத் தலைவர்கள் அரசியலில் ஈடுபடுவது ஏன்?

இந்த நாட்டின் அமைதியையும், சமாதானத்தையும் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு மதத் தலைவர்களிடம் உள்ளது. அவர்கள் இறைவனின் தூதர்களாகக் கணிக்கப்படுவதால் இறை நிந்தனைக்குரிய காரியங்களில் ஈடுபடுவதைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும். குறிப்பாக அரசியலின் பக்கம் தமது சிந்தனையைச் செலுத்துவதும் ஆகாத விடயமாகும். இந்த நாட்டிலுள்ள இந்து, கிறிஸ்தவ, முஸ்லிம் மதங்களைச் சேர்ந்த குருமார்கள் நேரடி அரசியலில் ஈடுபடுவதில்லை. அதிலிருந்து இயலுமானவரை ஒதுங்கியே நிற்கின்றனர். ஆனால் பௌத்த குருமார்கள் அரசியலில் தம்மை ஈடுபடுத்திக் கொள்வதை ஒரு வழக்கமாகவே கொண்டிருக்கின்றனர். அதைவிட தமக்குப் பிடித்த அரசியல் கட்சிகளுக்கும், அரசியல்வாதிகளுக்கும் ஆதரவு வழங்குவதிலும் ஈடுபடுகின்றனர். அரசியல் குழப்பங்களுக்கும் இவர்களே காரணமாகவும் இருக்கின்றனர்.

தற்போது கோத்தபாய ஹிட்லராக மாறி நாட்டில் இராணுவ ஆட்சியை ஏற்படுத்த வேண்டுமெனக் கூறுவது பௌத்த தர்மத்துக்கே விரோதமான செயலாகும். சர்வதிகாரி ஒருவர் நாட்டை ஆட்சி செய்யும்போது என்ன நடக்கும் என்பதை பௌத்த தேரர்கள் முதலில் எண்ணிப்பார்க்க வேண்டும். மக்களின் ஜனநாயக உரிமைகள் யாவும் பறிக்கப்பட்டுவிடும். ஆட்சியாளர் எதைச் செய்தாலும் அதை ஏற்றுக் கொள்ள வேண்டிய மனப்பக்குவத்தை மக்கள் வளர்க்க வேண்டிவரும். ஊடக சுதந்திரம் முற்றாகவே பறிக்கப்பட்டுவிடும். சர்வதிகார ஆட்சியில் என்னவெல்லாம் நடக்குமோ அதெல்லாம் நடந்துவிடும். இதைத்தான் இந்த நாட்டின் பௌத்த தேரர்கள் விரும்புகின்றனர்.

## பல்லின சகிப்புத்தன்மை உள்ளவரே அரச தலைவராக வருதல் வேண்டும்

இந்த நாடு கொடியபோர் ஒன்றுக்கு முகம்கொடுத்து அதிலிருந்து முற்றாகவே நீங்காத நிலையில் காணப்படுகின்றது. நாட்டின் இயல்புநிலை திரும்புவதற்கு பல ஆண்டுகள்கூட ஆகலாம். இதனால் சகல இனங்களையும் அரவணைத்துச் செல்லக்கூடிய, ஜனநாயகத்தில் நம்பிக்கையுள்ள ஒருவரே அரச தலைவர் பொறுப்பில் அமரவேண்டும். இதுதான் நாட்டுமக்களின் விருப்பமாகும். இதைவிடுத்து பௌத்த தேரர்கள் எதிர்விளைவுகள் தொடர்பாக யோசிக்காது தவறான ஆலோசனைகளை வழங்குவது ஏற்புடையதாகத் தெரியவில்லை.

# தமிழர்களின் நம்பிக்கையை பெறுவாரா அரச தலைவர்?

சேரலாதன்



> வன்னிப் பிரதேசத்தை சிங்கள மயமாக்கும் முயற்சிகள் அரசின் மறைமுக ஆசிர்வாதத்துடன் தீவிரமாக இடம்பெற்று வருகின்றன. இதில் முல்லைத்தீவு மற்றும் வவுனியா மாவட்டங்களே பெரியளவில் பாதிப்புக் களை எதிர்கொண்டு வருகின்றன. ஏற்கனவே இடம்பெற்ற இத்தகைய குடியேற்றங்க ளைவிட கிளிநொச்சி, இரணைமடுக் குளத்தை அண்டியுள்ள பகுதிகளில் 4ஆயிரம் இராணுவத்தின ரின் குடும்பங்க ளைக் குடியமர்த்துவதற்கு எடுக்கப்பட்டுவரும் நடவடிக்கை மிகவும் பாரதூரமானது.

தமிழ் மக்களிடம் தம்மைக் கெட்டவனாக சித்தரிப்பதற்குச் சிலர் முயற்சி செய்கின்றனர் என்று அரச தலைவர் வருத்தத்துடன் தெரிவித்திருக்கிறார். கூட்டு அரசின் தலைவர் என்ற வகையில் அரசு செய்கின்ற அனைத்துக் காரியங்களுக்கும் அரச தலைவரே பொறுப்புக் கூற வேண்டும். அதுவே நியாயமும். மைத்திரிபால சிறிசேன அரச தலைவராக வருவாரென எவருமே எதிர்பார்த்திருக்கவில்லை. அதிலும் மகிந்த ராஜபக்சவைத் தோற்கடித்து அந்த உயர் பதவியை இவர் கைப்பற்றுவாரென்பதை எவருமே எண்ணியிருக்கவுமில்லை. அதிர்ஸ்டவசமாகத்தான் அவரால் அந்தப் பதவியில் அமர முடிந்தது. தமிழ் மக்களின் வாக்குகள் அவரது வெற்றிக்குப் பெரிதும் உதவியதை எவருமே மறுக்க முடியாது. ஆனால் பதவிக்கு வந்த பின்னர் அரசதலைவரால் தமிழ் மக்களுக்கு எந்தவிதமான நன்மையும் கிடைக்கவில்லை.

போர் ஓய்ந்தபோதிலும் அவர்களது துயரம் தொடரத்தான் செய்கின்றது. தமிழர்களுக்குச் சொந்தமான ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் படையினரால் அடாத்தாகப் பிடித்து வைக்கப்பட்ட நிலையில் காணப்படுகின்றன. இவற்றை விடுவிக்கக்கோரி அந்த மக்கள் ஆண்டுக் கணக்காகப் போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர். ஆனால் உரிய தீர்வு கிடைக்கவில்லை. காணாமல் போனவர்கள் என எவருமே இல்லையென யாழ்ப்பாணத்தில் வைத்துக் கூறிய அரசதலைவர் பின்னர் அவர்கள் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்வதற்கென அலுவலகமொன்றை அமைத்திருப்பது வேடிக்கையானது. காணாமல் போனவர்களின் உறவினர்கள் இந்த அலுவலகம் தொடர்பாகத் தமது அவநம்பிக்கையைத் தெரிவித்துள்ளனர். காணாமல் போனவர்கள் தொடர்பாக அரசிடம் தீர்க்கமான முடிவொன்றும் இல்லையென்பது இதன் மூலமாகத் தெளிவாகத் தெரிகின்றது.

**சிங்கள மயமாக்கலுக்கு தீர்வு காணப்படவேண்டும்**

வன்னிப் பிரதேசத்தை சிங்கள மயமாக்கும் முயற்சிகள் அரசின் மறைமுக ஆசிர்வாதத்துடன் தீவிரமாக இடம்பெற்று வருகின்றன. இதில் முல்லைத்தீவு மற்றும் வவுனியா மாவட்டங்களே பெரியளவில் பாதிப்புக்களை எதிர்கொண்டு வருகின்றன.

ஏற்கனவே இடம்பெற்ற இத்தகைய குடியேற்றங்களைவிட கிளிநொச்சி, இரணைமடுக் குளத்தை அண்டியுள்ள பகுதிகளில் 4ஆயிரம் இராணுவத்தினரின் குடும்பங்க ளைக் குடியமர்த்துவதற்கு எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கை மிகவும் பாரதூரமானது. இதனால் கிளிநொச்சி மாவட்டத்தின் இனப் பரம்பலில் மிகப்பெரிய தாக்கம் ஏற்படப்போகின்றது. இது தொடர்பாகக் கூட்டமைப்பின் உயர்மட்டக் குழுவொன்று அரச தலைவரைச் சந்திப்பதற்காக கொழும்பு விரைந்துள்ளது.

ஆனால் இதனால் பயன் ஏற்படுமா? என்பது சந்தேகமாகவே உள்ளது. முழுக்க முழுக்கத் தமிழர்கள் வாழ்கின்ற பகுதிகளில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களை ஏற்படுத்தி இளைஞர்களுக்கிடையில் குழப்பங்களை ஏற்படுத்த முயல்வது எதிர்காலத்தில் பாரதூரமான எதிர்விளைவுகளை ஏற்படுத்திவிடும் என்பதைக் கூறத்தேவையில்லை. அரசதலைவர் இதில் உடனடியாகத் தலையிட்டு நீதியானதொரு தீர்வைப் பெற்றுத்தராவிட்டால் தமிழர்கள் ஒருபோதுமே அவரை மன்னிக்க மாட்டார்கள்.

**முரணான திட்டங்கள்**

இதைவிட வடக்கையும், கிழக்கையும் அபிவிருத்தி செய்வதற்கென அரசதலைவரால் நியமிக்கப்பட்ட செயலணியில் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒட்டுமொத்தமாகப் புறக்க ணிக்கப்பட்டதை எந்த வகையிலும் நியாயப்ப டுத்த முடியாது. அது மட்டுமல்லாது கூட்டமைப்பினர் மட்டுமல்லாது வேறு கட்சிகளைச் சேர்ந்த தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களும் புறமொ துக்கப்பட்டமை ஏற்க இயலாது. தமிழர்களின் பிரதேசமொன்று அபிவிருத்தி செய்யப்படும்போது அந்தப் பகுதியைச் சேர்ந்த மக்களின் உயர்மட்டப் பிரதி நிதிகளின் பங்களிப்பு அவசியமானது. இதைக்கூட அரசதலைவர் புரிந்து கொள்ளா தது வேதனைக்குரியது.

இந்து கலாசார பிரதியமைச்சர் நியமனத்தின்போது ஏற்பட்ட தவறு தமிழ் இந்து மக்களிடையே பெரும் குழப்ப நிலையொன்றை உருவாக்கிவிட்டது. இந்து மதத்துடன் தொடர்பில்லாத வேற்று மதத்தைச் சேர்ந்த ஒருவரை அந்தப் பதவிக்கு அரசதலைவரே நியமித்திருந்தார்.

இதன் காரணமாகத் தமிழர்கள் அரச தலைவர் மீது வெறுப்பும் கொண்டனர். இதில் நியாயம் இருக்கத்தான் செய்தது. பின்னர் அந்தப் பதவி குறித்த நாடாளுமன்ற உறுப்பினரிடமிருந்து பறிக்கப்பட்டபோதிலும் அதனால் ஏற்பட்ட வெறுப்பு நீடிக்கத்தான் செய்கின்றது.

ஆனந்த சுதாகரனின் பிள்ளைகள் தமது தந்தையின் விடுதலைக்காக ஆவலுடன் காத்திருக்கின்றனர். அரச தலைவர் தமது தந்தையை விடுவிப்பாரெனவே ஒன்றுமறியாத அந்தப் பச்சிளம் பாலகர்கள் நம்பியிருந்தனர். ஆனால் அதுவும் நிராசையாக மாறிவிட்டது. ஆனந்த சுதாகரனை விடுதலை செய்வதில் அரச தலைவருக்குச் சிக்கல் நிலையொன்று தோன்றியிருக்கலாம். ஆனால் தாயை இழந்து தந்தையின் அரவணைப்பையும் துறந்து அநாதைகளாக ஏங்கி நிற்கும் அந்தப் பாலகர்களை ஒருகணம் சிந்தித்துப் பார்த்தால் கல்நெஞ்சுகளும் உருகிப் போய்விடும்.

ஆகவே அரச தலைவர் இந்த விடயத்தில் சம்பிரதாயங்களைப் புறமொதுக்கி வைத்துவிட்டுச் செயற்பட்டிருக்க முடியும். ஆனால் அவரால் முடியவில்லை. தமிழர்களுக்கு என்ன செய்தாலும் இனவாதிகள் எதிர்க்கத்தான் செய்வார்கள். இதற்கெல்லாம் அஞ்சினால் ஒரு நாட்டின் தலைவராக எவராலும் பதவி வகிக்க முடியாது. கூட்டமைப்பு அரசுக்கு ஆதரவு வழங்கி வருவது அரசதலைவருக்குத் தெரியாத ஒன்றல்ல. கூட்டமைப்பின் தலைவரான சம்பந்தன் புதிய அரசமைப்பின் உருவாக்கம் தொடர்பாக நம்பிக்கை வெளியிட்டு வந்துள்ள நிலையில் அதுவும் இடைநடுவில் நிற்கின்றது.

தமிழர்களால் ஆட்சிப்பீடம் ஏறிய அரச தலைவர் இதுவரை தமிழர்களுக்குப் பதில் உபகாரமாக எதையும் செய்யவில்லை. ஆகவே தமது எஞ்சியுள்ள காலத்திலாவது தமிழர்களின் உணர்வுகளுக்கு மதிப்புக் கொடுத்து அவர்கள் தம்மீது கொண்டுள்ள அவநம்பிக்கையை அவர் போக்கிக்கொள்ள வேண்டும்.

## ஆசிரியருக்கான கடிதம்

### மன இரக்கம் கொள்வோமே!

அண்மையில் கிளிநொச்சியில் இடம்பெற்ற சம்பவமொன்று மனதை கனக்கச் செய்தது. புலியொன்று அடித்துக் கொல்லப்பட்டதுடன் அது இறந்த பின்னர் அதன் உடலை பாடாய்ப்படுத்தி செல்பி எடுத்தும் காணொலிகள் எடுத்தும் இளைஞர்கள் பலர் தத்தமது சமூக வலைத்தளங்களில் பதிவேற்றியிருந்தார்கள். புலி கிராமத்துக்குள் பிரவேசிப்பது என்பது பேராபத்தானதுதான். அதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை. அதனால் ஏற்படும் ஆபத்து வலியுதாக அமைகின்றபோது சந்தர்ப்ப சூழ்நிலைகள் அதைக் கொல்வதற்கும் வழிகளை ஏற்படுத்தியிருக்கலாம். ஆனால் இறந்த அந்தப் புலியின் உடலைப் பாடாய்ப்படுத்தியதும், நாக்கை வெளியில் இழுத்து செல்பி எடுத்துக்கொண்டதும், காலுக்குள் போட்டு மிதித்ததும் ஏன்?. வருத்தத்துக்கு உரிய செயல்களல்லவா இவை.

*றொ.திரேசாமேரி,வலித்தூண்டல்*


### உலகக்கிண்ணத் தொடர் உன்னிப்பாகக் கவனிக்கப்பட வேண்டியதே!

உலகக்கிண்ண கால்பந்துத் தொடர் ரஷ்யாவில் தற்போது நடைபெற்று வருகிறது. உச்சக்கட்ட விறுவிறுப்பைத் தொடர் எட்டியுள்ளது. இந்தத் தொடரின் ஆட்டங்களை கால்பந்தாட்டம் விளையாடும் அனைத்து வீரர்களும், இளைஞர்களும் உன்னிப்பாகக் கவனிக்க வேண்டும். அது அவசியமானதும்கூட. ஒவ்வொரு நாளும் மூன்று ஆட்டங்கள் பெரும்பாலும் நடைபெறுகின்றன. இலங்கை நேரப்படி மாலை 5.30 மணி, இரவு 8.30 மணி, இரவு 11.30 மணி என்றவாறாக அந்த ஆட்டங்கள் நடைபெறுகின்றன. நள்ளிரவு ஆட்டத்தைத் தவறவிட்டாலும் ஏனைய இரண்டு ஆட்டங்களையும் பார்க்கலாம்.

கால்பந்தாட்டத்தில் வடக்கு மாகாண வீரர்கள் தற்போது ஓரளவு சிறப்பாகச் செயற்பட ஆரம்பித்துள்ளனர். அவ்வப்போது சிலர் தேசிய அணிகளிலும் இடம்பிடித்து விளையாடுகிறார்கள். எனினும் கால்பந்தாட்ட நுணுக்கங்கள் என்பது இன்னும் எமது வீரர்களுக்கு போதவில்லை என்றுதான் சொல்ல வேண்டும். ரஷ்யாவில் நடைபெற்றுவரும் உலகக்கிண்ணத் தொடரில் வீரர்களின் வேகம், விவேகம், கணிப்பு, பந்துப்பரிமாற்றங்கள், பந்துப்பரிமாற்றம் செய்கின்ற நுணுக்கங்கள் என்று அனைத்தும் துல்லியமாக காட்டப்படுகின்றன. மெதுவேகம், மீள் ஒளிபரப்பு என்பவற்றில் ரஷ்யத் தொழில்நுட்பங்கள் வியக்க வைக்கும் படியாக அமைந்துள்ளன. அவற்றை எமது வீரர்கள் தவற விடக்கூடாது என்பதே எனது கருத்து.

*எ.றொபேட்றாபநாதன்,ஆனைக்கோட்டை*

## ஓநாயும், ஆட்டுக்குட்டியும்



ஒரு சிறிய ஆட்டுக்குட்டி ஒருநாள் தண்ணீர் குடிக்க நீரோடைக்கு வந்தது. எதிர்கரையில் சிறிது மேலே ஒரு ஓநாய் தண்ணீர் குடித்துக்கொண்டிருந்தது.
ஆட்டுக்குட்டியைக் கண்டதும் ஓநாயின் நாக்கில் நீர் ஊறியது. ஆகா! என்ன அழகான குட்டி. ருசியாகச் சாப்பிடலாமே என்று நினைத்தது. ஏன் என் தண்ணீரை நீ கலக்குகின்றாய் என்று கேட்டதும் குட்டி பயந்து ஓடிப்போயி ருக்க வேண்டும்.
ஆனால் அது பயமின்றி "நான் இங்கே நிற்கிறேன். நீங்களோ என்னைவிட மேலே நிற்கிறீர்கள். என்னால் எப்படி உங்கள் தண்ணீரை கலக்க வைக்க முடியும்?" என்று திருப்பிக் கேட்டது. "நீ கலக்காவிட்டால் உன் தகப்பன் கலக்கியி ருப்பான் அல்லது பாட்டன் கலக்கியி ருப்பான். அதற்கான தண்டனையை நீ அனுபவி என்று கூறிக்கொண்டு குட்டி மீது பாய்ந்த ஓநாய் அதனைக் கொன்று விழுங்கி விட்டது.

***தீயவர்களிடம் நியாயம் பேசுவதால் பயனில்லை.***

# காட்டு ராஜா



சிங்கத்துக்கு காட்டில் தனிப்பெருமை உண்டு. யானை மிகவும் பலம் பொருந்திய மிருகமாக இருந்தாலும் புலி ராஜா பட்டத்திற்கு தகுதியாயிருந்தாலும் சிங்கம்தான் ராஜா. கம்பீரத்தை அளிக்கும் அதன் பிடரியும் யானையையும் எதிர்க்கும் அதன் ஆற்றலும் அதை ராஜாவாக ஆக்கியிருக்கிறது. ஆனால் ராஜாக்கள் அதிகம் பேர் இருக்க முடியாது. உலகிலேயே சிங்கராஜாக்கள் ஆயிரம் பேர் இருப்பதாகக் கணக்கெடுக்கிறார்கள். ஒரு காலத்தில் சுமார் ஐம்பதாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு அதாவது நாகரீகம் வளர்ச்சி அடையாத காலத்தில் சிங்கங்கள் ஆடுமாடுகளைப் போல தெருக்களில் அலைந்து திரிந்தனவாம். அப்போது அவைகள் சாதாரண மக்கள் நிலையில் தான் இருந்தன.
இப்பொழுது ஆபிரிக்காவிலும் ஆசியாவிலும் மட்டுமே சிங்கங்களைப் பார்க்க முடிகிறது. இந்தியாவில் குஜராத்தில், கிர் காடுகளில் தான் சிங்கங்கள் வாழ்கின்றன. ஆபிரிக்க காட்டுச் சிங்கங்களுக்கு பிடரி முடி மிக அதிகமாய் இருக்கும் ஆசிய நாடுகளின் சிங்கங்களுக்கு பிடரி முடி குறைவு ஆபிரிக்க சிங்கங்களின் பிடரி முடி ஆழ்ந்த பழுப்பு நிறமாயும், ஆசிய நாட்டு சிங்கங்களில் பிடரி முடி கோதுமை நிறம் கலந்த கறுப்பு நிறமாயும் இருக்கும் ஆசிய நாட்டு சிங்கங்களின் முன்னாங்கால்களின் முட்டியில் முடி கொத்தாக இருக்கும் இந்தியாவில் கிட்டத்தட்ட கிர் காட்டில் 250 சிங்கங்களும் பல்வேறு தேசிய சிங்கங்கள் எண்பத்தைந்தும் இருப்பதாக கணக்கெடுத்துள்ளார்கள்.

ஆண் சிங்கம் பெயரளவில் தான் ஆண் போல பெண் சிங்கந்தான் உழைத்து சிங்கக்கு டும்பத்தைக் காப்பாற்றுகிறது. பெண் சிங்கமே வேட்டையாடும் ஆண் சிங்கத்தின் வேலை தன் கூட்டம் வாழ்வதற்கு நிலப்பிரதேசத்தைக் கண்டு பிடித்து அவற்றை எதிரிகளிடமிருந்து பாதுகாக்கிறது.

கிட்டத்தட்ட 40 சிங்கங்கள் வரை கூட்டாக வாழுமாம். அவை வாழும் பகுதி 20 சதுர கிலோமீட்டரிலிருந்து 400 கிலோ மீற்றர் வரை இருக்குமாம். ஆண் சிங்த் தலைவன் ஆங்காங்கே சிறு நீர் பாய்ச்சியும் கால் நகங்களால் மரங்களில் கீறல்களை ஏற்படுத்தி தனது எல்லையை அறிந்து கொள்ள வகை செய்யும் மற்ற சிங்கங்களைத் தன் எல்லைக்குள் வராமல் பாதுகாப்பது மட்டுமே.

ஒரு சிங்கத்தின் எல்லைக்குள் நுழையும் மற்றொரு சிங்கம் வலுவற்றதாயிருந்தால் அதை மற்றச் சிங்கங்கள் சண்டையிட்டு கொன்று விடும் புதிதாக வந்த சிங்கம் மிக வலுவுள்ளதாயிருந்தால் மற்ற சிங்கங்களைத் தன் ஆணைக்குள் கொண்டு வந்து விடும். கிழப்பருவம் எய்திய ஆண் சிங்கங்கள் சில சமயம் கூட்டத்தை விட்டு துரத்தி விடப்படுமாம். அப்படித் துரத்தப்பட்ட ஆண்சிங்கங்கள் பெண் சிங்கங்களுடன் சேர்ந்து வாழ முற்பட்டாலும் வாழ்வது அபூர்வம். துரத்தப்பட்ட ஆண் சிங்கங்கள் அதிக காலம் வாழாது என்றும் ஆய்வுகள் கூறுகின்றன.

## வர்ணம் தீட்டுவோம்



## ஆங்கிலம் பேசலாம் வாங்க



- This moring இன்று காலை,
- This afternoon இன்று மதியம்,
- This evening இன்று மாலை,
- Till now இதுவரை,
- Yet இன்னும்,
- Already ஏற்கனவே,
- Just இப்போது தான்,
- So far இதுவரை,
- Never ஒருபோதுமில்லை,
- For ஒரு குறிப்பிட்ட நேரத்தில்,
- Ever எப்போதும்,
- I have informed நான் தகவல் தெரிவித்திருக்கிறேன்.
- I have helped நான் உதவி செய்திருக்கிறேன்.
- She has cooked அவள் சமைத்திருக்கிறாள்.
- It has rusted அது துருப்பிடித்திருக்கிறது.
- They have discussed அவர்கள் விவாதித்திருக்கின்றனர்.
- I have bought a car நான் ஒரு கார் வாங்கியிருக்கிறேன்.
- She has paid the fees அவள் பணம் கட்டியிருக்கிறாள்.
- We have built a hotel நாங்கள் ஒரு விடுதி கட்டியிருக்கிறோம்.
- Mind your business. உன் வேலையைப் பார்.
- Whats their next move? அவர்களின் அடுத்த கட்ட நடவடிக்கை என்ன?
- He is good for nothing fellow. அவன் ஒன்றுக்கும் உதவாதவன்.
- Believe me. என்னை நம்பு.
- Help yourself. உனக்கு நீயே உதவி செய்து கொள்.
- Do you have a tea or coffee? உனக்கு தேனீர் வேண்டுமா காபி வேண்டுமா?

## பிக்பாஸ் வீட்டில் வடிவேல்..










# சர்ச்சைக்குள்ளாகிய விஜயின் 62ஆவது பட முதல் சுவரொட்டி

விஜய்யின் 62ஆவது படத்தின் முதல் சுவரொட்டியில் விஜய்புகைப்பிடிப்பதுபோன்றகாட்சி இடம்பெற்றுள்ளது. இந்தக் காட்சி மக்கள் மத்தியில் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

ஏ.ஆர்.முருகதாஸ் இயக்கத்தில் விஜய் நடித்துவரும் 62 ஆவது படத்துக்கு 'சர்கார்' எனப் பெயரிடப்பட்டுள்ளது. இந்தப் படம் தீபாவளிக்கு வெளியாகும் என அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் படத்தில் விஜயின் ஜோடியாக கீர்த்தி சுரேஷ் நடிக்கிறார். ராதாரவி, பழ.கருப்பையா, யோகிபாபு, வரலட்சுமி சரத்குமார் ஆகியோர் முக்கிய வேடங்களில் நடிக்கின்றனர். இந்த நிலையில் தற்போது 'சர்கார்' படத்தின் முதல் சுவரொட்டியில் விஜய் புகைப் பிடிப்பது போன்ற காட்சி இடம்பெற்றிருக்கின்றது.

திரைப்படங்கள் மக்களிடம் நல்லெண்ணங்களையும் விதைக்கலாம்; நஞ்சையும் விதைக்கலாம். ஒரு திரைப் படத்தின் முதல் சுவரொட்டியை வெளியிடும்போதே அந்தத்திரைப்படத்தின்கதாநாயகன்புகைப்பிடிப்பதுபோன்ற காட்சியை வெளியிடுவது எந்த வகையில் சரியானதாக இருக்கும்.

இது பிஞ்சுகளின் மனதில் நஞ்சை விதைப்பதைவிட மோசமான செயல், கடுமையாகக் கண்டிக்கத்தக்கது எனப் பலர் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** மனதில் புத்துணர்வு மேலோங்கும். தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்த வருமானம் கிடைக்கும். மாமன் மைத்துனர் வகையில் கேட்ட உதவி கிடைக்கும்.

**இடபம்:** பிடிவாத குணத்தால் குடும்பத்தில் குழப்பம் ஏற்படலாம். தொழிலில் வருமானம் சுமாராக இருக்கும், குடும்பத்தில் திடீர் செலவு உண்டாகும்.

**மிதுனம்:** அடுத்தவர் வியக்கும் வகையில் பணியாற்றுவீர்கள். தொழிலில் உற்பத்தி விற்பனையின் அளவு அதிகரிக்கும். சேமிக்கும் விதத்தில் வருமானம் கிடைக்கும்.

**கடகம்:** பணிகளில் மேம்போக்காக ஈடுபடுவீர்கள். தொழில், வியாபாரத்தில் சுமாரான ஆதாயம் கிடைக்கும். பணியாளர்கள் விண்ணப்பித்த கடனுதவி கிடைக்கும்.

**சிங்கம்:** பேச்சு, செயலில் நேர்மை நிறைந்திருக்கும். நல்லவர்களின் அறிமுகமும் ஆசியும் கிடைக்கும். தொழிலில் உற்பத்தி விற்பனை முன்னேற்றம் பெறும்.

**கன்னி:** மனதில் எண்ணிய எண்ணம் செயல்வடிவம் பெறும். நண்பரின் உதவி தக்க சமயத்தில் கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் இலாபம் அதிகரிக்கும்.

**துலாம்:** குடும்ப விஷயத்தைப் பற்றி பிறரிடம் பேச வேண்டாம். பணியாளர்கள் எதிர்பார்த்த சலுகை கிடைப்பதில் தாமதம் உண்டாகும்.

**விருச்சிகம்:** நண்பரின் செயலை விமர்சனம் செய்ய வேண்டாம். தொழிலில் உற்பத்தி விற்பனை சுமாராக இருக்கும். பெண்களால் குடும்பத்தில் ஒற்றுமை ஏற்படும்.

**தனுசு:** கடந்த கால அனுபவம் வளர்ச்சிக்கு துணைநிற்கும். புதிய வாய்ப்பை சரியாகப் பயன்படுத்துவீர்கள். தொழிலில் வியத்தகு அளவில் அதிகரிக்கும்.

**மகரம்:** மனதில் மகிழ்ச்சி நிலைக்கும். தொழில், வியாபாரத்தில் வருமானம் அதிகரிக்கும். வாழ்க்கைத்தரம் மேம்படும். பணக்கடனில் ஒருபகுதி அடைபடும்.

**கும்பம்:** சிலரது பேச்சால் சங்கடத்திற்கு ஆளாகலாம். பணியில் மட்டும் அக்கறை கொள்வது நல்லது. தொழில், வியாபாரத்தில் சுமாரான இலாபம் கிடைக்கும்.

**மீனம்:** செயலில் நிதானத்தைப் பின்பற்றுவது நல்லது. தொழில், வியாபாரத்தில் சுமாரான ஆதாயம் கிடைக்கும். பணியாளர்கள் பணிச்சுமைக்கு ஆளாவர்.

ஆகச்சிறந்த ரவுடித்தனம் என்னன்னா



சண்டையைக் கண்டுக்காம போறதுதான்...

## twitter

படிக்காத_மேதை @Srilaksman0

உணர்வுகளை புரிந்து கொள்ளும் உறவுகள் #வரம்.

சிலந்தி™@nandhu_twitts

மனதில் உள்ள குறைகளை திருத்தி கொள்ளாதவர்களே உண்மையான.. மாற்றுத் திறனாளிகள்..!!

ஸ்ரீ@SrijaSj

'பிடித்திருக்கு' என்பதை வேதனையுடன் சொல்கிறோம்..!! சளி



இல்லற வாழ்வில்
இன்னல் இன்றி
இன்னிசை ஒலிக்க
இன்றியமையா
இசைஸ்வரங்கள்
ஏழு அல்ல
மூன்றேதான்

'சரிமா'

## சுடோக்கு

எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | 8 | 3 | | | 5 | | 7 |
| | | 3 | | | | | | 6 |
| | | | 4 | | 7 | | | |
| | | 2 | 8 | | | | | |
| 1 | | | | 2 | | | | 4 |
| | | | | | 5 | 1 | | |
| | | | 7 | | 2 | | | |
| 3 | | | | | | 6 | | |
| 8 | | 5 | | | 9 | 7 | | |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 5 | 3 | 4 | 9 | 8 | 6 | 7 | 2 |
| 6 | 7 | 2 | 3 | 1 | 5 | 9 | 4 | 8 |
| 4 | 8 | 9 | 7 | 2 | 6 | 3 | 1 | 5 |
| 3 | 4 | 5 | 8 | 7 | 9 | 2 | 6 | 1 |
| 9 | 1 | 7 | 2 | 6 | 3 | 8 | 5 | 4 |
| 2 | 6 | 8 | 5 | 4 | 1 | 7 | 9 | 3 |
| 7 | 2 | 6 | 1 | 8 | 4 | 5 | 3 | 9 |
| 8 | 3 | 1 | 9 | 5 | 7 | 4 | 2 | 6 |
| 5 | 9 | 4 | 6 | 3 | 2 | 1 | 8 | 7 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளே 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை.

# நண்டு சாப்பிடுவதால் கிடைக்கும் நன்மைகள்



கடல் உணவுகளில் சத்துக்கள் அதிகம். மீன், இறால், கணவாய், நண்டு என கடல் வகை உணவுகளில் வாரத்துக்கு ஒருமுறையாவது சாப்பிடுங்கள். இதில் ஒன்றான நண்டினை சாப்பிடுவதன் மூலம் பல்வேறு நன்மைகள் கிடைக்கின்றன.

**நண்டில் உள்ள சத்துக்கள்**

புரோட்டின், ஒமேகா 3 பேட்டி ஆசிட், செலினீயம், விற்றமின் பி2, காப்பர் மற்றும் பொஸ்பரஸ் போன்ற கனிமச் சத்துக்கள் அதிகளவில் உள்ளன. மேலும் இதில் கொழுப்புக்கள் மற்றும் கலோரிகள் மிகவும் குறைவு.

**மருத்துவக் குணங்கள்**

நண்டில் அதிக அளவிலான புரோட்டின் சத்துக்கள் இருப்பதால், அனைத்து வயதினரும் இதனை சாப்பிடுவது நல்லது, ஏனெனில் தசைகளின் சீரமைப்புக்கு உதவுகிறது.

அதிக அளவிலான மினரல்ஸ், விற்றமின் மற்றும் குறைந்த அளவிலான கொழுப்பு இருப்பதால் இதய நோய்களில்இருந்து காக்கிறது. மேலும் மூளைகளின் வளர்ச்சிக்கு உதவுகிறது.

நண்டு சாப்பிடுவதன் மூலம் மனிதர்களின் நடவடிக்கையில் மாறுபாடுகள் ஏற்படும் என சில ஆராய்ச்சியாளர்கள் பரிந்துரைக்கிறார்கள்.

உடலில் உள்ள திசுக்கள் மற்றும் செல்களில் ஏற்படும் சேதத்தினைத் தடுக்க இதில் உள்ள செலீனியம் சத்து உதவுகிறது.

இதில் உள்ள ரிபோபிளேவின் சத்து, குருதிச் சிவப்பு அணுக்களின் உற்பத்திக்கு உதவுகிறது.மேலும் கண்கள், தோல் மற்றும் நரம்பு மண்டல செயற்பாட்டையும் ஊக்குவிக்கிறது.

பருக்கள் இருந்தால், நண்டுகளைச் சாப்பிடுங்கள். ஏனெனில் நண்டில் உள்ள ஜிங்க், எண்ணெய் சுரப்பை கட்டுப்படுத்தும். இதனால் முகப்பருக்கள் ஏற்படுவது தடுக்கப்படும்.

கர்ப்பிணிகள் நண்டு சாப்பிடக்கூடாது. ஆனால் கருத்தரிக்க நினைக்கும் பெண்களுக்கு ஃபோலேட் மிகவும் இன்றியமையாதது. இந்தச் சத்து காய்கறிகள் மற்றும் பழங்களில் இருந்தாலும், நண்டில் அதிகமாகவே உள்ளது. எனவே இதனை கருத்தரிக்க நினைக்கும் போது அவ்வப்போது எடுத்து வந்தால், குழந்தைகளுக்கு நல்லது.

இதில் உள்ள மினரல் சத்துக்கள் எலும்பு மற்றும் பற்களின் வளர்ச்சிக்கு உதவுகிறது. இதில் கனிமச்சத்தான பொஸ்பரஸ் நிறைந்துள்ளது, நாம் உண்ணும் உணவை ஆற்றலாக மாற்றுகிறது.

சிறுநீரக செயற்பாடு சரியான முறையில் நடப்பதற்கு உதவுகிறது

## கடலுணவின் நேற்றைய விலை நிலவரம்




| | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித்துறை | சாவகச்சேரி |
|---|---|---|---|---|
| இறால் | 700 | 1000 | 1000 | 1000 |
| நண்டு | 600 | 500 | 500 | 500 |
| கணவாய் | 800 | 800 | 900 | 1000 |
| பாரை | 700 | 500 | 700 | 1100 |
| சுறா | 600 | 900 | 1000 | 1200 |
| சீலா | 600 | 500 | 600 | 400 |
| விளை | 600 | 450 | 600 | 800 |
| முரல் | 500 | 400 | 500 | 500 |
| கும்பிளா | 400 | 350 | 400 | – |
| கிளாக்கன் | 800 | 400 | 600 | 600 |
| ஓரா | 400 | 500 | 500 | 500 |
| திரளி | 300 | 200 | 200 | 200 |
| நகரை | 300 | 250 | 500 | 250 |
| சூடை | 150 | 150 | 200 | 150 |
| ஒட்டி | 200 | 200 | 400 | 400 |
| திருக்கை | 300 | 300 | 500 | 400 |
| மதனம் | 200 | 300 | 300 | – |
| கொய் | 180 | 100 | 100 | 100 |
| பாலை | 250 | 300 | 600 | 300 |
| வாளை | 150 | 300 | 500 | 200 |

## மரக்கறிகளின் நேற்றைய விலை

| மரக்கறிகள் | சுன்னாகம் | மருதனார்மடம் | நெல்லியடி | திருநெல்வேலி |
|---|---|---|---|---|
| கத்தரி | 140 | 120 | 80 | 140 |
| முள்ளங்கி | 80 | 100 | 120 | 120 |
| மரவள்ளி | 40 | 40 | 40 | 40 |
| பயிற்றை | 120 | 220 | 180 | 200 |
| பாகல் | 200 | 300 | 320 | 240 |
| க.கிழங்கு | 100 | 100 | 100 | 100 |
| பெ.வெங்காயம் | 100 | 140 | 120 | 110 |
| சி.வெங்காயம் | 120 | 150 | 160 | 160 |
| பூசணி | 40 | 30 | 40 | 40 |
| தக்காளி | 280 | 180 | 260 | 260 |
| வாழைக்காய் | 40 | 80 | 50 | 40 |
| கீரை | 40 | 30 | 20 | 20 |
| பொன்னாங்காணி | 40 | 35 | 45 | 40 |
| ப.மிளகாய் | 200 | 250 | 320 | 300 |
| புடோல் | 100 | 120 | 140 | 120 |
| கோவா | 120 | 140 | 180 | 160 |
| வெண்டி | 100 | 100 | 120 | 100 |
| போஞ்சி | 320 | 240 | 360 | 260 |
| லீக்ஸ் | 240 | 300 | 360 | 360 |
| தேங்காய் | 70 | 70 | 70 | 70 |
| உ.கிழங்கு | 100 | 130 | 120 | 130 |
| தேசிக்காய் | 240 | 160 | 80 | 120 |
| வல்லாரை | 20 | 35 | 20 | 20 |
| கறிமிளகாய் | 160 | 180 | 320 | 240 |
| கரட் | 280 | 200 | 360 | 360 |
| முருங்கைக்காய் | 200 | 700 | 400 | 300 |

# முளைக்கீரையின் மருத்துவப் பயன்கள்

அடிக்கடி பயன்படுத்தும் கீரைகளில் ஒன்றான முளைக்கீரையின் மருத்துவக் குணங்களை பற்றிக் காண்போம்.



முளைக்கீரையை தொடர்ந்து சாப்பிட்டு வந்தால் உடல் ஆரோக்கி யத்துக்கு தேவையான விற்றமின்களும் தாதுப்பொருள்களும் உடலுக்குப் போதிய அளவில் கிடைக்கும்.

40 நாள்களுக்கு குழந்தைகள் தொடர்ந்து சாப்பிட்டு வந்தால் நல்ல உயரமாக வளருவார்கள்.


முளைக்கீரையுடன் சீரகத்தை நெய்யில் வறுத்து அதனுடன் மிளகாய் வற்றல் மற்றும் தண்ணீர் சேர்த்து கொதிக்க விட்டு அந்தச் சாற்றை வடித்துவிட்டு சோற்றில் கலந்து சாப்பிட்டால் அனைத்து வகையான காய்ச்சலும் குணமாகும்.

முளைக்கீரை சாற்றில் சீரகத்தை ஊறவைத்து, உலர்த்தி, தூள் செய்து சாப்பிட்டால் பித்த நோய், மயக்கம், குருதி அழுத்தம் ஆகியவை குணமாகும்.

முளைக்கீரையுடன் சிறிது புளிச்ச கீரை, மிளகு, மஞ்சல், உப்பு சேர்த்து அவித்து சாப்பிட்டால் ருசியின்மை குறைபாடு நீங்கும்.

முளைக்கீரையை சாப்பிட்டால் காச நோயால் ஏற்படும் காய்ச்சல் நீங்கும். முளைக்கீரையுடன் சிறு பருப்பு சேர்த்து சமைத்து சாப்பிட்டால் குடல்புண் குணமாகும். முளைக்கீரை சாற்றில் உளுந்து ஊற வைத்து அரைத்து சாப்பிட்டால் நீர் கடுப்பு மறையும்

# புடலங்காய் பொரியல்



**தேவையான பொருள்கள்**


புடலங்காய் -1
கடலைப்பருப்பு - 2 மேசைக்கரண்டி
தேங்காய்த்துருவல் - 2 மேசைக்கரண்டி
காய்ந்தமிளகாய் - 2 முதல் 3 வரை
மஞ்சள் தூள் - ஒரு சிட்டிகை
கறிவேப்பிலை - சிறிது
எண்ணை -1 தேக்கரண்டி
கடுகு - 1/2 தேக்கரண்டி
உப்பு - 1/2 தேக்கரண்டி அல்லது தேவைக்கேற்றவாறு

**செய்முறை**

புடலங்காயை நீளவாக்கில் வெட்டி, அதன் உள்ளிருக்கும் விதை மற்றும் நூல்'போன்ற வெள்ளைப் பகுதியையும் நீக்கி விடவும். பின்னர் அதை அரைச்சந்திர வடிவிலே மெல்லிய வில்லைகளாக நறுக்கவும். அத்துடன் சிறிது உப்புச் சேர்த்து பிசைந்து ஒரு தட்டில் போட்டு சற்று சாய்த்தால் போல் வைக்கவும். இதனால் காயிலுள்ள நீர் வழிந்து விடும்.

கடலைப் பருப்புடன் மஞ்சள் தூளைச் சேர்த்து வேக வைத்தெடுக்கவும். ஒரு சட்டியில் எண்ணை விட்டு கடுகு போடவும். கடுகு வெடித்தவுடன் மிளகாயைக் கிள்ளிப் போட்டு கறிவேப்பிலையையும் சேர்க்கவும். அத்துடன் புடலங்காயை நன்றாகப் பிழிந்துப் போடவும்.

சிறிது உப்பு சேர்த்து வதக்கவும். பச்சை வாசனை மாறி காய் வெந்தவுடன் வேக வைத்துள்ள கடலைப் பருப்பையும் பிழிந்து சேர்க்கவும். அத்துடன் தேங்காய்த்துருவலையும் சேர்த்து இரண்டொரு நிமிடம் கிளறி இறக்கி வைக்கவும்.



## இது புதுசு

ஆண்களுக்கான சப்பாத்து வகைகள் சில சந்தைக்கு அறிமுகமாகியுள்ளன. இவை இரண்டாயிரத்து 300 ரூபாவுக்கு விற்பனை செய்யப் படுகின்றன.

## கொள்கை ....

வவுனியா, ஜீன் 25

தமிழர் நலனுக்காக ஒற்றுமைப்பட வேண்டுமாக இருந்தால், ஐக்கியப்பட வேண்டுமாக இருந்தால் கொள்கை முக்கியமானது. கொள்கையின் அடிப்படையிலேயே ஐக்கியமாக முடியும். இவ்வாறு ஈ.பி.ஆர்.எல்.எவ். அமைப்பின் தலைவர் மற்றும் செயலர் தெரிவித்தனர்.

வவுனியாவில் தியாகிகள் தின நிகழ்வு நேற்று இடம்பெற்றது. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்;.

ஈ.பி.ஆர்.எல்.எவ். அமைப்பின் தலைவரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரமான சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்ததாவது,

கொழும்பின் நிலமைகள் அடுத்த தேர்தலை மையமாக வைத்து காய்களை நகர்த்துகின்ற வகையில்தான் இருக்கின்றன. மாகாணசபைத் தேர்தல்களில் மைத்திரி அணியோ ரணில் விக்கிரமசிங்க அணியோ தோற்றுவிடக்கூடாது என்பதில் கவனமாக இருக்கிறார்கள். தேர்தல் வரும் போகும். ஆனால் தமிழ் மக்களுக்கு எவ்வாறு தீர்வைப் பெற்றுக் கொள்ளப்போகின்றோம் என்பதுதான் முக்கிய விடயம். தமிழ் மக்கள் மத்தியில் ஒற்றுமை என்பது தேவை. ஆனால் அந்த ஒற்றுமை எதன் அடிப்படையில் என்பதே முக்கியமானது. எல்லாவற்றையும் விட்டுக்கொடுத்து அரசுடன் சங்கமமாவது என்பதன் அடிப்படையிலா? அல்லது நாங்கள் ஒரு கொள்கையை முன்வைத்து அதனை எவ்வாறு நடைமுறைக்கு கொண்டு வருவது என்பதன் அடிப்படையிலா?

ஓர் ஐக்கியத்தை உருவாக்குகின்ற போது அது ஏன் எதனை நோக்கிப் போக வேண்டும் என்ற விளக்கம் இருக்க வேண்டும். எல்லாவற்றையும் மறக்கலாம். ஆனால் புதிய ஐக்கியத்துடன் செல்கின்ற போது ஓர் கொள்கையின் அடிப்படையில் வேலைத்திட்டங்களை வகுத்து அந்த வேலைத்திட்டத்தை முன்னெடுத்துச் செல்லக்கூடிய வகையில் உள்நாட்டிலும் சரி வெளிநாட்டிலும் சரி நாம் எவ்வாறு அதை முன்னகர்த்தப் போகின்றோம் என்பதில் தான் அந்த ஐக்கியம் அமைந்துள்ளது. ஆனால் எம்மவர்கள் அதனைச் செய்கின்றார்களா என்றால் நிச்சயமாக இல்லை என்பதுதான் அதற்கான பதில்.

முதலமைச்சர் கடந்த பல ஆண்டுகளாக பல கருத்துக்களை முன்வைத்துள்ளார். ஒன்றுபட்ட ஓர் கொள்கையின் கீழ் எல்லோரும் ஒன்றாக வரவேண்டுமாக இருந்தால் அந்தக் கொள்கைப்பிடிப்பு என்பது முக்கியமானது. பேச்சு என்பது முக்கியமானதே. ஆனால் பேச்சு என்பது எல்லாவற்றையும் விட்டுக்கொடுத்து பேசுவது அல்ல. அந்த விடயங்களில் நாம் எவ்வாறு இறுக்கமாக இருக்கின்றோம். நாடாளுமன்றத்திலும், மாகாணசபையிலும் இருக்கும் வரைக்கும் இருந்து விட்டு போகலாம் என்பது தவறானது என்றார்.

**சிவசக்தி ஆனந்தன்**

இந்த நிகழ்வில் உரையாற்றிய சிவசக்திஆனந்தன், இலங்கை - இந்திய ஒப்பந்தகாலத்திலே இணைந்த வடகிழக்கை காப்பாற்றுவதற்காக அல்லது இந்த மாகாணசபையை தக்க வைப்பதற்காகத்தான் பெருந்தொகையான போரராளிகள் உயிர் நீத்திருக்கிறார்கள். மாகணா சபையை நாங்கள் பொறுப்பெடுக்கும்போது பல்வேறு சவால்கள் விமர்சனங்கள், குற்றச்சாட்டுகள், சேறடிப்புகள் என்பன எம்மீது முன்வைக்கப்பட்டது.

எங்களுக்குள் ஏற்பட்ட ஒற்றுமையின்மை காரணமாக இன்று 28 ஆண்டுகளுக்குப் பின்னரும் நாங்கள் பெரும் இழப்புகளை துயரங்களைச் சந்தித்துள்ளோம். பல்வேறுபட்ட முரண்பாடுகளும் அல்லது பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஒரு தீர்வை பெற்றுக்கொள்ள கூட முடியாத நிலையில் தான் எங்களின் ஒற்றுமையீனம் இன்று கொண்டுவந்த விட்டிருக்கிறது.

இந்தத் தவறுகளில் இருந்து நாங்கள் திருந்திக்கொள்ள வேண்டும் என்று நினைத்தாலும் கூட அதனை திருத்தமுடியாத நிலையில்தான் தமிழ் மக்களுக்குள்ளும் அரசியல் கட்சிகளுக்குள்ளும் விரிசல்களும், முரண்பாடுகளும் வளர்ந்து கொண்டுசெல்கின்றன.

உண்மையான ஐக்கியம் வர வேண்டுமாகவிருந்தால் அது ஒரு கட்சியினாலேயோ அல்லது ஒரு கட்சியில் இருக்கக்கூடிய தனிநபர்களினாலேயோ அல்லது ஒரு கூட்டின் பெயரால்ஒருகட்சியைமுன்னிலைப்படுத்துவதனாலேயோ அல்லது அந்த கட்சியை வளப்படுத்துவதற்காக தமிழ் மக்களையும் தமிழ் கட்சிகளையும் சேர்ந்து ஒரு போலியான கூட்டாக போலியான ஒற்றுமையால் தமிழ் மக்களுக்குத் தீர்வை பெற்றுக்கொள்ளமுடியாது.

தமிழ் கட்சிகளிடத்திலே வாக்குகளைப் பெற்றுக் கொள்வதற்காகவும், பதவிகளைப் பெற்றுக்கொள்வதற்காகவும் மட்டுமே அந்த ஒற்றுமை ஏற்படாமல் கொள்கையின் அடிப்படையில் ஒற்றுமை உருவாக்கப்படவேண்டும்.

நாம் இத்தனை ஆண்டுகளாகப் பெற்ற படிப்பினைகளில் இருந்து விடுபட வேண்டுமாக இருந்தால் ஒரு கூட்டான முயற்சிவேண்டும் கூட்டுத் தலைமை வேண்டும். அதற்காக ஒரு கொள்கை திட்டம் வகுக்கப்படவேண்டும். அப்படிஇருந்தால் தான் அரசின் நெருக்கடிகளில் இருந்து எம்மைப் பாதுகாத்துக் கொள்ளமுடியும்.

மாகாணசபை தேர்தலில் தனித்து நின்றால் முதலமைச்சர் ஒரு மாற்று அணியை உருவாக்கி அது ஒரு குறிப்பிட்ட கட்சிக்கு பெரும்பின்னடைவை கொண்டுவரும் அல்லது அந்தக் கட்சி படுதோல்வியைச் ஸசந்திக்கும் என்பதற்காக மட்டுமே விக்னேஸ்வரனை உள்வாங்கினால் மாகாண சபை தேர்தலில் சில வெற்றிகளைப் பெற்றுக் கொள்ளலாம் என்ற நப்பாசையில் மீண்டும் ஒரு தவறை விடுவார்களானால் தமிழ் மக்களுக்கான விமோசனம் எந்த ஒரு காலத்திலும் கிடையாது. தமிழ்மக்களுக்கு எதிர்காலத்திலே ஒரு கொள்கைத் திட்டம் வேண்டும். பொதுச் சின்னம் வேண்டும். ஒரு ஜனநாயக ரீதியான கூட்டு இருக்கவேண்டும். அதனடிப்படையில் தலைமைகள் தமது தவறுகளை திருத்திக்கொண்டு வருவார்களேயானால் நாம் அரசுக்கும் பன்னாட்டுச் சமூகத்துக்கும் ஒரு அழுத்தத்தைக் கொடுக்க முடியும் என்றார்.

(5,110)

## யாழ்.பல்கலையில்.

ரத்னவின் இடதுபக்க முதுகுப் பகுதியில் கத்தியால்குத்துப்பட்டுள்ளமையினால் அவரது நிலைமை மோசமாக உள்ளதாக மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்தன. யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் வணிகபீட இறுதி ஆண்டு சிங்கள மாணவர்களிடையே கருத்து முரண்பாடுகள் இருந்து வந்துள்ளதாக பல்கலைக்கழக வட்டாரங்கள் தெரிவித்தன. இந்த நிலையில் கிரிக்கெட் ஆட்டம் நேற்றுப் பகல் இடம்பெற்றுள்ளது. அதன் பின்னரே கைகலப்பு ஏற்பட்டதாகவும், இது தொடர்பில் விசாரணைகள்முன்னெடுக்கப்படுவதாகவும் கோப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்.

(5.8.114)


























# கால்பந்தாட்டத் திருவிழா ரஷ்யாவில் கோலாகலம்











உலகக் கிண்ணக் கால்ப்பந்தாட்டத் தொடர் ரஷ்யாவில் தற்போது நடைபெற்று வருகிறது. தனக்கே உரித்தான விறுவிறுப்பையும், பரபரப்பையும் கொண்டு இந்தத் தொடர் நடைபெற்று வருகிறது. உலகின் பல பாகங்களில் இருந்தும் லட்சக் கணக்கான மக்கள் ரஷ்யாவில் முகாமிட்டுள்ளனர். அவ்வாறு பன்னாட்டு ஊடகங்களைக் கவர்ந்த ரசிகர்களின் ஒளிப் படங்கள் இங்கு ஒளிப்படக் கோர்வையாக வெளியிடப்படுகின்றன. பன்னாட்டு ஊடகமான ரொயிட்டர்ஸ் இந்த ஒளிப்படங்களை வெளியிட்டுள்ளது. (ம)

## பட்டறிவுகளின் ....

வவுனியா, ஜீன் 25

அனைத்துச் சந்தர்ப்பங்களிலும் ஒற்றுமையீனம் இருந்தது. எத்தனையோ பிளவுகள். இந்தப் பிளவுகளாலேயே நாம் இந்த நிலமையில் நிற்கின்றோம் என்று வன்னி மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வினோநோதராதலிங்கம் தெரிவித்தார்.

வவுனியாவில் நேற்று நடைபெற்ற தியாகிகள் தின நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவித்ததாவது,

அனைத்துச் சந்தர்ப்பங்களிலும் எம்மிடையே ஒற்றுமையீனம் இருந்தது. இன்றும் அதனைப் பற்றியே பேசிக்கொண்டிருக்கின்றோம். ஜி.ஜி.பொன்னம்பலத்திலிருந்து தந்தைசெல்வா வரை நாம் எத்தனை பிளவுகளை சந்தித்து இருக்கின்றோம். ஈரோசிலிருந்து ஈ.பி.ஆர்.எல்.எவ். இதிலிருந்து ஈ.பி. டி.பி. தமிழ்ஈழ விடுதலை இயக்கத்தில் இருந்து விடுதலைப் புலிகள், அதிலிருந்து தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள், புளொட்டிலிருந்து ஈ.என்.டி.எல்.எவ். இப்படி எத்தனை பிளவுகள்? என்ன நோக்கத்துக்காக நாங்கள் ஆயுதம் தூக்கி போராடினமோ அந்த நோக்கத்தை இன்னும் அடையவில்லை அடைவோமா என்பது கூடச் சந்தேகமே.

இன்றிருக்கும்தலைவர்கள்கூடஇவைஅனைத்தையும் உணர்ந்து அனுபவங்களைப் பாடமாகக் கொண்டு இனியும் திருந்துவார்களா என்று பார்தால் இனியும் திருந்துவதற்குச் சந்தர்பம் இல்லை என்றே தெரிகிறது.

எத்தனை இழப்புக்களைச் சந்தித்திருக்கிறோம். 1984ஆம் ஆண்டு ஆயுதப் போராட்ட இயக்கங்களான ரெலோ, ஈரோஸ், ஈ.பி.ஆர். எல்.எவ். போன்வற்றிலே ஒரு ஐக்கியம் உருவாக்கப்படவேண்டும். அதன் மூலம் தான் எம்முடைய விடுதலையை விரைவாக வென்றெடுக்கமுடியும் என்ற ஒரு நோக்கம் இருந்தது. ஈழதேசிய விடுதலைபுலிகள் என்ற அமைப்பு உருவாக்கப்பட்டது. அதன் பின்பு தமிழீழ விடுதலைப்புலிகளும் இணைந்து 4 விடுதலை இயக்கங்கள் பொது நோக்கத்துக்காக ஐக்கியபட்டன. ஆனால் ஒன்றரை ஆண்டுகள் கூட இந்த ஐக்கியம்; நீடிக்கவில்லை.

முள்ளிவாய்காலிலே பல அனுபவங்களைக் கண்டபின்பும் கூட அரசியல் ரீதியாக நாங்கள் அனைத்துப் பலங்களையும் இழந்தபின்பும் கூட அரசியல் ரீதியாகவேனும் ஒன்றுபட்டு இந்தச் சந்தர்பத்தில் நிற்கின்றோமா? அல்லது எதிர்காலத்திலே நிற்போமா?

ஒவ்வொரு ஆண்டும் தியாகிகள் தினம் வருகிறது. மாவீரர்நாள் வருகிறது. தமிழ்த் தேசிய வீரர்கள் நாள் வருகிறது. வீரமக்கள் தினம் வருகிறது. ஒவ்வொருவரும் தங்களது போராளிகளை தலைவர்களை நினைவுகூரும் நாள்கள் வந்து கொண்டுதான் இருக்கின்றன. அந்த தலைவர்களுடைய இலட்சியத்தை, அந்த நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு நாங்கள் எங்கு ஒற்றுமைபட்டிருக்கிறோம்.

30 ஆண்டுகளுக்கு முன்னர் விடுதலைக்காக வீட்டை விட்டு வெளியேறும்போது, நாடாளுமன்றம் செல்வோம், மாகாணசபை செல்வோம் என்ற நோக்கத்தோடு செல்லவில்லை. தமிழீழம் என்ற கோட்பாட்டைத் தவிர வேறு எந்தநோக்கமோ சிந்தனையோ இருக்கவில்லை. அதற்காக எமது உயிர் போகும் என்று ஒவ்வொரு நொடியும் நினைத்துக் கொண்டுதான் சென்றோம்.

இன்று அரசியலில் யாரோ எல்லாம் தேசியம் பேசிக் கொண்டிருக்கின்றார்கள். இந்த விடுதலைப் போராட்டத்தில் ஒரு துளி குருதி சிந்தாதவர்கள், வியர்வை சிந்ததாவர்கள், இதற்காக தம்மை அர்பணிக்காதவர்கள் எல்லாம் அரசியல்வாதிகளாக எம்முன்னே இருக்கின்றார்கள் - என்றார். (5,110)

## புலிகளின்...

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனின் உரைகள் அடங்கிய நூல் வெளியீட்டு விழா வீரசிங்கம் மண்டபத்தில் நேற்று இடம்பெற்றது. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

ஆயுதப் போராட்டத்தினூடாக ஒரு முடிவைக் கொண்டு வருவதை இலங்கை அரசு ஏற்றுக் கொள்ளவில்லை. அதனைப் பன்னாட்டுச் சமூகத்துக்கும், அரசு கூறி அவர்களையும் அதற்கு இணங்க வைத்தது. போராட்டத்தை முடிவுக்கு கொண்டு வர முடிவெடுத்தது.

அந்தப் போராட்டத்தை இலங்கை அரசு முடிவுக்கு கொண்டு வருவதற்கு இந்தியா, அமெரிக்கா, கனடா, ஐரோப்பிய ஒன்றியம், ஐக்கிய ராஜ;சியம், ஆஸ்திரேலியா எல்லா நாடுகளும் உதவின. இந்த நாடுகள் எல்லாவற்றிலும் புலிகள் தடை செய்யப்பட்டார்கள். ஒரு பயங்கரவாத இயக்கமாக புலிகள் வெளிநாடுகளில் தடைசெய்யப்பட்டார்கள். இவ்வாறு பல வழிகளிலும் அவர்கள் முடக்கப்பட்டார்கள். அந்தச் செயற்பாட்டின் காரணமாகத் தான் இலங்கை அரசு அவர்களைத் தோற்கடித்தது. தமிழீழ விடுதலைப் புலிகளை அழிப்பதற்காக பன்னாட்டுச் சமூகம் இலங்கை அரசுக்கு முழுமையான ஆதரவை வழங்கியது. இதை எல்லோரும் ஏற்றுக் கொள்ள வேண்டும் - என்றார். (5,8,105)

## பௌத்த...

சிங்க.ஹிட்லராக மாறி, இராணுவ ஆட்சியையேனும் ஏற்படுத்தி நாட்டை முன்னேற்றுவதற்கு கோத்தபாய ராஜபக்ச முன்வர வேண்டுமென அழைப்பு விடுத்துள்ள அஸ்கிரிய பீடத்தின் அனுநாயக்க தேரரான வென்டருவே ஸ்ரீ உபாலி தேரரின் கருத்தை வன்மையாகக் கண்டிக்கும் வகையிலேயே தலைமை அமைச்சராலேயே மேற்படி அறிவிப்பு விடுக்கப்பட்டுள்ளது.

மாத்தறையில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே தேரரின் அனுசாசன உரைக்கு தலைமை அமைச்சர் எதிர்ப்பை வெளியிட்டார்.

முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்சவின் 69 ஆவதுபிறந்தநாளையொட்டி மீரிஹானவில் உள்ள அவரது இல்லத்தில் கடந்த 20 ஆம் திகதி நடைபெற்றபோது அனுசாசன உரை நிகழ்த்திய அஸ்கிரிய பீடத்தின் அனுநாயக்க தேரரால் முன்வைக்கப்பட்ட ஆலோசனை அறிவுரையே தெற்கு அரசியலில் தற்போது பெரும் சர்ச்சையைக் கிளப்பிவிட்டுள்ளது.

தேரரின் உரைக்கு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவும் கடந்த 21ஆம் திகதி கடும் கண்டனத்தை வெளியிட்டிருந்தார்.

'எனக்கு முதுகெலும்பில்லை. இயலாத தலைவன் என்றெல்லாம் சிலர் விமர்சிக்கின்றனர். இந்த நாட்டுக்கு ஏகாதிபத்திய ஆட்சியாளரொருவர் தேவையென மகாநாயக்க தேரரொருவர் அறிவிப்பு விடுத்துள்ளார். இது தவறான அறிவிப்பாகும். நாடு சர்வாதிகாரத்தை நோக்கிப் பயணித்ததால்தான் 2015ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 8 ஆம் திகதி மக்கள் மாற்றமொன்றை ஏற்படுத்தினார்கள் என்பதை நினைவூட்ட விரும்புகின்றேன். இன்று எனக்கு சொல்லப்படும் கதைகள்தான் அன்று பண்டாரநாயக்கவுக்கு 'எதிராகவும் கூறப்பட்டன. இத்தகைய கதைகளைக் கூறித்தான் பண்டாரநாயக்கவை கொலைசெய்தனர். தற்போது அந்த செயற்பாடு மீண்டும் தலைதூக்கி வருகின்றது' என்று குறிப்பிட்டிருந்தார்.

இந்த நிலையிலேயே தலைமை அமைச்சர் ரணிலால் நேற்றுமுன்தினம் கண்டனம் வெளியிடப்பட்டுள்ளது. இது தொடர்பில் கருத்து வெளியிட்ட தலைமை அமைச்சர் மேலும் தெரிவித்ததாவது,

'ஹிட்லராகுமாறு எந்தவொரு சந்தர்ப்பத்திலும் புத்தபெருமான எமக்கு உபதேசம் வழங்கவில்லை. ஜேர்மனியிலும் பௌத்த தர்மத்தைப் போதிக்கும் நிறுவனங்கள் செயற்பட்டன. ஹிட்லர் ஆட்சிக்குவந்த பிறகு மேற்படி நிறுவனங்கள் கலைக்கப்பட்டன. அதில் இருந்தவர்கள் சிறைகளில் அடைக்கப்பட்டனர். இறுதியில் அவர்கள் குறித்து எந்தவொரு தகவலும் வெளியாகவில்லை.

ஹிட்லரையும், பௌத்த தர்மத்தையும் எவ்வாறு ஒன்றாக இணைத்துப் பயணிப்பது எனத் தெரியவில்லை. ஹிட்லர் வழி நடப்பது எமது தர்மத்துக்கு எதிரானது. எம்மிடையே அரசியல் ரீதியாக கருத்து வேறுபாடுகள் இருக்கலாம். அது தவறில்லை. எப்படியானவர்களுக்கு வாக்களிக்கவேண்டுமென்பது புத்ததர்மத்தில் உபதேசிக்கப்பட்டுள்ளது. ஆனால், இடி அமீன், ஹிட்லர் ஆகியோர் போன்று மாறுமாறு கூறமுடியாது. அது தவறானது. கண்டிக்கப்படவேண்டியது.

நான் பங்கேற்ற நிகழ்வொன்றின்போது இவ்வாறான கருத்து வெளியிடப்பட்டிருக்குமானால், ஊடகங்கள் என்மீது கடும் விமர்சனங்களை முன்வைத்திருக்கும். அந்த நிகழ்வில் வெளியிட்டப்பட்ட தகவல் செய்தியாகக் கூட வெளிவரவில்லை. மறைக்கப்பட்டது. ஆசிரியர் தலையங்கங்கள்கூட எழுதப்படவில்லை. இப்படியே இவ்வாறென்றால், ஹிட்லரொருவர் ஆட்சிக்கு வந்தால் என்ன நடக்கும்? என்றார் ரணில். (5)

## ஆக்கிரமிப்பை....

அடங்கிய நூல் வெளியீட்டு விழாவில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

தற்போது எமக்கு இருக்கும் அரண் பன்னாட்டுச் சட்டம். அது எம்மைப் பாதுகாக்கும் வலிமை கொண்டது. வல்லரசுகள் என்றும் வல்லரசுகளாக இருந்ததில்லை. பேரினவாதங்கள் எப்போதும் வலிமையாக இருந்ததில்லை. பேரினவாதம் மற்றும் வல்லரசுகளின் வலிமை குன்றும் என்பதை சரித்திரம் எடுத்துக் கூறுகின்றது.

வெளிநாட்டு ஆட்சியாளர்கள் வந்தார்கள் சென்றார்கள். அதேபோன்று சிங்களவர்கள் வந்துள்ளார்கள் அவர்களும் போவார்கள். பேரினவாதத்தின் வலிமை நிச்சயம் குன்றும்.

சிங்களவர்களின் அரசியலைப் பார்த்தால் அதனை நாம் விளங்கிக் கொள்ளமுடியும். இன்று அவர்களுக்கு இடையில் உட்பூசல் வளர்ந்து வருகின்றது. மகிந்த ஆட்சிக்கு வரக் கூடாது என்று கருதும் சிங்களவர்களும் உள்ளார்கள். சிங்களவர்கள் இரு பகுதியாக தாக்குதல் நடத்துவார்கள். இதன்போது சிங்களப் பேரினவாதம் அழிந்து போகும். சிங்களப் பேரினவாதிகள் இடையே ஊழல் அதிகமாக உள்ளது. அதனாலேயே அவர்கள் பலவீனப் படுத்தப்படுவார்கள்.

அவர்கள் பலவீனப்படுவார்கள் என்ற கருத்தை மட்டும் வைத்து நாம் இயங்க முடியாது. எமது உரிமைகளுக்கு நாம் பேராட வேண்டும்.

எமது பொருளாதாரத்தை நாமே ஏற்படுத்த வேண்டும். கல்வி முன்னேற்றத்தை திரும்பவும் பெற வேண்டும். ஒற்றுமையாக இருக்க வேண்டும். அதைப் பேணிக் காக்க வேண்டும். நமது ஒற்றுமையைத் தக்கவைத்து கொள்ள வேண்டும். அப்போது தான் இந்த ஆக்கிரமிப்பை எதிர்த்துப் போராடலாம். அல்லல் பட்டு இருக்கும் இந்தக் காலத்தில் துயர் துடைக்கும் ஒரு அரசனாக நீதியரசர் விக்னேஸ்வரன் விளங்குகிறார் - என்றார். (5)

## சிறுத்தைப்...

பொலிஸாரிடம் சரணடைந்துள்ளார். இவர்கள் இருவரையும் எதிர்வரும் 29ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சிறுத்தை கொல்லப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்களையும் விரைவில் கைது செய்யுமாறு பொலிஸாருக்கு நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

கிளிநொச்சி அம்பாள்குளம் பகுதியில் கடந்த 21ஆம் திகதி சிறுத்தை ஊருக்குள் புகுந்தது. 11பேரைக் கடித்துக் காயப்படுத்தியது. அதைப் பிடிப்பதற்கு வந்த வனவிலங்கு திணைக்கள அதிகாரிகளுக்கும் மக்களும் இடையில் முரண்பாடு ஏற்பட்டது. வனவிலங்குத் திணைக்கள அதிகாரிகள் வெளியேறினர். மக்களால் பிடிக்கப்பட்ட சிறுத்தை கொலை செய்யப்பட்டது. இந்தக் காணொலிகள் வெளியாகியிருந்தன. இந்தச் சம்பவத்துடன் தொடர்புடையோரைக் கைது செய்ய நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (5.6)

## தவறான...

நிலையில் வீட்டிலிருந்து மீட்கப்பட்டுள்ளார். இது தொடர்பில் ஒட்டுசுட்டான் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (5.ரி3)

## புலிகளின் காலத்தில்...

னார். அவர் மேலும் தெரிவித்ததாவது,

### விக்கியின் பழக்கம்

நீதியரசர் விக்னேஸ்வரன் முதலமைச்சரான பின்னர் பல நிகழ்வுகளில் ஆற்றிய உரைகள் தொகுக்கப்பட்டு ஒரு நூலாக வெளியிட்டிருக்கின்றார்கள். விக்னேஸ்வரன் காலையில் மூன்று மணிக்கு எழுந்து தன்னுடைய உரைகளை தயார் செய்வதாக இன்று பேசப்பட்டது. நீதியரசராக இருந்த காலத்தில் தன்னுடைய நீதிமன்றத் தீர்ப்புக்களை எழுதுவதற்காக எழுந்து தயார் செய்கின்ற பழக்கம் இன்னமும் தொடர்கின்றதாக நினைக்கின்றேன். அதுவொரு நல்ல பழக்கம். அவருடைய கருத்துக்கள் மிகவும் ஆழமான கருத்துக்கள். மிகவும் சிறப்பான கருத்துக்கள்.

### சுதந்திரத்துக்கு முன்னர்

சாதாரணமாக ஒரு நாடு சுதந்திரம் அடைவதற்கு முன்பாக அந்த நாட்டில் வாழ்கின்ற வேறுபட்ட மக்கள் மத்தியிலுள்ள அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தீர்வு காணப்பட்டு அந்தத் தீர்வுகள் ஒரு அரசியல் சாசனத்தில் உள்ளடக்கப்படும். நாடு சுதந்திரம் அடைவதற்கு முன்பதாக அது நடைபெறும். ஆனால் துரதிர்ஷ்டவசமாக இலங்கையைப் பொறுத்தவரையில் அவ்விதமான ஒரு விடயமும் நடைபெறவில்லை. அவ்வாறு நடைபெற்றிருந்தால் 1948ஆம் ஆண்டு நாடு சுதந்திரம் அடைந்த பொழுது தமிழர்களுடைய தேசிய இனப்பிரச்சினைக்கு ஒரு தீர்வு காணப்பட்டிருக்கும்.

டொனமூர் ஆணையாளர் முன்பாகக் கருத்துக்களைக் கூறிய கண்டிய தலைவர்கள் இந்த நாட்டில் கூட்டாட்சி அமைப்பு முறை ஏற்பட வேண்டுமென்று கூறியிருந்தார்கள். ஆனால் அதனை நாங்கள் ஆதரிக்கவில்லை. எங்களுக்குப் பூரண சுயாட்சி வேண்டுமென்று இளைஞர் கழகம் கேட்டார்கள்.

தன் பின் சோல்பரி ஆணைக்குழு வந்தது. அந்த நேரத்தில் நாங்கள் ஐம்பதுக்கு ஐம்பது கேட்டோம். அதாவது ஐம்பது வீதம் பெரும்பான்மையினருக்கும் ஐம்பது வீதம் சிறுபான்மையினருக்கும் என்று கேட்டோம். எமது உள்ளக சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் எமது இறையாண்மையின் அடிப்படையில் எமக்குப் பிராந்திய சுயாட்சி கிடைக்க வேண்டுமென்று நாங்கள் கேட்கவில்லை. பிராந்திய சுயாட்சியைக் கேட்டிருந்தால் இந்தப் பிரச்சினையை அப்போதே தீர்த்து இருக்கலாம்.

### குடியேற்றங்கள்

அதனால் அந்தப் பிரச்சினைகள் தீராது தொடர்கின்றன. இந்தியக் குடியுரிமை பறிக்கப்பட்டது. நூற்றுக் கணக்கான மக்கள் தங்களது சொந்த ஊர்களை இழந்தார்கள். பெரும்பான்மையின மக்கள் தமிழ் பேசும் மக்களின் இடங்களில் குடியேற்றப்பட்டார்கள். இந்தக் குடியேற்றங்களால் கிழக்கு மாகாணத்தின் தோற்றம் மாற்றமடைந்தது. அதே போல இன்றைக்கு வடமாகாணத்திலும் நடைபெறுகின்ற சூழலை நாங்கள் பார்க்கின்றோம்.' அது நிறுத்தப்பட வேண்டியதொரு செயற்பாடாகும்.

நாடு சுதந்திரம் அடைவதற்கு முன்பதாக நாங்கள் பிராந்திய சுயாட்சியுடன் பெரும்பான்மையாக வாழ்ந்து வந்த பிரதேசங்களில் கணிசமான அதிகாரப் பகிர்வின் மூலம் அதிகாரங்களைப் பெற்றிருந்தால் இவை எல்லாவற்றையும் தவிர்த்திருக்கலாம். அது இப்போது முடிந்த கதை. ஆனாலும் அதைப் பற்றிக் கதைக்கலாம். ஆனால் அதைப்பற்றிக் கதைப்பதால் எந்தவிதமான பிரயோசனமும் வரப் போவதில்லை.

### ஆளுநர் பதவி வேண்டாம்

இன்றைக்கு நாடு முழுவதும் மாகாண சபைகள் உருவாக்கப்பட்டுள்ளன. எல்லா மாகாணங்களும் கூடிய அதிகாரத்தைக் கேட்டிருக்கிறார்கள். காணி, சட்டம் ஒழுங்கு அதிகாரம் தங்களுக்கு தரப்பட வேண்டுமென்று கோரியிருக்கின்றார்கள். மத்தியினுடைய தலையீடுகள் இருக்கக் கூடாதென்றும் கேட்டிருக்கின்றார்கள். ஆளுநருடைய அதிகாரங்கள் கட்டுப்படுத்தப்பட வேண்டுமென்று கேட்டிருக்கின்றார்கள். தென் மாகாண முதலமைச்சர், ஆளுநர் பதவியே வேண்டாமென்றும் ஆளுநர் பதவி நீக்கப்பட வேண்டுமென்றும் கூறியிருக்கின்றார்.

நாங்கள் எவரையும் பகைக்க வேண்டிய அவசியமில்லை. எல்லோருடனும் நாங்கள் நட்புறவைப் பேண வேண்டும். எங்கள் நியாயத்தை விளக்க வேண்டும். நீதியை விளக்க வேண்டும். ஏனைய நாடுகளில் பல்வேறு இனங்கள் பல்வேறு மதங்களைச் சார்ந்த பல்வேறு கலாசாரங்களைச் சார்ந்த மக்கள் வாழ்கின்ற பிரதேசங்களில் எவ்விதமான ஆட்சி முறைகள் பின்பற்றப்படுகின்ற என்பதை நாங்கள் விளக்க வேண்டும். அதனை தென்னிலங்கை மக்கள் அறிய வேண்டும். இன்றைக்கு தென்னிலங்கை மக்களும் அதனை அறிந்து கொண்டு வருகின்றார்கள்.

### அடிப்படைகளை விட்டுக்கொடுக்க முடியாது

புதிய அரசமைப்பை உருவாக்குவதற்கான முயற்சிகள் நடைபெற்று வருகின்றன. அதனை நாங்கள் முன்னெடுத்து ஒரு நிரந்தரமான அரசியல் தீர்வை ஏற்படுத்துவதற்கு வழி இருக்குமாக இருந்தால் அந்தச் சந்தர்ப்பத்தை இழக்கக் கூடாது. அந்தச் சந்தர்ப்பத்தை நாங்கள் முழுமையாகப் பயன்படுத்த வேண்டும். அந்தக் கருமத்தில் நாங்கள் முழுமையாக ஈடுபட வேண்டும். எங்கள் பங்களிப்பையும் முழுமையாகச் செலுத்தி அதில் நாங்கள் ஈடுபட வேண்டும்.

அடிப்படை விடயங்களை நாங்கள் விட்டுக் கொடுக்க முடியாது. அவ்வாறு விட்டுக் கொடுக்க முடியாத விடயங்களும் இருக்கின்றன. ஆனால் நாங்கள் ஈடுபட்டு அந்தக் கருமத்தை முன்னெடுத்து எமது மக்களுக்கு போதிய பாதுகாப்பை அவர்களது உரிமையை உரித்தை அங்கீகரித்துக் காணக்கூடியதொரு வழி இருக்குமாக இருந்தால் அந்தச் சந்தர்ப்பத்தை நாங்கள் இழக்கக் கூடாது. அதனை நாங்கள் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும்.

### பன்னாட்டுச் சமூகத்துக்கான கடமை

இலங்கையில் இனப்பிரச்சினைக்குத் தீர்வைக் காணுவதில் பன்னாட்டுச் சமூகத்துக்கு தார்மீகக் கடமை உள்ளது. 1983 ஆம் ஆண்டு அம்மையார் இந்திரா காந்தியின் தலையீடு காரணமாகத் தான் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன. ஆயினும் அவர் கொலை செய்யப்பட்டார். அவரைத் தொடர்ந்து அவரது மகன் ராஜீவ்காந்தி இந்தியாவின் தலைமை அமைச்சரானார். அவரெடுத்த முயற்சியின் காரணமாகத் தான் 13ஆவது அரசமைப்புத் திருத்தம் முன்னெடுக்கப்பட்டு மாவட்டச் சபைகளைப் பெற முடியாமல் இருந்த எமக்கு மாகாண சபைகள் வழங்கப்பட்டன. வடகிழக்கு இணைக்கப்பட்டு ஒரு மாகாண சபையாக பல்வேறு அதிகாரங்கள் வழங்கப்பட்டு ஒரு முதலமைச்சர், அமைச்சர் சபை உருவாக்கப்பட்டு ஆளுநர் பதவி உருவாக்கப்பட்டது. அதனூடாக பலதரப்பட்ட கருமங்கள் நடைபெற்றன.

13ஆவது திருத்தத்தை நாங்கள் ஒரு தீர்வாக ஏற்றுக் கொள்ளவில்லை. அண்ணண் அமிர்தலிங்கம், சிவசிதம்பரம், நான் உள்பட மூவரும் கையொப்பமிட்டு ராஜீவ் காந்திக்கு கடிதமொன்றை அனுப்பியிருந்தோம். அந்தக் கடிதத்தில் 13 ஆவது திருத்தம் ஒரு தீர்வாக அமையவில்லை என்பதை தெளிவாகக் குறிப்பிட்டிருந்தோம். ஒருநிரந்தரமான தீர்வை பெற்றுக் கொள்வதற்குத் தொடர்ந்தும் நாங்கள் பயணிப்பதாகவும் குறிப்பிட்டிருந்தோம்.

### நியாயமான தீர்வு

தமிழீழ விடுதலைப் புலிகளை அழிப்பதற்காக பன்னாட்டுச் சமூகம் இலங்கை அரசுக்கு முழுமையான ஆதரவை வழங்கியது. இதை எல்லோரும் ஏற்றுக் கொள்ள வேண்டும். இந்த அடிப்படையில் நாங்கள் ஒரு நியாயமான தீர்வை ஏற்படுத்துவோம் என்று இலங்கை அரசு பன்னாட்டுச் சமூகத்துக்கு வாக்குறுதியைக் கொடுத்தது. அது மாத்திரமல்ல தமிழீழ விடுதலைப் புலிகள் செயற்பட்ட காலத்தில் அரசியல் தீர்வு சம்பந்தமாக இலங்கை அரசு பல்வேறு முன்மொழிவுகளை முன்வைத்திருந்தது.

ஆனால் இன்றைக்கு அவர்கள் அதிலிருந்து பின்வாங்குகின்றார்கள். இதைப் பன்னாட்டுச் சமூகம் புரிந்து கொள்ள வேண்டும்.

இலங்கையில் வாழ்கின்ற தமிழ் மக்களுடைய பிரச்சினைக்கு ஒரு நியாயமான நிரந்தரமான அரசியல் தீர்வைக் காண்பதற்குரிய பங்களிப்பைச் செய்வதற்கு தமக்கொரு தார்மீகக் கடமை இருக்கிறதென்பதை பன்னாட்டுச்சமூகம் புரிந்து கொள்ள வேண்டும். இதில் அவர்கள் தவற முடியாது. அவ்வாறு இதில் அவர்கள் தவறினால் அவர்களுடைய செயற்பாடு பன்னாட்டு ரீதியாக அர்த்தமற்றதாகிப் போய்விடும் - என்றார். (5,8,105)



இலங்கைப் பாடசாலைகள் துடுப்பாட்டச் சங்கத்தால் நடத்தப்பட்ட 2017 / 2018 பருவகாலத்துக்கான டயலொக் - சண்டே ரைம்ஸ் விருது வழங்கும் நிகழ்வு பண்டர நாயக்க ஞாபகார்த்த பன்னாட்டு மாநாட்டு மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றது. இதில் 19 வயதுப்பிரிவில் வடக்கு மாகாணத்தில் சிறந்த அணியாக யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரி அணி தெரிவானது. (ம-23)

# தேசியமட்ட பளுதூக்கல் ஆசிகா மூன்று சாதனை





யாழ்ப்பாணம், ஜீன் 25
பொலனறுவையில்; நடைபெற்றுவரும் தேசியமட்ட பளுதூக்கல் போட்டியில் வடமாகாணத்தைப் பிரதிநிதித்துவம் செய்த வி. ஆசிகா மூன்று சாதனைகளைப் படைத்தார்.

44ஆவது தேசியமட்ட பளுதூக்கல் போட்டிகள் தற்போது நடைபெற்று வருகின்றன. கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற பெண்களுக்கான பளுதூக்கல் போட்டியில் வடமாகாணத்தைப் பிரதிநிதித்துவம் செய்த ஆசிகா 63 கிலோ எடைப்பிரிவில் சினெச் முறைப் போட்டியில் 76 கிலோ பளுவையும், கிளீக் அன்ட் ஜக் முறையில் 97 கிலோ பளுவையும் ஒட்டுமொத்தமாக 173 கிலோ பளுவையும் தூக்கி தங்கப்பதக்கம் வென்றார்.

இந்த மூன்றும் அவரால் படைக்கப்பட்ட புதிய சாதனைகளாக அமைந்துள்ளன. (ம-23)



## பளுதூக்கலில் வடக்கு வென்றது வெண்கலம்

யாழ்ப்பாணம், ஜீன் 25
பொலனறுவையில்; நடைபெற்றுவரும்தேசியமட்ட பளுதூக்கல்தொடரில் பெண்கள் பிரிவில் வடமாகாணத்துக்கு வெண்கலப்பதக்கமொன்று கிடைத்தது.

வடமாகாண வீராங்கனை பி.நிலோஜினி சினேக் முறையில் 53 கிலோ எடையையும், கிளீன் அன்ட் ஜக் முறையில் 67 கிலோ எடையையும் ஒட்டுமொத்தமாக 120 கிலோ எடையைத் தூக்கியே வெண்கலப் பதக்கம் வென்றார். (ம-23)



## மேரி லக்சிகாவுக்கு வெண்கலப்பதக்கம்

யாழ்ப்பாணம், ஜீன் 25
பொலனறுவையில்நடைபெற்றுவரும் தேசியமட்ட பளுதூக்கல் தொடரில் பெண்கள் பிரிவில் வடமாகாண வீராங்கனை மேரி லக்சிகா வெண்கலப்பதக்கம் வென்றார்.

மேரி லக்சிகா சினேக் முறையில் 44 கிலோ எடையையும், கிளீன் அன்ட் ஜக் முறையில் 56 கிலோ எடையையும் ஒட்டுமொத்தமாக 100 கிலோ எடையையும் தூக்கியே வெண்கலம் வென்றார். (ம-23)

## கிளிநொச்சி மத்திய மகா வித்தி. 8 இலக்குகளால் அதிரடி வெற்றி

யாழ்ப்பாணம், ஜீன் 25
இலங்கைப் பாடசாலைகள் துடுப்பாட்டச் சங்கத்தால் நடத்தப்படும் 17 வயதுக்குட்பட்ட மூன்றாம் பிரிவு அணிகளுக்கு இடையிலான துடுப்பாட்டத் தொடரில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஆட்டமொன்றில் கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலய அணி 8 இலக்குகளால் வெற்றிபெற்றது.

அடம்பன் மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலய அணியை எதிர்த்து அடம்பன் மத்திய மகா வித்தியாலய அணி மோதியது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலய அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய அடம்பன் மத்திய மகா வித்தியாலய அணி 36 பந்துப்பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 114 ஓட்டங்களைப் பெற்றது.

பந்துவீச்சில் மதியழகன் 5 இலக்குகளையும், யுவேந்திரன், விதுசன் இருவரும் தலா 2 இலக்குகளையும் வீழ்த்தினர். 115 ஓட்டங்களை இலக்காகக் கொண்டு பதிலுக்குக் களமிறங்கிய கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலய அணி 22.3 பந்துப்பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து வெற்றிபெற்றது. கனோயன் ஆட்டமிழக்காமல் 35 ஓட்டங்களைப் பெற்றார். (ம-23)

## டோனியால் அணியில் இடம் கிடைக்கவில்லை

*பார்திவ் சொல்கிறார்*

''இந்திய அணியில் எனக்கு இடம் கிடைக்காமல் போனமைக்கு டோனிதான் காரணம்" என்று தெரிவித்தார் இந்திய அணியின் இலக்குக் காப்பாளர் பார்திவ் பட்டேல்.

இந்திய அணியில் ஒரு காலத்தில் இலக்குக் காப்பாளர்களுக்குப் பஞ்சமில்லாமல் இருந்தது. குறிப்பாக தீப்தாஸ் குப்தா, சபா கரீம் அஜய் ரத்ரா, பார்தீப் பட்டேல், விர்திமான் சகா டினேஸ் கார்த்திக் எனப் பெரிய பட்டாளமாக இருந்தனர். ஆனால், இவர்கள் யாரும் தங்களுக்குக் கிடைத்த வாய்ப்பைத் தக்கவைத்துக்கொள்ளத் தவறியதால், டோனி எனும் பெரும் புயல் இவர்களை வாரிச்சுருட்டி வீசிச் சென்றது.

டோனி தானாக ஓய்வெடுக்கும் வரையில் வேறு எந்த இலக்குக் காப்பாளர்களுக்கும் அணியில் இடமில்லை என்கிற நிலைதான் தற்போதுள்ளது. இந்தப் பின்னணியில் அணியில் தனக்கு இடம் கிடைக்காமல் போனமைக்கு டோனிதான் காரணம் என்று தெரிவித்தார் பார்திவ் பட்டேல்.

"கிரிக்கெட்டில் டோனி மிகச்சிறந்த வீரர், ஜாம்பவான். ஏராளமானோர் என்னிடம் கூறியது என்னவென்றால், நீ பிறந்த ஆண்டு சரியில்லை, நீ சில ஆண்டுகள் முன்கூட்டியோ அல்லது பல ஆண்டுகளுக்குப் பின்போ பிறந்திருக்க வேண்டும் என்றனர். நீ தவறான ஆண்டில் பிறந்துவிட்டாய் என்றனர். ஆனால், நான் என்ன நினைக்கிறேன் என்றால், டோனி கிரிக்கெட் விளையாடத் தொடங்கிய காலத்துக்கு முன்பே நாங்கள் எல்லாம் கிரிக்கெட் விளையாடி பயிற்சி எடுக்கத் தொடங்கிவிட்டோம். நாங்கள் மட்டும் மோசமாக விளையாடமல் இருந்திருந்தால், இன்று டோனியால் அணியில் இடம்பிடித்திருக்க முடியாது, முதலிடத்தைப் பிடித்திருக்க முடியாது.

ஆதலால், சிலர் நான் தவறான ஆண்டில் பிறந்துவிட்டேன் எனக் கூறுவது எல்லாம் என்னை ஆறுதல்படுத்திக்கொள்ள உதவும். என்னை வசதியாகவும், கவலைப்படாமல் வைத்திருக்க உதவும். ஆனால், உண்மையில் ஆழ்மனதில் இருக்கும் உண்மை என்னவென்றால், டோனி அளவுக்கு நாங்கள் சிறப்பாக விளையாடவில்லை என்பதுதான் நிதர்சனம். டோனியின் வெற்றிக்கு நாங்கள் தான் காரணம். நாங்கள் இல்லாமல் டோனியின் வெற்றி இல்லை" என்று பார்திவ் பட்டேல் மேலும் தெரிவித்தார். (ம)

# உதயசூரியன், சித்தி விநாயகர் வென்றன

யாழ்ப்பாணம், ஜீன் 25
சண்டிலிப்பாய் வசந்தசிறி விளையாட்டுக் கழகம் நடத்தும் தாச்சித் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டங்களில் உதயசூரியன், சித்தி விநாயகர் அணிகள் வெற்றிபெற்றன.

வசந்தசிறி விளையாட்டுக் கழக மைதானத்தில் இரவு 7.15 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் உதயசூரியன் விநாயகர் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சாந்தை விநாயகர் விளையாட்டுக் கழக அணி மோதிய ஆட்டத்தில் 9:5 என்ற புள்ளிகளின் அடிப்படையில் உதயசூரியன் விளையாட்டுக் கழக அணி வெற்றிபெற்றது.

தொடர்ந்து இரவு 8 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் புவனேஸ்வரி அம்பாள் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சித்தி விநாயகர் விளையாட்டுக் கழக பி அணி மோதிய ஆட்டத்தில் 8:7 என்ற புள்ளிகளின் அடிப்படையில் சித்தி விநாயகர் விளையாட்டுக் கழக அணி வெற்றிபெற்றது. (ம-23)

# குரூஸின் ‘திகைப்புக்’ கோலால் சுவீடனை வீழ்த்தியது ஜேர்மனி





உலகக்கிண்ணக் கால்பந்துத் தொடரில் நேற்றுமுன்தினம் நள்ளிரவு நடைபெற்ற ஆட்டத்தில் ரொனி குரூஸின் இறுதி நிமிடத்திரில் கோலால் சுவீடனை வீழ்த்தியது ஜேர்மனி அணி.

ஜேர்மனி அணி தனது முதலாவது லீக் ஆட்டத்தில் மெக்சிக்கோவிடம் தோல்வியடைந்தது. இதனால் சுவீடனுக்கு எதிரான இந்த ஆட்டத்தில் வெற்றிபெற வேண்டும் என்ற கட்டாயம் அந்த அணிக்கு இருந்தது. எனினும் ஆட்டத்தின் ஆரம்பம் சுவீடனுக்குச் சாதகமாகவே அமைந்தது. ஆட்டத்தின் 32ஆவது நிமிடத்தில் டொய்வன் சுவீடனின் முதலாவது கோலைப் பதிவுசெய்தார். முதல் பாதியின் முடிவில் 1:0 என்ற கோல் கணக்கில் சுவீடன் முன்னிலை பெற்றது.

சுவீடன் முன்னிலை பெற்றவுடனேயே வர்ணனையாளர்கள் கடைசியாக ஜேர்மனி முதல் சுற்றில் வெளியேறியது எப்போது (1938) என்று ஜெர்மனியின் தோல்வி வரலாற்றை இரங்கற்பா பாடத்தொடங்கினர். 80 ஆண்டுகள் ஓர் அணி முதல் சுற்றுடன் வெளியேறவில்லை என்பதே அந்த அணியின் கால்பந்து பாரம்பரியத்தை அறிவுறுத்துகிறது. ஆனால் சம்பியன் அணிகள் தோற்க வேண்டும், சிறந்த அணிகள் தோற்க வேண்டும் என்பது பொதுவாக சிலருக்கு ஏற்படும் வக்கிர எண்ணமாகும். இந்த ஆட்டத்திலும் அந்த எண்ணவோட்டங்கள் இல்லாமலில்லை.

ஆனால் இரண்டாம் பாதியில் தன் மீதான விமர்சனங்களை அப்படியே மாற்றி தான் நடப்புச் சம்பியன் என்பதைச் சொல்லாமல் சொல்லியது ஜேர்மனி. 48ஆவது நிமிடத்தில் மார்கோ கோலொன்றைப் பதிவுசெய்து கோல் கணக்கை 1:1 என்றாக்கினார். நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களின் நிறைவில் இரண்டு அணிகளும் தலா ஒவ்வொரு கோலையே பெற்றிருந்தன. மேலதிகமாக வழங்கப்பட்ட ஐந்தாவது நிமிடத்தில் ரொனி குரூஸ் மின்னல் வேகத்தில் அனைவரும் ‘திகைக்கக்’கூடிய வகையில் கோலொன்றைப் பதிவுசெய்தார். இதையடுத்து 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது ஜேர்மனி.

(ம)

## வலைப்பந்தாட்ட இறுதிகள்

யாழ்ப்பாணம், ஜீன் 25

வடமாகாணக் கல்வித் திணைக்களம் நடத்தும் வடமாகாணப் பாடசாலைகளுக்கு இடையிலான பெண்களுக்கான வலைப்பந்தாட்டத் தொடரின் இறுதியாட்டங்கள் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி மைதானத்தில் இன்று நடைபெறவுள்ளன.

20 வயதுக்கு உட்பட்ட பிரிவின் இறுதி ஆட்டத்தில் சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரி அணியை எதிர்த்து சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி அணியும் மூன்றாமிடத்துக்கான ஆட்டத்தில் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை அணியை எதிர்த்து யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி. அணியும் மோதவுள்ளன.

18 வயதுக்கு உட்பட்டோருக்கான இறுதியாட்டத்தில் தெல்லிப்பளை யூனியன் கல்லூரி அணியை எதிர்த்து அராலி சரஸ்வதி மகா வித்தியாலய அணியும் மூன்றாமிடத்துக்கான ஆட்டத்தில் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை அணியை எதிர்த்து வட இந்து மகளிர் கல்லூரி அணியும் மோதவுள்ளன.

16 வயதுக்கு உட்பட்டோருக்கான இறுதியாட்டத்தில் அராலி சரஸ்வதி மகா வித்தியாலய அணியை எதிர்த்து தெல்லிப்பழை யூனியன் கல்லூரி அணியும் மூன்றாமிடத்துக்கான ஆட்டத்தில் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை அணியை எதிர்த்து வட இந்து மகளிர் கல்லூரி அணியும் மோதவுள்ளன.

(ம-422)
















## இங்கிலாந்துக்கு எதிராகச் சாதிப்பார் விராட் கோக்லி

### கங்குலி நம்பிக்கை

இந்திய அணி இங்கிலாந்துக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ளது. இந்த இரண்டு அணிகளுக்கும் இடையில் நீண்ட தொடர் நடைபெறவுள்ளது. இந்தத் தொடரில் கோக்லி பெரியளவில் சாதிப்பார் என்று தெரிவித்தார் இந்திய அணியின் முன்னாள் தலைவர் கங்குலி.

விராட் கோக்லி மிகச்சிறந்த வீரர். இந்த முறை இங்கிலாந்து தொடரில் அவர் சிறப்பாக விளையாடுவார். இங்கிலாந்து தொடருக்கு முன்பாக, விராட் கோக்லி கவுண்டி தொடரில் விளையாடாதது என்னைப் பொறுத்தவரை மகிழ்ச்சிதான். இங்கிலாந்துத் தொடரை மிகவும் எதிர்பார்த்துக் காத்திருந்தார் விராட் கோக்லி. ஏனென்றால், கடந்த இங்கிலாந்துத் தொடரின் போது, விராட் கோக்லி சிறப்பாகச் செயல்படவில்லை. இதனால் பதற்றத்துடன், பயத்துடன் காணப்பட்டார். ஆனால், இந்த முறை சிறப்பாகச் செயல்படுவார் என்று நம்புகிறேன். அணித்தலைவர் விராட் கோக்லி மட்டுமல்ல, இந்திய அணி வீரர்கள் அனைவரும் இங்கிலாந்து டெஸ்ட் தொடரில் சிறப்பாகச் செயல்படுவார்கள். இந்திய அணிக்கு வெற்றி வாய்ப்பு பிரகாசமாக இருக்கிறது. அதே நேரம் இங்கிலாந்து அணியினர் தற்போது உள்ள திறனையும் இந்திய வீரர்கள் கவனத்தில் கொள்ளவேண்டும். அவர்கள் மட்டில் கடும் எச்சரிக்கை வேண்டும். இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் ஆட்டங்கள் மட்டுமே தற்போது பெரியளவில் பேசுபொருளாக உள்ளன. மட்டுப்படுத்தப்பட்ட ஆட்டங்களில் இருந்து இந்திய அணியினரின் கவனம் சிதறக்கூடாது' என்று கங்குலி மேலும் தெரிவித்தார்.

(ம)

# வட இந்திய காசியாத்திரை

**ஆரம்பம் 04.08.2018 யாத்திரீகர் 15 நாள்கள் 16**

**தரிசிக்கும் இடங்கள் :-** டெல்லி : நாராயணா் கோயில். இந்திராகாந்தி வீடு. நேரு வீடு. இந்திராகாந்தி சுடப்பட்ட இடம். ஹரித்துவாா் (7 இடங்கள்) ரிஷிகேஷ் (7 இடங்கள்) கங்கா பூசை (ஆா்த்தி) குருச்சேத்திரம் பாண்டவா்கள் யுத்தம் புரிந்த இடங்கள் பிரம்ம தீா்த்தம் நீராடல் கங்கைகளில் நீராடல். காசியில் 15 இடங்கள். கங்கா பூசை. கயா. புத்தகயா. அலகாபாத். (கங்கா. யமுனா். சரஸ்வதி) திருவேணிசங்கமம். சீத்தாமடி. ஆக்ரா (தாஜ் மஹால்). மதுரா கிருஸ்ண ஜென்மபூமி. பிரேமந்திா். பிரமாண்டமான கிருஸ்ணா் கோயில். செங்கோட்டை. இராமேஸ்வரம். உத்திரகோசமங்கை. திருப்புலானி. நவபாஷானம். பஞ்சமுக ஆஞ்சநேயா். அப்துல்கலாம் மணி மண்டபம். மதுரை மீனாட்சி அம்பாளையும் தரிசிக்கலாம். மற்றும் வேறு பல இடங்களும் காணலாம்.

**ஒரு நாள் சென்னையில் சொப்பிங்**

**பெற்றுக்கொள்ளும் ரூபாய்க்கு எமது சேவைகள்**

4 விமான பயண டிக்கட். மூன்று வேளை மடப்பள்ளி ஆள்கள் சமைத்த உணவு. காப்பி. ரீ. குடிநீர் 2 பேருக்கு. வெஸ்ரன்கொமட். குளியலறை. இணைந்த அறைகள். பயணம் முழுவதும் A/C வாகன வசதி. யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு வரவும் திரும்ப யாழ். செல்லவும் வாகன வசதி ஒழுங்குகள் செய்து தரப்படும். பதிவு செய்யவும்.

**"சென்றவர்களை கேளுங்கள் சென்று வரலாம் வாருங்கள்"**

கலாநிதி T.ஸ்ரீரெங்கநாதன் மகன் - ராஜன்
59, 3/6, செட்டியார்தெரு, கொழும்பு -11,
T.P - 077 768 0102, 077 736 2154
E.mail : sriranganathan2601@gmail.com
sriranganathan1944@gmail.com
Facebook : Sridevisriranganathan.thuraiappa

(in/6922)
(13.17)




# வீழ்ந்தார் பெடரர்

ஜேர்மனியின் ஹாலே நகரில் நடைபெற்ற 'ரென்னிஸ் தொடரில் ஆண்கள் ஒற்றையர் பிரிவில் பெடரரை வீழ்த்தி கிண்ணம் வென்றார் கோரிச்.

இந்த இறுதியாட்டம் நேற்று நடைபெற்றது. சுவிற்சர்லாந்து வீரர் பெடரரை எதிர்த்து குரோசிய வீரர் கோரிச் மோதினார். மூன்று செற்களைக் கொண்டதாக ஆட்டம் அமைந்தது.

முதல் செற்றை 7:6 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றினார் கோரிச். இரண்டாவது செற்றை பெடரர் 6:3 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றினார். முதலிரு செற்களின் நிறைவில் இருவரும் தலா ஒவ்வொரு செற்களில் வெற்றிபெற்றதை அடுத்து மூன்றாவது செற்றில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. அந்த செற் 6:2 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கோரிச்சின் வசமாக முடிவில் அவர் 6:2 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்று சம்பியனானார். (ம)

# யுவசக்தி அசத்தல்

யாழ்ப்பாணம், ஜீன் 25

சண்டிலிப்பாய் வசந்தசிறி விளையாட்டுக் கழகம் நடத்தும் தாச்சித் தொடரின் ஆட்டங்கள் குறித்த விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டங்களில் யுவசக்தி, சித்திவிநாயகர் அணிகள் வெற்றி பெற்றன.

இரவு 7.15 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் சித்திவிநாயகர்விளையாட்டுக்கழகஅணியை எதிர்த்து கைதடி குமரநகர் விளையாட்டுக் கழக அணி மோதியது. இந்த ஆட்டத்தில் 7:3 என்ற புள்ளிகளின் அடிப்படையில் சித்தி விநாயகர் அணி வெற்றிபெற்றது.

தொடர்ந்து இரவு 8 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் யுவசக்தி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சிவசக்தி விளையாட்டுக் கழக அணி மோதியது. 10:5 என்ற புள்ளிகளின் அடிப்படையில் யுவ சக்தி அணி வெற்றி பெற்றது. (ம-23)


## முன்பள்ளி ஆசிரியர் தேவை

பெரியவிளான் இளவாலையில் இயங்கும் பிரபல முன்பள்ளிக்கு அனுபவமுள்ள ஆசிரியர்கள் தேவை. சம்பளம் நேரில் பேசி தீர்மானிக்கப்படும்.

075 891 8575/ 077 138 6139

## பதவி வெற்றிடம்

**சந்தைப்படுத்தல் முகாமையாளர் (Marketing Manager)**
- சநதைப்படுத்தல் துறையில் குறைந்தது 05 வருட அனுபவம்.
- கணனி தொடர்பான தொழில்நுட்ப மற்றும் சந்தைப்படுத்தல் அறிவு.

**கணக்காளர் (Accountant)**
- Bcom/ HNDA அல்லது பொருத்தமான பட்டதாரிகள் கணணி அறிவு(Accounting Package) உடையவராக இருத்தல் வேண்டும்.

**காட்சியறை முகாமையாளர் (ShowRoom Manager)**
- கணனி தொடர்பான தொழில்நுட்பஅறிவு மற்றும் முகாமைத்துவ முன் அனுபவம்.

**தொழில்நுட்பவியலாளர் 1 (Technician 1)**
- கணனி தொழில்நுட்பஅறிவு உடையவராகவும் குறைந்தது 3 - 5 வருட முன் அனுபவம் உடையவராகவும் இருத்தல் வேண்டும்.

**தொழில்நுட்பவியலாளர் 2 (Technician 2)**
- பிறின்டர். போட்டோகொப்பி திருத்துவதில் ஆர்வமுடையவராகவும் இத்துறையில் தரமான முன் அனுபவம் விரும்பத்தக்கது.

**கிராபிக் டிசைனர் (Graphic Designer)**
- தங்களால் செய்யப்பட்ட மாதிரிகள் சமர்ப்பிக்கப்படவேண்டும். சிறந்த அனுபவம்.

**பயிலுனர்கள் (Trainees)**
- கண்காணிப்பு கமரா (CCTV).கணனி. பிறிண்டர். போட்டோகொப்பி இயந்திரம் போன்றவற்றை திருத்துவதற்கு ஆர்வம் உள்ளவராய் இருத்தல் வேண்டும்.
- யாழ்ப்பாணம், கிளிநொச்சி ஆகிய இருமாவட்டங்களிலும் பணிபுரியக்கூடியவராய் இருத்தல் வேண்டும்.

**முக்கிய குறிப்பு : விண்ணப்பதாரர்கள் யாவரும் சாரதி அனுமதிப்பத்திரம் உடையவராகவும், முன்அனுபவம் உடையவராகவும் இருத்தல் வேண்டும். பொருத்தமான கவர்ச்சிகரமான வேதனம், தரகுபணம் மற்றும் EPF, ETF வழங்கப்படும். கணக்காளர், காட்சியறை முகாமையாளர் பதவிக்கு ஆண், பெண் இருபாலரும் விண்ணப்பிக்கலாம்.**

மேற்படி பதவிகளுக்கு பொருத்தமானவர்கள் 2018.07.01 ற்கு முன்னராக தங்களது சுய விபரக்கோவையை பின்வரும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

NALIN Information Technologies(Pvt)Ltd.
NALIN INFORMATION TECHNOLOGIES (PVT) LTD.
195/2 Parameswara Junction, Palaly Road, Jaffna.
021 222 1121 | 0777 66 79 75

## CNR உள்நாடு, வெளிநாடுகளுக்கான தபால், பொதிகள் விநியோக சேவை

- அதிவேக மற்றும் சிக்கன பொதிகள் சேவை
- நிர்ணயிக்கப்பட்ட குறைந்த கட்டணம்
- வீடு, அலுவலகங்களில் இருந்தவாறு அனுப்பும் வசதி
- அனுப்பும் பொதிகளுக்கான காப்புறுதி உத்தரவாதம்
- கடல் ஆகாய மார்க்க பெரிய சரக்குப் பரிமாற்ற சேவை



CNR World Wide Express
இல.401. மணிக்கூண்டு கோபுர வீதி, (பெருமாள் கோவில் அருகாமை) யாழ்ப்பாணம்.
தொடர்புகளுக்கு: 021 5674145, 077 2931062, 077 6655413

## இணை ஒப்பந்த அடிப்படையில் ஆட்கள் தேவை

(Please Contact Immediately)

**கண்காணிப்பு கமரா (CCTV Installation) பொருத்துவதற்கும், வயரிங் வேலை (Wiring) செய்வதற்கும் ஒப்பந்த அடிப்படையில் (Contract) ஆட்கள் தேவை**

NALIN Information Technologies(Pvt)Ltd.
NALIN INFORMATION TECHNOLOGIES (PVT) LTD.
195/2 Parameswara Junction, Palaly Road, Jaffna.
021 222 1121 | 0777 66 79 75

## 2019 A/L வெப்பவியல்

By-M.கருணாநிதி B.Sc
Sat, Sun - 10.00 AM
ஆரம்பம்
27.06.2018 புதன் 7.30 AM
The Science Corner Jaffna.

## விரைவு பொதிகள் சேவை

விசேட விலை குறைப்பு
UK- 550 /-Kg
கனடா-900 /-Kg
ஜேர்மனி-700 /-Kg
நெதர்லாந்து-700 /-Kg

- யாழ்ப்பாணம் • கிளிநொச்சி
- சாவகச்சேரி • மானிப்பாய்
- நெல்லியடி • பருத்தித்துறை
- வல்வெட்டித்துறை

0768226240
V2 TRAVELS

## வெளிநாடுகளுக்கான துரித தபால்கள், பொதிகள் சேவை

- அதி விரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை
- கடலுணவு, இறைச்சி, எண்ணெய் வகை, மருந்துப் பொருள்கள், பழ வகைகள், பால் மா வகைகள் என்பவற்றையும் அனுப்பி கொள்ள முடியும்.
- நியாயமான கட்டணத்தில் நிறைந்த சேவை.

**20 வருடகால அசைக்க முடியாத நம்பிக்கையை வென்ற நாம்**

அருள் குளோபல் எக்ஸ்பிறஸ்

1, பிறவுண் வீதி, நாவலர் சந்தி, யாழ்ப்பாணம்.
021 222 6113


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 25.06.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.